# விஷ்ணுவின் 7 ரகசியங்கள்

இந்து மூவர் வரிசையிலிருந்து



Https://T.Me/eNoolagam

## தேவ்தத் பட்டநாயக்

தமிழில் : சாருகேசி

# விஷ்ணுவின் 7 ரகசியங்கள்

## இந்து மூவர் வரிசையிலிருந்து



Https://T.Me/eNoolagam

## தேவ்தத் பட்டநாயக்

தமிழில் : சாருகேசி

மிஸ்டிக்ஸ்ரைட்

MYSTICSWRITE
Content Developers & Editors

# விஷ்ணுவின் 7 ரகசியங்கள்
## இந்து மூவர் வரிசையிலிருந்து

தேவ்தத் பட்நாயக் படித்தது டாக்டருக்கு. தொழிலோ நிர்வாக இயலில் தலைமைத் தகுதிக்கு ஆலோசகர். ஆசையோ புராண இதிகாசங்களை சுவாரசியமாக எழுதுவதில். கதைகளையும், சமிக்ஞைகள்-சடங்குகளையும் இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமாகக் கதைகளாக வழங்குவதில் வல்லவர். இது வரை பதினைந்து நூல்கள் எழுதியிருக்கிறார். அவற்றில் முக்கியமானவை 7-சீக்ரட்ஸ் ஆஃப் ஹிந்து காலன்டர் ஆர்ட் (வெஸ்ட்லேன்ட்), மித்=மித்யா, ஹான்ட்புக் ஆஃப் ஹிந்து மைதாலஜி (பெங்குவின்), புக் ஆஃப் ராம் (பெங்குவின்), ஜெயாசித்திரங்களுடன் மகாபாரதம் (பெங்குவின்).

மேலும் விவரங்களுக்கு வலைத்தளம் தேவ்தத் டாட் காம் பார்க்கவும்.

# விஷ்ணுவின் 7 ரகசியங்கள்

## இந்து மூவர் வரிசையிலிருந்து



# தேவ்தத் பட்டநாயக்

தமிழில் : சாருகேசி

மிஸ்டிக்ஸ்ரைட்

MYSTICSWRITE
Content Developers & Editors

**Westland Publications Ltd**
61 Silverline Building, 2nd Floor, Alapakkam Main Road, Maduravoyal, Chennai 600095.
93, 1st Floor, Sham Lal Road, New Delhi 110002.

First Published in English as *7 Secrets of vishnu* by Westland Ltd 2011
First Published in Tamil as *Vishnuvin 7 Ragasiyangal* by Westland Publications Ltd 2017 in association with Mysticswrite Private Limited, Chennai

Copyright © Devdutt Pattanaik 2011

All rights reserved

10 9 8 7 6 5 4 3 2 1

ISBN:

This book is sold subject to the condition that it shall not, by any way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author's prior Written consent, in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser and without limiting the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of the copyright owner, except in the case of brief quotations embodied in critical articles or reviews with appropriate citations.

நான் மிகுந்த பணிவுடன் இந்த நூலை நூற்றுக்கணக்கான ஓவியர்களுக்கும், கலைஞர்களுக்கும் புனிதமான கலைகளையும், ஓவியங்களையும் சாதாரண மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கச் செய்ததற்கு காணிக்கையாக வைக்கிறேன்.

# பொருளடக்கம்

ஆசிரியர் குறிப்பு : கருத்துக்களை இங்கே வெளிப்படுத்துகிறார்

1. மோகினியின் ரகசியம்

2. மத்ஸ்யாவின் ரகசியம்

3. கூர்மாவின் ரகசியம்

4. திருவிக்ரமாவின் ரகசியம்

5. ராமரின் ரகசியம்

6. கிருஷ்ணரின் ரகசியம்

7. கல்கியின் ரகசியம்

நன்றி

# மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

இந்த நூல் புராணக் கதைகளை முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் அணுகி, ஆராய்ந்து எழுதப்பட்ட ஒன்று என்று கூற வேண்டும். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்த புராண ஆராய்ச்சி நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது, தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகளும், ஆங்கில வார்த்தைகளுக்கு இணையான தமிழ்ச் சொற்களும், மேற்கத்திய மொழியில் வெளியிடப்பட்டுள்ள சிந்தனைகளும் நாமும், அவர்களும் சிந்தனைகளில் எப்படி வேறுபடுகிறோம் என்பதைக் காட்டுகிறது. இந்தப் புத்தகத்தைப் படிக்கும் எல்லோரும், நாம் நமது தாய்மொழியில் பேசிய போதும், நம் சிந்தனைகளில் மேற்கத்திய ஆளுமை இருப்பதை உணரமுடியும்; எனவே, இந்த நூலைப் படிப்பவர்கள் மிகுந்த பொறுமை மற்றும் மனப்பக்குவத்துடனும் விளக்கங்களையும், நிகழ்வுகளையும் புரிந்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பது அவசியம் என்று நினைக்கிறேன்.

# ஆசிரியர் குறிப்பு

புத்த மதம் வளரத் தொடங்கிய பிறகுதான் விஷ்ணு பற்றிய கதைகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. அதற்கு முன்னால், ஆரண்யகம் மற்றும் உபநிஷத்துகளில் கூறப்பட்டுள்ள யக்ஞம் போன்ற யாகங்களாலும், உயர்நிலையில் கடைபிடிக்கப்படும் சிக்கலான சடங்குகளாலும் மட்டுமே ஹிந்து மதம் அறியப்பட்டிருந்தது. சாதாரண மனிதனுக்கு இது எட்டாத உயரத்தில் இருந்தது. அவனுக்கு குடும்ப மேம்பாட்டுச் சடங்குகள், தாவரங்கள்-பிராணிகள் மற்றும் இயற்கை வழிபாடுகள் ஆகியவை மட்டுமே தெரிந்திருந்தன.

மக்களின் அன்றாட பிரசினைகளை, சாதாரண மனிதனுக்கும் புரிகிற மொழியில் நேரடியாகச் சொல்லியது புத்த மதம். அதனால் இயற்கையாகவே அதற்குப் புகழ் சேர்ந்தது. ஆனால் புத்த மதம் மடாலயத்தைச் சார்ந்திருந்தது. அதற்கு மாறாக, ஹிந்து மதத்தில் துறவு, இல்லற வாழ்க்கை இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. மடாலய வாழ்க்கையை நோக்கிச் செல்லுபவர்களை ஊக்குவிக்க, மக்களை மகிழ்விக்கும் கற்பனையைத் தூண்டிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கதைகள்தாம் அதற்குக் கை கொடுத்தன.

குடும்பங்களின் கோணத்திலிருந்து விஷ்ணுவைப் பற்றிய கதைகளை வெளியுலகுக்கு எடுத்துச் சொல்லுவது சாத்தியமாயிற்று. இதற்கு இணையாக சிவபெருமானின் கதைகளும் மாற்றாகச் சொல்லப்படவே, இரண்டின் தாக்கமும் இணைந்தன. சிவபெருமானும், விஷ்ணுவும் கடவுளின் உருவங்கள் என்பதால், சன்னியாச வாழ்க்கை சாதாரண வாழ்க்கை இரண்டுமே சமமான நிலை பெற்றன.

இந்தக் கதைகள் எல்லாம் வெறும் பொழுது போக்குக்காக என்று தள்ளப்படாமல் இருக்க, அவை புனிதமானவை என்று கருதப்பட்டு, அவற்றுக்கு ஆதாரமாக சில

அடையாளங்களும், சடங்குகளும் சேர்க்கப்பட்டன. விஷ்ணுவுக்கான அடையாளங்களும், சடங்குகளும், சிவபெருமானின் அடையாளங்கள் மற்றும் சடங்குகளிலிருந்து வேறுபட்டவை. உதாரணமாக, விஷ்ணு தங்கத்தால் பளபளவென்று அலங்காரமாகக் காட்சியளிக்க, சிவபெருமான் சாதாரண சாம்பல் பூச்சில் வணங்கப்படுகிறார். வீட்டில் வளரும் துளசியால் விஷ்ணு பூசிக்கப்படும்போது, வீட்டுக்கு வெளியே வளரும் வில்வ இலைகளை வைத்து சிவபெருமான் பூசிக்கப்படுகிறார். விஷ்ணு விழிகளைத் திறந்துகொண்டு நடனமாடுகிறார் என்றால் சிவபெருமான் விழிகளை மூடிக்கொண்டு நடனமாடுகிறார். இம்மாதிரியான வேறுபாடுகளால், வெவ்வேறு வகை எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஞானம் முன்பு ஒரு சிலருக்குள் மட்டுமே வைக்கப்பட்டிருந்தது போய், யாரெல்லாம் கதை கேட்கவும், அடையாளங்களைப் பார்க்கவும், சடங்குகளைச் செய்யவும் முன்வருகிறார்களோ அவர்களை எல்லாம் எட்டியது. புதிய கதைகளின் அடிப்படையில் உருவான விஷ்ணு, ஹிந்து மதத்தின் முக்கிய நபராகக் கருதப்படுகிறார். ஹிந்து மதத்தின் சிக்கலான புதிர்களில் அவர் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறார்.

விஷ்ணுவின் ரகசியங்களை வெளிப்படுத்துவதில் வாசகருக்கு உதவுவதற்காக, அத்தியாயங்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன:

- முதல் அத்தியாயம் ஹிந்து மதத்தில் அடிப்படையான தத்துவங்களை விளக்க எவ்வாறு ஆண்பால்-பெண்பால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன
- இரண்டாம் அத்தியாயம் மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குகிறது.
- மூன்றாம் அத்தியாயம் மற்றும் நான்காம் அத்தியாயங்கள் தேவர்கள்-அசுரர்கள் பற்றியது. ஒரு பகுதியினர் பாதுகாப்பில்லாமல் திண்டாடும்போது, இன்னொரு பகுதியினர் ஆசைகளுடன்

போராடுகின்றனர். ஆக இரு பகுதியினருக்குமே மகிழ்ச்சி இல்லை.

- ஐந்தாம் மற்றும் ஆறாம் அத்தியாயங்கள் மனிதன் மனிதகுலத்துடன் போராடுகையில், ராமாயணம், மகாபாரதத்தைப் பற்றிப் பேசுகின்றன.

- ஏழாம் அத்தியாயம், போகிற போக்கில் விட்டுக் கொடுப்பதன் மூலம் நம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் ஞானமாகக் கருதச் சொல்கிறது.

- இந்த நூல் கதைகளில் உள்ளவற்றை வெளிப்படையாகவும், விஷ்ணுவைப் பற்றிய அடையாளங்கள், சடங்குகள் பற்றி உறுதியாகவும் கீழ்க்கண்டவாறு நம்ப வைக்க முயல்கிறது.

எல்லையற்ற உண்மைகளில் உள்ள நிலையான உண்மை
யார் இவற்றைப் பார்த்தவர்?
வருணன் ஆயிரம் கண்களால்,
இந்திரன் நூறு கண்களால்,
நாம் இரண்டு கண்களினால் மட்டுமே.

# 1
# மோகினியின் ரகசியம்
## ஆன்மிக வளர்ச்சி, லௌகீக வளர்ச்சியை உள்ளடக்கியதே.


www.photoorwallpapers.blogspot.com




ஒரு தென்னிந்தியக் கோயிலில் திருவிழாவின்போது மோகினியாக விஷ்ணு

மோகினி விஷ்ணுவின் பெண் அவதாரம். அவள் கவர்ச்சி ஈர்ப்பவள், அழகுத் தேவதை, மனம் பேதலிக்கச் செய்பவள். ஆனால் அவள் ஹிந்து புராணங்களில் ரிஷிகளையும் அசுரர்களையும் மயங்க வைக்கும் மேனகை, ரம்பை, ஊர்வசி போல தேவதையோ அப்சரஸோ அல்ல. மோகினி இவர்களில் இருந்து தனித்து நிற்பவள். ஏனென்றால் அவளை விஷ்ணுவாக எல்லாரும் அறிவார்கள். விஷ்ணுவை வழக்கமாக ஆணாகத்தான் பார்க்கிறோம். மோகினி என்பவள் அவருடைய பெண் வடிவம்.

யதார்த்தமான கருத்துகளை வெளிப்படுத்த, ஹிந்து புராணங்கள் ஆண்-பெண் பாலை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன. இந்திய அளவில், இரு வகை உண்மைகள்-லௌகீகம் மற்றும் ஆன்மிகம் என இருவகை உண்மைகள் அடிப்படையாக இருப்பதாகக் கருதப்படுகின்றன. லௌகீக உண்மை என்பது அடைய முடியாதது. அதை உணர்வுகளால் அடைந்துவிட முடியாது. லௌகீக உண்மை என்பது பெண் வடிவில் அறியப்படுவது என்றால், ஆன்மிக உண்மை என்பது ஆண் வடிவில் உணரப்படுவது.

மோகினி பெண் வடிவில் இருந்தாலும், அடிப்படையில் ஆண்தான். அப்சரஸ் போல முழுக்க முழுக்கப் பெண் வடிவல்ல. இருவருமே கவர்ந்திழுக்கக் கூடியவர்கள் என்றாலும், அவர்கள் நோக்கம் வெவ்வேறு. அப்சரஸ் மனிதகுலத்தை ஆன்மிக உண்மையிலிருந்து பிரித்து, லௌகீக வலையில் விழச் செய்வது போன்றது. மோகினி மனிதகுலத்தின் கவனத்தை, லௌகீக உண்மைக்குள்ளேயே ஆன்மிகத்தின் பக்கம் ஈர்க்கிறாள். எனவே, மோகினி. லௌகீகத்தில் பொதிந்த ஆன்மிக உண்மை. இதுதான் விஷ்ணு கதையின் மையக் கருத்து.

யதார்த்த உலகில், லௌகீக உண்மை என பிரகிருதியையும், ஆன்மிக உண்மை என புருஷத்துவத்தையும் சொல்வார்கள். பிரகிருதி என்றால் இயற்கை. புருஷத்துவம் என்றால் மனிதம்.

தாதுக்கள், செடிகொடிகள், மிருகங்கள் இவற்றிடையே

மனிதத்துவத்துக்கு இயற்கையில் சிறப்பான இடம் தரப்பட்டிருக்கிறது. ஏனென்றால், மனிதர்கள் மட்டுமே சிந்தித்துப் பார்க்கவும், சீர்தூக்கிப் பார்க்கவும், கற்பனை செய்யவும், தேர்ந்தெடுக்கவும் திறன் படைத்தவர்கள். இந்த குணங்கள் எல்லாம் மனித உடலைக் கடந்து, இயற்கையையும் தாண்டி, முடிவற்றதைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. அதனால் மனித வாழ்க்கை சிறப்பானது. எனவே, முன்னோர்கள் தத்துவக் கொள்கைகளை மனித அடையாளங்களின் வாயிலாக வெளிப்படுத்தினர்.


சக்கரத்தின் முறிவை சங்கு காட்டுகிறது; உள் அல்லது வெளிச் சுருளாக உயர்கிறது.
விஷ்ணுவின் சக்கரம் இயற்கையின் சுழற்சியைக் காண்பிக்கிறது.
விஷ்ணுவும் லக்ஷ்மியும் தாங்கள் ஒருவருக்கு ஒருவர் சார்ந்திருப்பதை, தழுவியும் விழிகளால் பார்வையைப் பரிமாறியும் வெளிப்படுத்துகிறார்கள்.
லக்ஷ்மி தன் கையில் ஒரு கண்ணாடி வைத்துக்கொண்டு பொருளியல் உண்மையை வெளிப்படுத்துகிறாள்.

12ஆம் நூற்றாண்டு சந்தேலா மன்னர்கள், கஜுராஹோ கோயில் சுவாந்ல் உள்ள விஷ்ணு மற்றும் லக்ஷ்மி

லௌகீக மற்றும் ஆன்மிக உண்மைகள் ஒன்றை ஒன்று சார்ந்தவை. லௌகீக உண்மை இல்லாமல், ஆன்மிக உண்மையைக் கண்டுணர முடியாது.

அதே போல, ஆன்மிக உண்மை இல்லாமல், லௌகீக உண்மை பயனற்றது. ஹிந்து புராணங்களில் இப்படி ஒன்றை ஒன்று சார்ந்த உண்மைகள் மனிதர்களில் தம்பதியாகச் சித்திரிக்கப்படுகின்றன. இவ்வாறு லௌகீகமும் ஆன்மிகமும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் நிலையை, ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் சார்ந்திருக்கும் நிலையைக் காண்பிக்கின்றன. அதனால்தான் கோயில் சுவர்களில் தாம்பத்தியத்தின் நெருக்கமான உறவைச் சித்திரித்திருக்கிறார்கள்.

புராணங்களில் காரணப் பெயர்கள் உண்மைப் பெயர்களாகிவிடுகின்றன. ஒரு கருத்து ஆண் கடவுளாகவோ பெண் கடவுளாகவோ மாறிவிடுகிறது.

ஆக, புருஷர் புருஷராக, அதாவது கடவுளாக, பிரகிருதி இயற்கை அன்னையாக மாறுகிறது. விஷ்ணு புராணங்களில், புருஷர் என்பது விஷ்ணுவாகவும், பிரகிருதி லக்ஷ்மியாகவும் பார்க்கப்படுகின்றனர். அவர்தான் உலகைக் காக்கிறார். அவள்தான் செல்வத்துக்கு அதிபதி. அவள் இல்லாமல் அவரால் எதுவும் செய்ய இயலாது. அவளாலும் அவரின்றி எதுவும் செய்ய முடியாது. அவர் அவளுக்கு ஒரு காரணத்தைக் கொடுக்கிறார்; அவள் அவருக்குத் தேவையானவற்றைக் கொடுக்கிறாள். ஆக, விஷ்ணுவும் லக்ஷ்மியும் தங்கள் நிலையை உறுதிப்படுத்துகின்றனர். ஒருவர் இல்லாமல் இன்னொருவர் வாழ முடியாது.

ஆனால் புராணங்களில் வரும் பெண்கள் லௌகீக விஷயங்களை விரும்புவது பலரை வாட்டுகிறது. அது ஏன் மாற்றி இருக்கக்கூடாது? லக்ஷ்மி வாயிலாக ஆன்மிக உண்மைகளையும், விஷ்ணு வாயிலாக லௌகீகத்தையும் வெளிப்படுத்தக் கூடாது?




விஷ்ணுவின் புனித நாமம்; அல்லது ஊர்த்வ நாமம் அல்லது செங்குத்தான குறி

இந்த உறுத்தலுக்குக் காரணம், லௌகீக உண்மைகளை விட ஆன்மிக உண்மைகளை மிக உயர்ந்த நிலையில் வைத்திருப்பதுதான். இதுவே, ஆணாதிக்க சமூகத்தில், பெண்களைக் கீழ்த்தட்டில் வைத்திருப்பதைப் பார்க்கும் போது, பெண்களை லௌகீகத்தின் அடையாள மாகக் காண்பித்து, ஆண் சமூகத்தின் மதிப்பீட்டை அவர்கள் மீது திணிக்கும் இன்னொரு முயற்சி தெரிகிறது. ஆனால், இது

உண்மையல்ல. புராணங்கள் பெண் வடிவங்களை லௌகீக உண்மையை வெளிப்படுத்த உதவினாலும், மனித மனோபாவத்தை இது சுட்டிக்காட்டுகிறதே அல்லாமல், ஆண்-பெண் பால் சிக்கல்களை அல்ல.

விஷ்ணுவின் புனித அடையாளமான நீண்ட திருமண், லௌகீக மற்றும் ஆன்மிக உண்மையை உள்ளடக்கியது. லௌகீக உண்மை சிவப்பு வண்ணத்திலும்-நம் வாழ்க்கையை நிலைத்திருக்கச் செய்கிற நம் நாடி நரம்புகளில் ஓடுகிற ரத்தத்தின் நிறத்தில் பிரதிபலித்தால், ஆன்மிக உண்மை நம் உறுதியான எலும்புகளின் வெள்ளை நிறத்தில் பிரதிபலிக்கிறது.

நடுவில் இருக்கும் சிவப்புக் கோடும் அதை அடுத்துள்ள வெள்ளை வரிகளும் மேல் நோக்கி அமைந்திருக்கின்றன- வளர்ச்சியைக் காண்பிப்பதற்காக. 'பிர' என்ற சமஸ்கிருதப் பதம், கடவுள் என்ற சொல்லை வெளிப்படுத்த வேதத்திலிருந்து கிடைக்கிறது. இதுதான் பிரம்மன். வளர்வதுதான் பிரம்மன் பரந்து விரிந்தது, முடிவற்றது. விஷ்ணு என்பதற்கு எல்லாவற்றையும் கடந்து நிற்பது என்று பொருள். வேறு மாதிரி சொன்னால், விஷ்ணு என்பவர் கடவுள். ஆன்மிக-லௌகீகத்தின் முடிவற்ற வளர்ச்சியைக் கொண்டாடுபவர்.

லௌகீக வளர்ச்சி என்றால் என்ன? உணவு, உடை, இருக்குமிடம், இசை, நடனம், கலை, பொழுதுபோக்கு, உறவுகள், அமைதி, ஆனந்தம் மற்றும் செழுமை ஆகிய ஐம்புலன் களையும் மகிழ்விக்கும் லௌகீக உண்மைகளை அடைய முடிவது. எந்த ஒரு விஷ்ணு கோயிலுக்குச் சென்றாலும், அது திருப்பதி வேங்கடேசுவர பாலாஜியாகட்டும், ராஜஸ்தானத்து ஸ்ரீநாத்ஜி ஆகட்டும், அல்லது பூரி ஜகன்னாதர் ஆகட்டும் அல்லது காவேரிக்கரையில் சயனித்திருக்கும் ரங்கநாதராகட்டும், செல்வச் செழுமை எவ்வாறு விஷ்ணு வழிபாட்டில் ஓர் அங்கமாக இருக்கிறது. இங்கெல்லாம் சடங்குகள் வண்ணமயமாக, மணக்க மணக்க, இசை பொங்கி வழிய நடைபெறுகின்றன.


அவருடைய கிரீடம் உலகிலேயே மிகவும்
விலையுயர்ந்த வைரத்தால் ஆனது.
பாலாஜியின்
ஆடைகள் ஒரு
நாளைக்குப்
பல முறை
மாற்றப்படுகின்றன.
தென்னிந்தியாவில் பாலாஜியை
சினேகத்துடனும் மரியாதையுடனும்
பெருமாள் என்று அழைக்கிறார்கள்.

ஆனால் லௌகீக விஷயங்கள் முக்கியமானவை. மெல்ல மெல்ல அவை மனத்தை மகிழ்விப்பதை விட்டு அகலத் தொடங்குகின்றன. இது வலியை, வெறுப்பை, கவலையை, மன அழுத்தத்தை, பாதுகாப்பின்மையை, பயத்தை, தேவையற்ற உணர்வுகளைத் தருகிறது. இதைத் தடுக்காமல் விட்டுவிட்டால், மனதில் பேராசையையும், பொறாமையையும், ஆத்திரத்தையும் ஆசையையும் அது தோற்றுவிக்கும்.

ஆன்மிக வளர்ச்சியில், இந்த உணர்வுகளை எதிர்த்து வெற்றிகொள்ளும் திறன் இருக்கிறது. அப்போதுதான் இவற்றை எல்லாம் ரசித்து, ருசித்து, தேவையற்றதை ஒதுக்கி வாழ முடியும். லௌகீக வாழ்க்கை நமக்கு ஆதரவாக இருக்கையில் மகிழ்ச்சியாகவும், ஆதரவாக இல்லாத போது மகிழ்ச்சி இன்றியும் இருக்கிறோம். லௌகீக வளர்ச்சியோடு கைகோத்துக்கொண்டு புத்திசாலித்தனமும் வளர்ந்தால்தான் இது சாத்தியமாகும்.

புத்திசாலித்தனம் வளர்ந்தால்தான், லௌகீக விஷயங்களைச் சார்ந்து எழும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதனால்தான் விஷ்ணுவின் புனிதமான அடையாளத்தை நெற்றியில் தரிக்கிறார்கள். அதுதான் புத்திசாலித்தனத்தின் உறைவிடம். அதனால்தான் ஆன்மிகத்தின் இரட்டைக் கோடுகளும் கோப்பை போல அடியில் தாங்கிக்கொண்டு இருக்க, சிவப்பு ஒற்றை வரியாக லௌகீகம் மேல் நோக்கி அமைந்திருக்கிறது. தங்கு தடையில்லாத லௌகீக வளர்ச்சி விரும்பத்தக்கதல்ல.

ஆன்மிக உண்மையை நாடிப் போகும்போது, மனிதராகப் பிறவி எடுப்பதுதான் முதல் படி. ஏனென்றால், இரத்தமும் சதையும்தான் லௌகீக உன்மையை அறியவும், ஆன்மிக உண்மையை ஆழ்ந்து உணரவும் முடியும்.

பிறவி எடுக்காத சிசு தாயின் உதிரத்தில் மிதக்கும்போது, விஷ்ணுவின் வடிவமான, நீரில் சயனித்திருக்கும் நாராயணனை நினைத்துப் பார்க்கிறது.

விஷ்ணு உறங்கும்போது, உருவில் ஆகட்டும், எண்ணத்தில் ஆகட்டும், இந்த உலகம் இருப்பதில்லை. அது போலவேதான் பிறவி எடுக்காத சிசுவின் நிலையும்.




நேபாளத்தில் புதனிலகந்தா அதாவது விஷ்ணு, நாராயணனாகப் பாம்பின் மீது சயனித்திருக்கிறார்.




கர்நாடகாவின் பேலூரிலுள்ள சிற்பம்-விஷ்ணு, அனந்தன் எனும் பாம்பின் மீது அமர்ந்திருக்கிறார்.

பிறவி எடுக்காத சிசுவின் நிலையில், அது அப்பாவியாக, வெளியுலகில் எதுவும் அறியாததாக இருக்கிறது. உலகின் வடிவத்தை அது அறிந்திருப்பதில்லை. அது உலகைப் பற்றிச் சிந்திப்பதும் இல்லை. நிலையானது-நிலையற்றது, ஆண்-பெண், வெள்ளை அல்லது சிவப்பு எது பற்றியும் அறிவதில்லை.

பிறவி எடுக்காத சிசு கனவற்ற உறக்கத்திலிருக்கும் நாராயணனுக்கு நிகரானது.

பல தலைகள் கொண்ட நாகத்தின் மீது நாராயணன் உறங்குகிறார். இந்த நாகத்தை ஆதி-அனந்த-சேஷன் என்கிறார்கள். இது காலத்தை பிரதிபலிக்கிறது. ஆதி என்பது தொடக்கம். அனந்த என்பது எல்லையற்ற அல்லது

முடிவற்ற. சேஷ என்பது மிச்சம், மீதி. இந்த மூன்று பெயர்களும் மூன்று வகை நேரத்தின் நிலைகளை அதாவது, எப்போது ஒருவன் விழித்துக்கொள்கிறான், எப்போது விழிக்கிறான் எப்போது உறங்குகிறான் என்பதைக் காண்பிக்கின்றன. நாம் விழித்திருக்கும்போது, நாம் காலத்தின் ஓட்டத்தைக் கவனிக்கிறோம். இது ஆதி, ஆரம்ப உணர்வு. கணிதத்தில் முதல் எண்ணைக் குறிக்கிறது. நாம் முழுமையாக விழித்திருக்கும்போது, உலகை எல்லையற்ற நிலைகளில் காணலாம். இது அனந்த, இறுதி நிலை உணர்வு. இதுவும் கணிதத்தில் முடிவற்ற நிலையைக் காண்பிக்கிறது. நாம் கனவு காணாமல் ஆழ்ந்து உறங்கும்போது, நமக்கு நேர உணர்வே இருப்பதில்லை; அதனால் உலகைப் பற்றிய உணர்வே இல்லை. எதுவும் இருப்பதில்லை. மிச்சம் மீதி இருப்பது எல்லாம் சேஷம்; கணித மொழியில் பூஜ்யம். ஆக, விஷ்ணுவின் நாகம் ஆதி-அனந்த-சேஷன் எல்லா மனித உயிர்களும் தொடர்ந்து அனுபவிக்கிற, விழித்திருக்கும் நிலை, விழிக்கும் நிலை மற்றும் உறங்கும் நிலை ஆகிய மூன்று நிலைகளை நம் கவனத்துக்குக் கொண்டு வருகிறது.

நாராயணன் விழித்துக்கொள்ளும்போது, அவர் கொப்பூழிலிருந்து ஒரு தாமரை மலர்கிறது.

அதில் பிரம்மா அமர்ந்திருக்கிறார். பிரம்மா அவர் தாயின் வயிற்றிலிருந்து நழுவி விழுந்தவர். வெளி உலகில் திடீரென்று காணப்படும் பரபரப்பை அவர் உணர்கிறார். அவர் தன் தாயின் வயிற்றிலிருந்ததை விட வேறு வகையாக இருக்கிறது. இயற்கையுடன் இதுதான் அவருடைய முதல் பரிச்சயம்.




பிரம்மா விஷ்ணுவின் நாபியில் இருந்து எழும் காலண்டர் ஓவியம்

பிரம்மா தன்னை ப்ரகிருதியிலிருந்து வேறுபட்டுக் காண்கிறார். இந்தத் திறன் அவருக்கு அவருக்குள் இருக்கும்

புருஷத்திலிருந்து கிடைக்கிறது.

ஆனால் அவருக்கு அதுவரை தெரியவில்லை. அவருக்குத் தான் இயற்கை (ப்ரகிருதி) அல்ல என்று தெரியும். தன்னைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்தவுடன் இயற்கையைப் புரிந்துகொள்ளத் துவங்குகிறார். அதனால் பிரம்மாவின் தோற்றம், மனித உணர்வுகளின் பிறப்பு ஆகிறது.

பிரம்மா எல்லையற்ற உணர்வின் பிரதிநிதி ஆக இருக்கிறார். எல்லையற்ற உணர்வுகளைப் புரிந்துகொள்ள அவரிடம் திறன் இருக்கிறது. அதுதான் பிரம்மம். அதனால்தான் வேத வாக்கியமான 'அஹம் பிரம்மாஸ்மி' என்ற சொல், 'நானே பிரம்மா' என்றும், 'நானே பிரம்மன்' என்றும் தெரிவிக்கிறது.

இதன் முதல் அர்த்தம், ஏற்கெனவே வெளிப்பட்ட முடிவான உண்மையை அங்கீகரிக்கிறது. இரண்டாவது அர்த்தம் எல்லையற்ற உண்மையை நோக்கிச் செல்கிறது. அது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

மனித மனம், அதாவது பிரம்மா, இயற்கை அப்படியே இருப்பதில்லை என்கிறது. ஒருவன் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்லும்போது, இயற்கை மாறுகிறது; ஈரம் மிகுந்த மழைக் காடுகள் பாலை வனங்களாகின்றன. குளிர்ச்சியான பனி மலைகள் பரந்து விரிந்த கடல்களாகின்றன. ஒருவன் ஓரிடத்தில் அமர்ந்திருந்தாலும், இயற்கை பரபரத்துப் போய், காலத்துக்குத் தகுந்த மாதிரி மாறுவதைக் காணலாம். தாவரங்கள் வாடி உதிரும்.

மிருகங்கள் தங்கள் இணையைத் தேடும், இடங்கள் மாறும். பருவ நிலைகள் மாறும், சூரியன் உதிக்கும், மறையும், சந்திரன் தோன்றும், தேயும்.

நட்சத்திர மண்டலம் சுற்றிச் சுற்றி வரும். பிறந்ததெல்லாம் ஒரு கட்டத்தில் அழியும்.

தாயின் வயிற்றுக்குள் இருக்கையில் எல்லாமே நிலைத்து இருக்கின்றன; வசதியாக இருக்கின்றன. எந்த எதிர்பார்ப்பும் இல்லை. ஆனால் வெளியே இயற்கையில்,

எல்லாமே நகர்கின்றன. வாழ வேண்டுமென்றால் செயல்பட்டாக வேண்டும். பிரம்மாவைப் பொறுத்தவரை, ப்ரகிருதி என்பது ஷத்ரூபா.




திருவனந்தபுரம் கோயில் உள்ளே, படுத்த நிலையில் இருக்கும்
பிரம்மாண்டமான பத்மநாபசுவாமி காலண்டர் ஓவியம்

பொறுமையற்ற பெண் கடவுள். அவளுக்குப் பல வடிவங்கள். அவள் அவனைப் பயமுறுத்துகிறாள்.

பிரம்மாவின் மனத்துக்குக் கற்பனை வளம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஷத்ரூபா அவருடைய

விருப்பத்துக்கு ஏற்றவாறு ஆடுகிறாள். இது அவருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஷத்ரூபா எப்போது அவரை ஆட்கொள்ளுவாள் என்பதை அவரால் கற்பனை செய்து பார்க்க முடியும். இது அவருக்குக் கவலை அளிக்கிறது. ஷத்ரூபாவை உணராத போது, அவர் அச்சம் கொள்கிறார். வேறு வகையில் சொல்வதானால், அவர் இறப்பைக் கற்பனை செய்து பார்க்கிறார். இது அவரை மேலும் அச்சுறுத்துகிறது.

பிரம்மா இந்த இறப்பு காரணமான அச்சத்தை ஜீவாத்மாவான உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் அளிக்கிறார். இவர்கள் எல்லாரும் அவருடைய குழந்தைகள்; பேரன் பேத்திகள். அதனால்தான் குழந்தைகள் எல்லாம் பிறக்கும்போது அழுகின்றன. அதனால்தான் பிரம்மாவை யாரும் வழிபடுவதில்லை.

விஷ்ணுவுக்கு அப்படிப்பட்ட கவலைகள் ஏதுமில்லை. பிரம்மா இறப்பு என்று கருதுவது, உடலின் இறப்பு; புருஷம் என்பதன் உறைதான் உடல்.

அவர் லோகாயத உண்மைகளை நம்பி இருக்கவில்லை. அவருக்குத் தெரியும், அவர் புருஷர், எல்லையற்றவர், நிலையானவர் என்று. அவர் பரமாத்மா. அதனால்தான் விஷ்ணுவை வழிபடுகிறார்கள். எல்லா ஜீவாத்மாக்களும் அவரைத்தான் விரும்புகிறார்கள்.

பிரம்மா அப்படிப்பட்ட அச்சுறுத்தும் இயற்கையின் அம்சங்களை வெறுப்பவர். அவருக்கு சுகம் அளிக்கும் இயற்கை அம்சங்களை வரவேற்பவர்.

இந்த அச்சத்தை வெறுப்பதும், சுகத்தை வரவேற்பதும் மாயா என்ற தெய்வத்தை உருவாக்குகிறது.

இந்த மாயா என்ற சொல்லுக்கு வேராக இருக்கும் 'மா' என்ற எழுத்துக்கு 'அளப்பது' என்று பொருள். ஆக, மாயா என்பது ஓர் அளவுகோல். இயற்கையைப் போலவே மாயாவும் லோகாயத உண்மையின் ஓர் அம்சம்தான். இயற்கை நிதர்சனமாகத் தெரியும்; மாயா மனத்தில் உருவாகிறது.


யோக நித்ரையில் இருக்கும்போது, இயற்கையை உணர்வதில்லை. எனவே தன்னையும்தான். எதுவும் இருப்பதில்லை.
மஹா மாயாவால், இயற்கையின் மீது நம் பார்வை களங்கமடைந்திருக்கிறது. மஹா மாயா பிரம்மாவின் மகள். தன் வாழ்க்கைக்கும், தன் உலகுக்கும் அர்த்தம் காண, முன்முடிவு எடுத்தவர்.
விஷ்ணு மட்டுமே இயற்கையை எந்த முன்முடிவும் இன்றிப் பார்க்கிறார். யோக மாயா அவர் சகோதரி. அவருடன் வாழ்பவள். தன் வாழ்வுக்கும், தன் உலகுக்கும் அவளைச் சார்ந்திருக்கவில்லை. ஆனால் தானாக முன்வந்து அவளிடம் சரணடையலாம். அவதாரமாக மரணம் அடையலாம்.

மைசூர் ஓவியத்தில், படுத்திருக்கும் விஷ்ணுவின் மேற்புறத்திலிருந்து தெய்வப்பெண் மாயா பார்க்கும் காட்சி

பிரம்மாவுக்கு முன்னரே இயற்கை இருந்திருக்கிறது. மாயா பின்னர்தான் வருகிறது. இயற்கை என்பது பிரம்மாவின் தாய் என்றால் மாயா அவர் மகள். அல்லது மனைவி எனலாம்; ஏனென்றால் தான் மாயாவை உருவாக்கியது பிரம்மாவுக்குத் தெரியாது.

பிரம்மாவுக்கு இயறகையிலிருந்து தப்பிக்க மாயா தேவையாக இருக்கிறது. பிரம்மா இயற்கையை மாயா மூலம் கவனிக்கிறார். மாயா எடைபோடும் அளவுகோல். பிரம்மா இயற்கையை எடைபோடுகிறார். மாயாவின் உதவியுடன், பிரம்மா இயற்கையை நல்லதா-கெட்டதா, சரியா-தவறா, அழகானதா-அழகற்றதா என்று கணிக்க முடிகிறது. பிரம்மா ஷடரூபாவாலோ அல்லது அவள் மாற்றங்களாலோ அச்சுறுத்தப்படுவதில்லை. தன்னைச் சுற்றியிருக்கும் உலகை எடைபோடுவதால், தான் மிகுந்த சக்தி வாய்ந்தவராக இருப்பது போல் பிரம்மாவுக்குத் தோன்றுகிறது.

துரதிர்ஷ்டவசமாக மாயா நிலையானவையல்ல. அவள் தொடர்ந்து பிரம்மாவின் அனுபவங்களையும் எதிர்பார்ப்புகளையும் அறிந்துகொள்கிறாள். அனுபவங்கள் மாறும்போது, எதிர்பார்ப்புகள் மாறும்போது, மாயா தன்னை மேலும் சக்திவாய்ந்தவளாக மாற்றிக்கொள்கிறாள். அதனால், முன்னால் எது சரியாக இருந்ததோ, அது எதிர்காலத்தில் தவறாகப் போகலாம். உலகின் ஒரு பகுதியில் நன்றாக இருந்தது, இன்னொரு பகுதியில் மோசமாக ஆகலாம். ஒருவருக்கு அழகாகத் தெரிவது இன்னொருவருக்கு கோரமாகத் தெரியலாம். இது பிரம்மாவுக்குக் குழப்பத்தை உண்டாக்குகிறது. அதனால் அவர் குழந்தைகளுக்குள் மோதலை உண்டாக்கி விடுகிறது. உண்மை எது என்று வியக்கிறோம். நிஜம் எது என்று கேள்வி எழுப்புகிறோம். வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்று வியக்கிறோம். இது பயத்தைப் பெரிதாக்கிவிடுகிறது.

மாயா என்றால் மாயை அல்லது கற்பனையானது என்று

எடுத்துக்கொள்கிறோம். அளவுகோல் மூலம் பார்க்கும் உலகம் மாயைதான். ஏனென்றால் அது அளவுகோலால் உருவான ஒரு கருத்து. இந்த மாயைதான் பிரம்மாவுக்கு ஆறுதல் அளிப்பதோடு அவரைக் குழப்பவும் செய்கிறது. அது இல்லை என்றால், பிரம்மா இல்லை. அது இருந்தால், அவருக்கு அர்த்தம் உண்டு, நோக்கம் உண்டு, பாதை உண்டு.


பிரம்மா உருவாக்கிய பிரம்மாண்டத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட கோயில், நம்மை பிரகிருதியைக் கவனிக்கவோ, புருஷத்தை அறியவோ தடுக்கிறது.
தெய்வத்துள் இருப்பது புருஷம். பிரகிருதியைக் கண்காணிக்கிறது.

மைசூர் ஓவியத்தில், கோயிலுக்குள் ரங்கநாதசுவாமி

மாயாவின் உதவியோடு பிரம்மா உருவாக்கிய மாயையை பிரம்மானந்தம் அல்லது பிரம்மாவின் பகுதி என்கிறோம். பிரம்மானந்தம் என்பது தொட்டுணரக்கூடிய உண்மையல்ல. அது பிரம்மா காண்பிக்கும் உண்மை. அவருடைய சொந்த உருவாக்கம். இயற்கை குறித்த அவர் கருத்து.

இயற்கை என்பது உண்மையானது. பிரம்மானந்தம் என்பது எண்ணத்துக்கு உட்பட்டது. முன்னதற்கு மாயாவின் உதவி தேவை. பின்னது மாயையின் தயாரிப்பு. இயற்கை என்பது வனம். வனத்தில் மனிதன் பிற மிருகங்களிலிருந்து மாறுபட்டவன் அல்ல. மாயாவோ அவன் பிறவற்றிலிருந்து மாறுபட்டவன், மிருகங்களைவிட உயர்ந்தவன், வனத்தின் அதிபதி என்று நினைக்க வைக்கிறது.

வாழும் எந்த உயிரினங்களைவிடவும் வேறாக மனிதனை இயற்கை மதிப்பதில்லை. வேறு வகையான சக்திகளையும் யுக்திகளையும் நாம் வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் அளிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் உண்மையில், மனிதன் மற்ற எல்லா உயிரினங்களையும்விட வேறுபட்டவன். அவன் சிந்திப்பான் என்பதால் அவனால் இயற்கையை வசப்படுத்தும் உரிமையைப் பெறுகிறான், கலாசாரத்தை உருவாக்குகிறான்.

உலகம் கற்பனை செய்து மாயையின் துணையுடன் உருவாக்கிய கலாசாரம்தான் ஆனந்தம்.

மாயை இல்லாமல், மனிதன் இயற்கையின் தயவில்தான் இருக்க வேண்டும். ஆனால் மாயையுடன் மனிதன் இயற்கையை வசப்படுத்தி, கலாசாரத்தை நிலைநாட்ட முடியும். இவ்வாறு மிருக நிலையிலிருந்து மாயை மனிதனை உயர்த்துக்கிறது. எப்படியாவது உயிரோடு இருப்பதுதான் வாழ்க்கை அல்ல; அதற்கு அர்த்தம் இருக்க வேண்டும். அதைத் தேட மனிதனைத் தூண்டுவது கர்மா. அது க்ரி என்ற வேரிலிருந்து வந்த வார்த்தை. அர்த்தத்தை தேடும் முயற்சியில், மனிதன் சமூகத்தை உருவாக்குகிறான். ஆக, பிரம்மா சிருஷ்டிகர்த்தாவாக

அல்லது உருவாக்குபவர் ஆகிறார்.



விஷ்ணு ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். அவர் இயற்கையை அறிந்திருக்கவில்லை. அதனால் இயற்கை இல்லை என்று சொல்ல இயலாது.

அது உணரப்படவில்லை; அவ்வளவுதான். இந்த நிலையைத்தான் யோக நித்ரா என்கின்றனர். நாம் ஆழ்ந்து உறங்கும் நிலைக்கு இணையானது இது. எந்த உலகில் இருக்கிறோம், நம் பெயர் என்ன என்று எதுவுமே நமக்குத் தெரிவதில்லை. யதார்த்தமாகப் பார்த்தால், நம் உண்மை நிலை அக்கணத்தில் இல்லை. உண்மை அல்லது பிரம்மானந்தம் நாம் கண்விழிக்கும்போதுதான் மீண்டும் பிறக்கிறது. அப்போது சேஷன் என்கிற நாகம் ஆதியாக உருமாறுகிறது.

கண்விழித்துக்கொண்டவுடன், பிரம்மாவைப் போலவே விஷ்ணு இயற்கையை உணர்கிறார். ஆனால் பிரம்மாவைப் போல் அல்லாமல், அவர் இயற்கையால் அச்சுறுத்தப்படுவதில்லை. விஷ்ணுவுக்கு பயம் இல்லை. அவருக்கு இயற்கையைப் பாராட்ட அளவுகோல் எதுவும் தேவையில்லை. இயற்கை எப்படி இருக்கிறதோ அப்படித்தான் மாயையின் உதவியின்றி அவர் பார்க்கிறார்; அவர் பிரம்மன் என்று அவர் அறிவார். பிரம்மா அப்படி அல்ல; அவருக்கு இயற்கையைத் தாக்குப் பிடிக்க மாயை தேவையாக இருக்கிறது. விஷ்ணுவுக்குத் தேவை இல்லை. ஆக, பிரம்மா மாயையின் அடிமை என்றால், விஷ்ணு அவளுடைய எசமானர். பிரம்மா ஒரு நிதர்சனமான உண்மையை நிலை நாட்டித்தான் உயிர்வாழ முடியும். விஷ்ணுவுக்கு அப்படிப்பட்ட தேவை எதுவும் கிடையாது.

பிரம்மாவுக்கு, மாயா என்பது மகாமாயா. அவளுடைய ஆதிக்கத்தில்தான் அவர் இருக்கிறார். விஷ்ணுவுக்கு மாயா என்றால் யோக மாயா. அவள் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறாள். அதனால்தான் விஷ்ணுவை மாயின் என்கிறார்கள். அதாவது, நம் தவறான நம்பிக்கை காரணமாக நம்மை ஏமாற்றுபவர்.

விஷ்ணு நினைத்தால், மாயையை எதிர்கொள்ள முடியும். அவர் அப்படி நினைக்கும்போது, அவர் ஓர் அவதாரம்

எடுக்கிறார். உதாரணமாக, அவர் ராமராகவோ, கிருஷ்ணராகவோ ஆக முடியும். ராமர், கிருஷ்ணர் இருவருமே எல்லா உயிர்களையும் போல் பிறந்தார்கள், இறந்தார்கள் என்றாலும் அவர்கள் ஞானிகள். மாயையைக் கண்டு அஞ்சியவர்கள் அல்ல. இருவருக்குமே தாங்கள் விஷ்ணு என்று தெரியும்., அவர்கள் அடையாளம் எந்த அளவுகோலையும் சார்ந்து இருக்கவில்லை.




வியாசரின் கிளி முக சுக முனியின் சித்திரம்.




கோயிலில், மனத்தைக் கவரும் கிருஷ்ணரின் உருவம்.

ஆக, விஷ்ணுவுக்கு மாயாவுடன் மூன்று மடங்குத் தொடர்பு இருக்கிறது. நாராயணனாக, அவர் மாயையை அறிந்திருக்கவில்லை. விஷ்ணுவாக அவர் மாயையை அறிந்திருக்கிறார். ஆனால் அவளுடைய ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட விரும்புவதில்லை. விஷ்ணுவின் அவதாரமான ராமர், கிருஷ்ணராக அவதாரமெடுத்து அவராக முன்வந்து மாயையை அடைகிறார். ஆனால் அவளைச் சார்ந்து இருக்கவில்லை.

மாயையை எதிர்கொண்டு, விஷ்ணு பிரம்மா தன்னை அணுகுமாறு செய்கிறார். ராமராகவும், கிருஷ்ணராகவும்

அவர் மகிழ்ச்சியை வழங்குகிறார், இதயங்களை உருக வைக்கிறார். உலக நடப்புகளில் கலந்துகொள்கிறார், கவர்கிறார், சண்டையிடுகிறார், ஜீவாத்மாவைத் தன் வசம் ஈர்க்கிறார்.

இந்த உலகு ரங்க-பூமியாக, விளையாட்டுக்களமாக, மாறி ஆன்மிகத்தை நிதர்சனமாக எதிர்கொள்கிறது. ஆக இந்த உலகில் விஷ்ணு, மோகன் எனப்படும் ஏமாற்றுக்காரரும்தான், மோகினி என்ற மயக்குகிறவளும் தான.

வியாசரின் மகன் சுகரைப் பற்றிய கதை ஒன்று உண்டு. சுகர் தன் தாயின் கருப்பையிலிருந்து பத்து மாதங்கள் ஆகியும் வெளியேற மறுத்துவிட்டாராம்.

அவர் தகப்பனார் அந்தக் குழந்தையிடம் கெஞ்சினாராம். பன்னிரண்டு வ்ருடங்கள் கெஞ்சிக் கேட்ட பின்னரே சுகர் வெளியே வந்தார். உலக வாழ்க்கையை அனுபவிக்க அல்ல. கருவுற்ற தன் தாய்க்கு இனியும் தொல்லை தர வேண்டாம் என்று!

பிறந்ததும், பூமியில் கால் படாமல் ஆகாயத்துக்குத் தாவினார். மகாமாயாவுடன் விவாதம் செய்ய அவர் விரும்பவில்லை. அவள் நிரூபிக்க முயலும் உண்மையை உருவாக்கவும் விரும்பவில்லை. தன் தாயாரின் கருவில் இருக்கையில், தன் தந்தையின் வேத ஒலியைக் கேட்டிருக்கிறார். அவருக்கு தன் பிரும்மானந்தத்தை உருவாக்குவதில் விருப்பமில்லை. அவர் இயற்கையின் உண்மையைத் தேர்ந்தெடுத்தார். முடிவான உண்மையில் அவர் நாட்டம் கொள்ளவில்லை. அவர் விரும்பியது முடிவற்ற உண்மையைத்தான். அப்படி என்றால் விஷ்ணுவின் இருப்பிடம் சென்று அவரோடு இரண்டறக் கலப்பதுதான்.


பிரம்மாவின் பல தலைகள், மனத்தின் படிப்படியான மாறுதல்களைக் குறிக்கின்றன. முன்முடிவு காரணமாக வசதியைத் தந்து, அச்சத்தைத் தணிக்கிறது.
பிரம்மா எல்லாவற்றையும் அளந்து பார்க்கிறவர். அவர் வழிபடப்படுவதில்லை.
சடங்குகளின் கருவிகளை பிரம்மா கையில் வைத்திருக்கிறார். வேதச் சடங்குகள் ரகசியங்கள் அடங்கியவை என்பதால், மனிதனை முன்முடிவுகள் எடுக்கும் பார்வையிலிருந்து சரியான பார்வைக்கும், அச்சத்திலிருந்து அச்சமின்மைக்கும் இட்டுச் செல்கின்றன.

பல தலைகளுடன் பிரம்மா-கர்நாடகத்திலுள்ள பேலூர் கோயிலில் சுவர் சிற்பம்.

சுகர் மேலெழுந்தவுடன், அவர் தந்தை, 'திரும்பி வா, திரும்பி வா' என்று கதறினார். ஆனால் சுகர் திரும்பிப் பார்க்கக்கூட விரும்பவில்லை. அப்போதுதான் வியாசர் கிருஷ்ணரின் அழகை வர்ணிக்கத் தொடங்கியிருந்தார். 'அவருடைய தாமரைப் பாதங்கள், அவருடைய சுருண்ட கேசம், அவருடைய மயக்கும் விழிகள், மர்மமான புன்னகை, கொண்டையில் மயிற்பீலி, உடலில் நீண்ட சந்தனக் குறிகள், சுருட்டை முடியுடன் கூடிய அவருடைய அகன்ற மார்பு, அழகான பட்டுப் பீதாம்பரத்தால் மூடப்பட்ட அவருடைய நீண்ட கால்கள், காட்டுப் பூக்கள் நிறைந்த கழுத்து, மீன் வடிவக் காதோலைகள்' என்று வியாசர் குறிப்பிட்டார்.

அவருடைய வர்ணனை அத்தனை கவர்ச்சியாக இருந்ததால், தந்தை சொல்வதைக் கேட்க, ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையே அப்படியே நின்றுவிட்டார் சுகர். வர்ணனை தொடரவே, அவர் கிருஷ்ணரைக் காண ஏங்கினார். எப்படியோ கட்டுப்பாடு எதுவும் அவரை பாதிக்கவில்லை. ஆனந்தமாக இருந்தது. அவர் கேட்பதை அனுபவிக்க, மகா மாயாவிடம் சரணடைவதுதான் ஒரே வழி என்பதை உணர்ந்தார். ஒரு குறிப்பிட்ட, முடிவான உலகில், மட்டுமே அழகை அனுபவிக்க முடியும். பிரும்மாண்டத்துக்கு ஒரு மதிப்பு இருந்தது. ஒரு வித உண்மையில் மட்டுமே கிருஷ்ணர் தன்னை வெளிப்படுத்த முடியும்!

பிரம்மா நிறைய மகன்களை உருவாக்கி, பிரம்மத்தை உணர, இயற்கையுடன் உறவாடச் செய்கிறார். தன் மகன்களைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறார்.

நிதர்சனத்துடன் எதிர்கொள்ளத் திருமணம்தான் சாத்தியமானது என்கிறார். திருமணம் பிரும்மாண்டத்தை நிறுவுவதில் முடிகிறது. திருமணம் மூலம் மட்டுமே பிரம்மாவும் அவர் மகன்களும் ராமரையும், கிருஷ்ணரையும் அடைய முடியும். பின்னர் அவர்கள் வழியாக விஷ்ணுவை அடையலாம்.

இறுதியாக நாராயணனை. ஆகவே ஆன்மிக உண்மையை அறிய, திருமணம் அவசியம்.


நாரதர் எப்போதும், நாராயண, நாராயண என்று உச்சரிக்கிறார். நாம் மாயையில் சிக்கியிருக்கிறோம் என்பதால், அற்பமான, வலி மிகுந்த உணர்வுகளைக் கைப்பற்றிக்கொண்டு, எல்லையற்ற தெய்வீகத்தை உணர்வதில்லை.


நாரதர் கிசுகிசுக்களை விரும்புவதால், பொறாமை, கோபம் போன்ற மனித உணர்வுகளைத் தூண்டிவிடுகிறார். ஒருவரை மற்றொருவருடன் மோதவைத்து, ஒப்பிட்டுப் பார்க்கிறார்.


நாரதர் எங்கு போனாலும் வீணையை மீட்டிக்கொண்டு, பக்திப் பாடல்களைப் பாடியபடி சென்றார்.

பிரம்மாவின் பல மகன்களில் ஒருவர் நாரதர். நாரதர் திருமணம் செய்துகொள்ள மறுக்கிறார். அவர் இந்த லோகாயத உலகில் எதுவும் வேண்டாம் என்று ஒதுங்கி இருப்பவர். சுகரைப் போல அவரும் நாராயணனை விரும்பினார். நேரமும் இடமும் இல்லாத சமயத்தில், மாயை தன் ஆதிக்கத்தைச் செலுத்தாதபோது ஒரு படி மேலே போனார். அவர் பிரம்மாவின் மற்ற மகன்களைத் தூண்டி, தன்னைப் போல் பிரம்மசரியத்தை அனுசரிக்கச் சொன்னார்.

பிரம்மாவின் மற்ற மகன்கள் பலரும் நாரதருடன் இசைந்து போனார்கள். அவர்கள் திருமணம் செய்து கொள்ள மறுத்தனர். இது பல முறைகள் நடந்தன. கோபம் கொண்ட பிரம்மா, நாரதரைச் சபித்தார்: 'மாயையின் மதிப்பை நீ பாராட்டும் வரை லோகாயத உலகில் நீ மாட்டிக்கொண்டிருப்பாய்!'

நாரதர் விஷ்ணுவிடம் போய், மாயையின் அர்த்தம் என்ன என்று கேட்டார். விஷ்ணு சொன்னார்: 'நீ என் தாகத்தைத் தணித்த பின் விளக்குகிறேன்.

நீ போய் சற்று நீர் எடுத்து வா!' என்றார்.

நாரதர் நீரை எடுத்துவர நதிக்குப் போனார். அவர் நீரைச் சேமித்துக்கொண்டிருக்கும்போது, ஒர் அழகான பெண்ணைக் கண்டார். அவளால் கவரப்பட்டு, அவளை அவளுடைய கிராமம் வரை தொடர்ந்து சென்று, அவளுடைய தந்தையிடம் அவளைத் தனக்கு மணம் முடித்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார். தந்தை சம்மதிக்கவே, இருவருக்கும் திருமணம் நடந்தது. விரைவில் நாரதர் தந்தையானார். பிறகு தாத்தா ஆனார். பின்னர் கொள்ளுத்தாத்தா ஆனார். நாரதருக்கு திருப்தி ஏற்பட்டது. திடீரென்று ஒரு நாள் மழை கொட்டியது. மழை நிற்கவேயில்லை. நதி பெருக்கெடுத்து கரை உடைந்தது. நீர் நாரதரின் வீட்டுக்குள் வந்துவிட்டது. அவருடைய மனைவி, குழந்தைகள், பேரக் குழந்தைகள், கொள்ளுப் பேரக் குழந்தைகள் எல்லோரையும் அடித்துச் சென்றுவிட்டது.

அவரையும் நீர் இழுக்கவே, அவர் உதவி வேண்டிக் கூச்சலிட்டார். திடீரென்று அவர் மேலே இழுக்கப் பட்டார். அடுத்த கணம் அவர் வைகுந்தத்தில் விஷ்ணுவின் அருகே அமர்ந்திருந்தார்!

'நாரதரே' என்ற விஷ்ணு, 'என் தண்ணீர் என்னவாயிற்று? நான் இன்னும் தாகத்துடன் இருக்கிறேன்!' என்றார். நாரதருக்கு ஒன்றும் புரியவில்லை.




கிருஷ்ணரை எடை போடும் வங்காள அச்சு ஓவியம்

எங்கே அவர் குடும்பம், அவர் மனைவியின் கிராமம், அந்த நதி?

'எங்கிருந்து இந்த வலியும் துன்பமும் வருகின்றன, நாரதா?' என்று விஷ்ணு சிரித்தபடியே கேட்டார். 'எனக்கு நீர் கொண்டு வருவதற்கு முன்பே மாயை பற்றி நீ முழுதும்

அறிந்திருப்பாய் என்று நான் நினைத்தேன்!' என்றார்.

புரிந்துகொண்ட நாரதர் தலை குனிந்து வணங்கினார். அவருக்கு மாயை பற்றித் தெரிந்திருந்தாலும் அதை அனுபவித்ததில்லை. பிரம்மா தன் மகன்களைத் திருமணம் செய்துகொள்ளத் தூண்டியதன் காரணம், அவர்கள் மாயையை அனுபவித்துத் தெரிந்துகொள்ளட்டும் என்பதற்காகத்தான்.

மாயா பற்றித் தெரிந்துகொள்வது வேறு, அனுபவிப்பது வேறு. மாயையை அனுபவித்தவரைத் தவிர, ஒருவரால் மாயையில் சிக்குண்டவர்கள் மீது அனுதாபம் காண்பிக்க இயலாது.

விஷ்ணு கூறினார்: 'உனக்கு அளவு கோல்கள் பற்றி எல்லாம் தெரிந்திருக்கும். உண்மைகள் தெரிந்திருக்கும். இருந்தாலும் உலக சுகங்களை அனுபவிக்கத் தொடங்கியதும், வீடு, குடும்பம், குழந்தைகள், கிராமம் என்று நீ எல்லாவற்றையும் மறந்துவிட்டாய். மாயையையும், பிரம்மாண்டத்தையும் நீ புரிந்துகொண்டிருந்தால், இன்பத்தையும் துன்பத்தையும் அறிந்துகொண்டிருப்பாய். ஆனால் அது நடக்கவில்லை. அதுதான் மாயையின் தாக்கம். நீ இப்போது மாயையை அனுபவித்துவிட்டதால், நீ சென்று மக்களைச் சந்திக்க வேண்டும், அவர்களுடைய அளவுகோல்களை அசைத்து, அவர்களின் உண்மைக்கு சவால் விடுத்து, லோகாயத உண்மைக்கு வெளியேதான் மாயையின் பதில்களை எதிர்பார்க்க முடியும் என்ற உண்மை புரிய வேண்டும். அவர்களை ஆன்மிகப் பாதைக்குச் செல்லுமாறு நீ அவர்களைத் தூண்ட வேண்டும் என்கிறேன்.'

அதனால்தான் ஹிந்து புராணத்தில் நாரதர் கலகம் உண்டாக்குபவராகப் புகழ் பெற்றார். ஒப்பிடுவதன் மூலமும் வதந்திகளைப் பரப்புவதன் மூலமும் மகிழ்ச்சியான உலக வாழ்க்கையைக் குழப்புகிறார். ஒரு முறை நாரதர் கிருஷ்ணரின் இல்லத்துக்கு வந்தார். கிருஷ்ணரின் மனைவிகள் அவருக்கு ஒரு பரிசு அளித்தார்கள். 'கிருஷ்ணரை எனக்குப் பரிசாகத் தாருங்கள்' என்றார் நாரதர். அந்த வேண்டுகோளைக் கேட்டு மனைவிகள் அதிர்ச்சி

அடைந்து, தங்கள் வாக்கைக் காப்பாற்றத் தயங்கினார்கள். 'அப்படியானால், கிருஷ்ணரின் எடைக்கு ஈடாக எதையாவது நீங்கள் எனக்குத் தர வேண்டும்' என்றார் நாரதர். துலாக்கோல் கொண்டுவரப்பட்டு, ஒரு பக்கத்தில் கிருஷ்ணர் அமர்ந்தார். அடுத்த பக்கத்தில் சத்யபாமா தன்னிடமிருந்த அத்தனை தங்க ஆபரணங்களையும் வைக்க, கிருஷ்ணரின் பக்கம் கீழே தாழ்ந்தே இருந்தது. இது வாழ்க்கையில் தங்கத்தையும் விட மேலான பொருள்கள் இருக்கின்றன என்பதைக் காண்பித்தது. பிறகு இன்னொரு மனைவி ருக்மிணி ஒரு துளசி இலையைக் கொல்லைப்புறத்தில் இருந்து கொண்டுவந்து தங்க ஆபரணங்கள் மீது வைத்தாள். அதுதான் கிருஷ்ணரின் பக்தர் காட்டும் அன்பின் அடையாளம். உடனே கிருஷ்ணர் உட்கார்ந்து இருந்த தட்டு உயர்ந்தது. இது எதைக் காண்பிக்கிறது என்றால், வாழ்க்கையில் எதையும் உடைமையாகக் கொள்வது அல்ல, அன்பைக் காண்பிப்பதுதான் முக்கியம் என்பதை. ஒரு மனிதர் தன் மீது அன்பு காண்பிக்கப்படும்போது, செல்வம் மிகுந்து இருப்பவரைவிட, எப்போதுமே மகிழ்ச்சியோடு இருக்கிறார். எனவே, நாரதரின் கலகம் கிருஷ்ணரின் வீட்டில் கூட ஞானத்தை அளித்தது.




புழக்கடையில் வளரும் துளசிச் செடி.

ஓர் இடத்தில் நாரதர் வந்துவிட்டால், அவர் இரண்டு செயல்கள் செய்கிறார். ஒரு கலகத்துக்கு வித்து இடுகிறார்.

அடுத்து 'நாராயணா, நாராயணா' என்று ஜெபம் செய்யத் தொடங்கிவிடுகிறார். இருப்பதிலிருந்துதான் குழப்பம் உருவாகிறது; அதை அளவிட முடியும். எனவே மாயையில் இது அடங்கிவிடுகிறது. பெரும்பாலும் மக்கள் சிக்கலில் மாட்டிக்கொள்ளும்போது, ஜெபிப்பதை மறந்துவிடுகிறார்கள். ஜெபத்தைக் கேட்கும் சிலர் மாயைக்கு எதிரான சக்தியிடம்-நாராயணனிடம்-சரணாகதி அடைகிறார்கள். இது அமைதியில், பிரம்மத்தைப் புரிந்துகொள்வதில் முடிகிறது.

விஷ்ணுவின் வைகுந்தத்துக்குச் செல்ல வழி வகுக்கிறது.

புராணத்தில் வரும் கதைகள் பலவற்றில், பிரம்மா பிரம்மானந்தத்திலிருந்து வெளியேறி வைகுந்தத்துக்குப் பயணம் செய்வதில்லை. அவர் தனைத் தானே திருப்தி செய்துகொள்கிறார். அவர் உலகைக் கட்டுப்படுத்துவதில் போய் முடிகிறது. இன்பத்தையும் துன்பத்தையும் தாண்டிச் செல்லாமல், துன்பத்தைக் குறைத்துக்கொண்டு இன்பத்தை அதிகரித்துக்கொள்கிறார். தன் கற்பனையிலேயே அடைபட்டுப் போய்விடுகிறார். உலகம் ஒரு வாகனமாக இல்லாமல், அது போய்ச் சேரும் இடமாகிவிடுகிறது. தான் நம்பும் உண்மையைப் பிடித்துக்கொள்ள, பிரம்மா தன் வாழ்க்கை முழுதையும் செலவிடுகிறார். தன் சக்தியை எல்லாம் செலவிட்டு, தன் அளவுகோலை மட்டுமே நிலை நாட்டுகிறார்.


மூவுலகையும் குறிக்கும் திரிசூலத்தை சிவபெருமான் வைத்திருக்கிறார்-இயற்கையான, சமூக மற்றும் கற்பனையான.
விஷ்ணு கையில் சக்கரத்தை வைத்திருப்பது இயற்கையின் சுழற்சியைக் காட்ட.
விஷ்ணு கையில் வைத்திருக்கும் சங்கு, இயற்கைச் சுழற்சியில் இருந்து மனித குலம் கட்டறுத்துக்கொண்டு வருவதைக் குறிக்கிறது.
விஷ்ணு குடும்பத்தலைவர் மாதிரி, ஆடைகள் அணிந்திருக்கிறார். அதற்கு விவசாயிகள், நூல் நூற்பவர்கள், நெசவாளர்கள் மற்றும் சாயமிடுவோர் தேவை.
சிவபெருமான் ஒரு சன்னியாசி. புலித்தோலை அணிந்திருப்பவர்.

சிவபிரானும் விஷ்ணுவும் இணைந்த உருவம்: ஹரா-ஹரி.

பிரம்மாண்டம் தன் படைப்பு என்பதை பிரம்மா மறந்துபோய்விடுகிறார். மாயையும் தன் படைப்புதான் என்பதையும் மறந்துவிடுகிறார். இயற்கை தன் அன்னை என்பதை மறந்துவிடுகிறார். மாறாக, உண்மையை அடக்கி ஆண்டு, தன் வசப்படி ஆட வைக்கிறார். ஆனால் இயற்கையை பிரம்மாவால் அடக்க முடியாது. பிரம்மா ஷடரூபாவைத் தன் விருப்பத்துக்கு ஏற்றவாறு ஆட வைக்க முயல்கிறார் என்று ஒரு கதை உண்டு. பிரம்மாண்டத்தைத் தன் வசப்படுத்த அவர் முயல்கிறார். ஆனால் அந்த தேவி ஓடிவிடுகிறாள்!

பிரம்மா அவளைத் தொடர்கிறார். எப்படியாவது அவளைப் பிடித்து வசப்படுத்திவிடப் பார்க்கிறார். அது பயனற்றது என்பதை அறிந்த பின்னரும் அந்த முயற்சியைக் கைவிடுவதாயில்லை. பிரம்மாண்டத்தைத் தொடரும் மாயையின் வசப்பட்ட இந்த பிரம்மா, ஞானம் கிட்டாதவர். உலகில் நிதர்சனமாகத் தெரியும் பொருட்களை வசப்படுத்த விழைபவர். தன்னைச் சுற்றியிருக்கும் உலகை ஆள விரும்புபவர். அவருடைய விருப்ப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்று நினைப்பவர். இவர்தான் பிரம்மா, அளவுகோல்களை எல்லாம் உருவாக்குபவர். அவர் வணங்கப்படுவதில்லை.

அவருடைய ஆசையினால், பிரம்மா தன் தலைகளை நீட்டுகிறார். பிரம்மாவின் தலைகள், முன்முடிவுகளோடு இருக்கிற, ஒரு நினைப்புக்குள் அடைந்து கிடக்கிற மனித சிந்தனைகளின் பிரதி நிதிகளாக இருக்கின்றன. முடிவாக், பிரம்மா தன் ஐந்தாவது தலையை நீட்டுகிறார், தன்னைத் தானே யார் என்று அறிந்துகொள்ள. இதுதான் பிரம்மாவின் சுய சித்திரம். தான் உருவாக்கிய உலகில் தனக்கு முக்கியத்துவம் தேட இது தூண்டுகிறது. சில வேளைகளில் அகந்தை எனப்படும் இந்த ஐந்தாவது முகத்தை சிவபெருமான் சிதைத்துவிடுகிறார்.


மோகினி கையிலிருக்கும் பந்துகள் உண்மையானவை அல்லது பிரம்மாண்டத்தைக் குறிப்பவை. மனிதர்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடுபவை.
மோகின் பிரம்மாண்டத்தை அனுபவிக்கிறாள் என்றாலும், அது கற்பனையில் உருவானது. பிரம்மாண்டத்தையும் கடந்து, பிரகிருதி அல்லது இயற்கை இருக்கிறது. அது காணத்தக்க உண்மை.

கவர்ச்சிகரமான மோகினியாக ஒரு கேரள நாட்டு சுவர் ஓவியம்.

சிவபெருமான் பிரம்மாவின் உலகாயத அதீத ஆசையை உணர்ந்து அவர் தலையை வெட்டிவிடுகிறார். அதனால்தான் சிவபெருமானை காபாலிகா-தலையைக் கொய்தவன் என்று அழைக்கிறோம். சிவபெருமான் பைரவன்-பயத்தை வென்றவர். அவர் பிரம்மாவை பயத்திலிருந்து விடுவிக்கிறார்.

ஆனால் அத்தோடு நின்றுவிடுவதில்லை. விஷ்ணுவின் கொப்பூழிலிருந்து தாமரை மலர்வதை மாற்றியமைக்கிறார்.

தலை இல்லாமல், பிரம்மா இயற்கையைப் பார்ப்பதை நிறுத்திவிடுகிறார். எந்தச் சிந்தனையும் இல்லை. எந்த அளவுகோலும் இல்லை. எந்தவிதத்திலும் உண்மையை உணர வாய்ப்பில்லை. கர்மாவும் எதுவும் இல்லை. எனவே, வளர்ச்சியும் இல்லை. ஒன்றுமேயில்லாத சூனியம். நாராயணனின் கனவுகளற்ற நிலைக்குத் திரும்ப வேண்டியதுதான். அங்கே ஒரு சேஷன் இருக்கிறான். அது சூனியம். அசைவற்ற நிலைக்குத் திரும்பியாயிற்று.

அப்படியே உறைந்து போய்விட்ட நிலை. எந்தவித ஓசையும் கிடையாது. அமைதி மட்டுமே.

பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் மூவரும் ஆன்மிகத்தின் மூன்று அம்சங்கள். இந்த மூன்று ஆன்மிக அம்சங்களும் நிதர்சனத்தின் மூன்று பாதைகள்.

பிரம்மா ஆன்மிக உண்மையை வைத்துக்கொண்டு நிஜத்தில் இருந்துவிடுகிறார். பிரம்மா அளவுகோல்களை உண்டாக்கினாலும், தன்னை அறிய முற்பட்டு, அதில் சிக்கிக்கொண்டுவிடுகிறார். பிரம்மா உலகாயதத் தளையிலிருந்து விடுபட விஷ்ணு உதவுகையில் அதைக் கொண்டாடுகிறார்.

பிரம்மா உலகாயுதத் தளையிலிருந்து விடுபட சிவபெருமான் உதவுகையில் அதைக் கொண்டாடுவதில்லை. தவிர்த்துவிடுகிறார்.

விஷ்ணுவின் வழியை பிரவிருத்தி மார்க்கம் அல்லது வெளிப் பார்வை என்று சொல்லலாம். சிவபிரானின் வழி

நிவிருத்தி மார்க்கம் அல்லது உள் நோக்கிய பார்வை எனலாம். அவளைக் கண்டு பரவசம் அடைந்துவிடாமல் விஷ்ணு மாயையுடன் விளையாடுகிறார். சிவபிரான் அவளை முற்றிலுமாக நிராகரித்துவிடுகிறார். எனவே, விஷ்ணு தெய்வீகத்தில் உலகத்தோடு தொடர்பு உடையவராக இருக்கிறார். ஓர் அரசனாக, ஒரு போர் வீரனாக, ஒரு காதலனாக இருக்கிறார். சிவபிரானோ ஒரு சன்னியாசி போல, வெளியுலகைப் பார்க்க விரும்பாமல் கண்களை மூடிக்கொண்டு, இருக்கிறார்.

சிவபிரான் உலகத்தைப் பார்க்க விரும்பாமல் கண்களை மூடிக்கொண்டுவிடுகிறார். இயற்கையுடன் ஈடுபட விரும்பவில்லை. புராணங்களில், எல்லா உஷ்ணங்களையும் அவர் தனக்குள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதால் தான் அவர் ஒரு நெருப்புத் தூணாக இருக்கிறார். அவரைப் பொறுத்தவரை எதுவும் நகர்வதில்லை, ஓடுவதில்லை. தண்ணீர் பனிக்கட்டியாகிவிடுகிறது. எல்லாமே உறைந்துபோய் நின்றுவிடுகின்றன. உலகம் செயலிழந்து விடுகிறது. அவரை நோக்கி, காமன் தன் அம்பை எய்யும்போது, தன் மூன்றாவது கண்ணைத் திறந்து, அவனைச் சுட்டெரித்து சாம்பலாக்கிவிடுகிறார்.

கண்ணைத் திறந்து சிவபெருமான் உலகின் உண்மையை உணர வேண்டும். அவரை யாராவது மயக்க வேண்டும். விஷ்ணு மயக்குபவளாகத் தோன்றுகிறார். அவர் மோகினி அவதாரம் எடுத்து அவர் முன் நடனமாடுகிறாள். சிவபிரான் தம் கண்களைத் திறந்து அவளைப் பார்த்துவிட நேர்கிறது. அவருக்குத் தெரிகிறது, விஷ்ணுதான் மோகினி என்று. அவள் தெய்வீக உருவானாலும், நிஜ உலகுக்கு வந்திருப்பவள். அவள்தான் விஷ்ணு; இயற்கையுடனும், மாயையுடனும் விளையாட வந்திருப்பவள். அவள் விஷ்ணு; நேரத்தையும், காலத்தையும் அடக்கியாள்பவள்.

பிரம்மத்துடன் ஒன்றிணைந்துவிட்ட அவள், ஆன்மிக உண்மை தன் விளையாட்டுக் களத்தில்-ரங்க பூமியில்-வந்து சேர்ந்துகொள்ள வேண்டுகிறாள். அதன்மூலம் உலகாயத லீலைகளில் இணைந்து கொள்ளச் சொல்கிறாள்.

# 2
# மத்ஸ்யாவின் ரகசியம்
## மனிதகுலம் மட்டுமே கருணை காட்ட முடியும்.
## பயன்படுத்திக்கொள்ள முடியும்.






விஷ்ணுவின் அடையாளத்துடன் ஒரு ஞானி.




கோயிலின் நுழைவு வாயில்

விஷ்ணுவின் புனித அடையாளங்களை நெற்றியில்தான் அணிய முடியும். மிருகங்களிலிருந்து மனிதனைத் தனித்துக் காட்ட உதவும் மூளையைச் சுட்டிக்காட்டுவதற்காக இருக்கலாம்.

முன்புற மூளை மனிதர்களைச் சிந்திக்க வைக்கிறது. நாம் எவருடைய தயவிலும் இல்லாத உயர்ந்த உலகை எண்ணிப் பார்க்க நம் கற்பனை உதவுகிறது. கற்பனை நம்மைத் தூண்டுகிறது. நாம் எதைக் கற்பனை செய்கிறோமோ அதை அடையத் தூண்டுகிறது. அவற்றை அடையவும், நம் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், மெருகேற்றவும் வழி வகைகளை விசாரிக்கிறோம். நாம் வாழ்வதற்கும் மேலான உத்திகளைக் கண்டறிய முனைகிறோம். வேறுவகையில் சொல்வதானால், இந்தப் பெருமூளை நம்மைக் கலாசாரத்தை உருவாக்க நிர்ப்பந்தம் செய்கிறது.

இந்தப் பெருமூளை பசு அல்லது மிருகத்தை புருஷனாக, மனிதனாக மாற்றுகிறது. அது பிரம்மாவை உருவாக்க,

அவர் பிரம்மத்தை நாடுகிறார்.

பெருமூளை ஆன்மிக உண்மையின் நிதர்சன உருவம். விஷ்ணுவிலிருந்து அது தோன்றுவதால் நாம் விஷ்ணுவைப் பார்க்க முடிகிறது.

மனிதர்களுக்கு மனம் இருப்பதால், அவர்களால் சிந்திக்க முடிகிறது. அதனால்தான் மனிதர்களை மனவாஸ் என்கிறார்கள். முதல் மனிதன் மனு.

முதல் கதையே விஷ்ணு மீன் வடிவில் எவ்வாறு மனுவைச் சந்திக்கிறார் என்பதுதான்.

மனு நதியில் தன் பணிகளை முடித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு மீன் அவரை அணுகி, 'என்னைப் பெரிய மீனிடமிருந்து காப்பாற்று. ஒரு நாள் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்!' என்றது. இந்து புராணங்களில் பெரிய மீன் சிறிய மீனைத் தின்பது மத்ஸ்ய நியாயத்தை, மீன் உலக நியாயத்தைக் குறிக்கிறது. அது காட்டுத்தனமானது.

மனிதகுலத்தோடு பழக முதலில் விஷ்ணு மீன் வடிவம் எடுத்தார் என்பது எதேச்சையாக நடந்ததல்ல. அது காட்டுத்தனத்தை நமக்கு அடையாளம் காட்டத்தான். மனிதகுலத்தால் மட்டுமே இந்த நீதியை மாற்றியமைக்க முடியும்.

காட்டில் எந்த நீதியும் கிடையாது. தகுதியுள்ளவர் மட்டுமே தாக்குப்பிடிக்க முடியும்; வலிமையே வெல்லும். வலிமை என்பது உடல்வலுவைக் குறிப்பதல்ல. சிந்தனை வலுவையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறது. ஒருவன் தன் வலுவைப் பயன்படுத்தி, எதாவது குறுக்குவழியில் உயிர்வாழ்ந்துவிடலாம். இதில் தவறு, சரி என்று கூற முடியாது. சரியான வழிமுறை, தவறான வழிமுறை என்றும் எதையும் கூற முடியாது. தன்னைக் காத்துக்கொள்ள ஒருவன் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம். ஓர் ஆடு புதிதாய் வளர்ந்த புல்லை மேயலாம். ஒரு சிங்கம் ஆடு ஒன்றைத் தின்னலாம்.




விஷ்ணுவின் மச்சாவதார மைசூர் ஓவியம்

அடிபட்ட சிங்கத்தை அது தானாகவே உணவைப்

பார்த்துக்கொள்ளட்டும் என்று விடப்படுகிறது. முட்டையிடப் போகும் பாம்பு ஒன்றை மேலிருந்து ஒரு பருந்து பறந்து வந்து அதைப் புசிக்கலாம். குட்டிபோடப் போகும் மானை ஒரு குள்ள நரி தாக்கலாம். மிருகங்களைக் கொடூரமானவை, உணர்ச்சியற்றவை என்று மனித குலம் கூறலாம். ஆனால் மிருகங்கள் அப்படி நினைப்பதில்லை. அவற்றின் நோக்கமெல்லாம் எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்பதுதான். தங்கள் செயலை அவை நினைத்துப் பார்ப்பதில்லை. அவற்றால் அது முடியாது.

புலியும் ஆடும் ஒன்றாக வாழும் இடத்தில், நாகமும் பருந்தும் நண்பர்களாக இருக்கும் இடத்தில், வாழும் எல்லா உயிரினங்களிலும், மனிதகுலம் மட்டும்தான் வலிமையே சரியானது என்று கூறுவதில்லை. இந்தக் கற்பனையிலிருந்து வருவதுதான் சொர்க்கம்-எல்லாமே மிகச் சரியாக இருக்கும் இடம். இதைப் போன்ற இடத்தை உருவாக்கும் லட்சியம்தான் மனிதன் கலாசாரத்தைப் படைக்கத் தூண்டுகிறது.

வேறு எந்த ஜீவராசிகளும் செய்யாததை மனிதன் செய்கிறான். சிறு மீன் குரல் கொடுக்கும்போது அவன் அதைக் கவனிக்கிறான். தன் உள்ளங்கையில் அதை வைத்துக்கொண்டு சிறு பானையில் விடுகிறான். வேறு மாதிரி சொல்வதானால், மனு இயற்கையில் குறுக்கிடுகிறார்.

இந்தக் குறுக்கீட்டுக்கு மூலமாக இருப்பது கருணை. மனு இயற்கையை மாற்றிவிடுகிறார். மீன் வைத்திருக்கும் சிறு பானை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கிறது, மனிதன் உருவாக்கும் நிலையைத் தோற்றுவிக்கிறது. சிறிய மீன் பெரிய மீனிடமிருந்து பாதுகாக்கப்படுகிறது.

இந்த உணர்வும் செயல்பாடும்தாம் மனிதன் சமூகத்தை உருவாக்க உதவுகிறது. காட்டு தர்பார், சவால் விடப்படுகிறது. வலுவானவன் பலகீனமானவனைப் பாதுகாக்க முன்வருகிறான். பலகீனமானவனுக்கு வலுவானவன் வாய்ப்புகள் கொடுக்கிறான். இந்தக் கருத்துதான் தர்மம் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இதன் மூலம் 'த்ர்' என்ற சொல். இதற்கு 'பாதுகாப்புக் கொடு'

அல்லது 'சேர்த்துக்கொள்' என்று பொருள்.


மேற்புற மனித உடல், மனித சாத்தியக்கூறை நினைவுபடுத்துகிறது.
மேலே தூக்கிய கை, ‘அஞ்சாதே’ என்று சொல்கிறது.
கீழே காட்டும் கை, ‘உனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்’ என்கிறது. பற்றாக்குறைக்கு பதில் சொல்கிறது.
மீன் வடிவம் மிருகச் சிந்தனைகளைக் குறிக்கிறது. எல்லோரும் சிறிய மீன், காக்க வேண்டும் என்கிறார்கள். தாங்கள்தாம் பெரிய மீன் என்று எவரும் ஏற்றுக்கொள்வதில்லை.

விஷ்ணுவின் முதல் அவதாரம் மத்ஸ்ய (மீன்)-மைசூர் ஓவியம்.

எனவே, தர்மம் என்பது செயற்கையான வகையைச் சேர்ந்தது. தர்மம்தான் மனிதனுக்கு இயற்கையானது என்று வாதாடலாம். மத்ஸ்ய நியாயத்தை மறுபதுதான் புருஷார்த்தம். அதாவது மனிதகுலம் இருக்கிறது என்பதை நிலை நாட்டுவது. அதனால்தான் மனிதகுலம் உருவாக்கப்பட்டது.

நாம் காட்டு தர்பாரைப் பின்பற்றும் வரை, நாம் பசுக்கள் அல்லது மிருகங்கள்தாம். அதைத் தாண்டி நாம் இருக்கும்போதுதான், தர்மத்தை நம்மால் நிலை நாட்ட முடிகிறது; நம்மால் மனிதர்களாக இருக்க முடிகிறது.

மனுவின் நீர்ப் பானைக்குள் மீன் இருப்பது, மனுவின் சொத்து. அவன் மீனுக்குக் கொடுக்க வேண்டும். சொத்து என்ற சிந்தனை நமக்கு நினைவுபடுத்துவது மனு இன்னும் மிருகம்தான்; அவருடைய செல்வாக்கு இடத்தைத்தான் தீர்மானிக்க வேண்டும்.

இயற்கையைப் பொறுத்தவரை, மிருகங்களுக்கு ஓர் இடம் இருக்கிறது. தங்கள் சிறுநீரால் அவை குறித்துவைத்துவிடுகின்றன. அந்தக் குறிப்பிட்ட இடத்துக்குள் தங்களுக்கு வேண்டிய இரை கிடைக்க உறுதி செய்துகொள்கிறது. அந்தக் குறிப்பிட்ட இடத்துக்குள் தன் வம்ச விருத்திக்கான வகையில் அது செயல்பட முடிகிறது. மிருகத்துக்கு அது உயிரோடு இருக்க ஓர் இடம் முக்கியமானது. இன்னொரு மிருகம் அந்தக் குறிப்பிட்ட இடத்துக்குள் வர வேண்டுமானால், அது தன் முந்தைய எசமானரோடு மோத வேண்டும். காட்டு தர்பார் நியாயத்தை ஒட்டி, அப்படி மோதுவது கொடுமையாக இருக்கும்.

ஆனால் மனு கூறும் 'சொத்து,' மிருகத்தின் 'இடம்' எனப்படும் கருத்திலிருந்து மாறுபட்டது. இடத்தைத் தானாகவே எடுத்துக்கொண்டுவிட முடியாது. இடத்தை தானமாகக் கொடுத்துவிட முடியாது. இடத்துக்காகப் போராட வேண்டும். எந்த விதிமுறையும், சட்டமும் அதைப் பாதுகாப்பதில்லை. குறிப்பிட்ட இடம் இல்லை என்றால் மிருகங்கள் வாழ முடியாது.


மிருகங்கள் ஆண்பாலுக்கு அஞ்சுகின்றன. மனிதர்களில், தலைவன் அதிகாரத்தால் மரியாதை பெற வேண்டும். அடுத்தவனை அச்சுறுத்தி மரியாதை பெறக்கூடாது.
பானை வயிறு கூடுதலான செல்வத்தைக் குறிக்கிறது.
சிம்மாசனம் சட்டதிட்டங்கள் உருவாக்கிய அதிகாரத்தைக் குறிக்கிறது. இயற்கையில், மிருக பலம் என்பது சக்தியை அடிப்படையாகக் கொண்டது. சட்டதிட்டங்கள் மனிதர் உருவாக்கியவை.
சமூகத்தைப் போலவே, மண்பானையும் மனிதனால் உருவாக்கப்பட்டது. இயற்கையில், மண்குடம் ஏதும் இல்லை. மிருகங்கள் தங்கள் தாகத்தைத் தீர்க்க நீர்நிலைகளுக்குப் போக வேண்டும். அவை தண்ணீரைச் சுமந்து கொண்டு இருப்பிடம் செல்ல முடியாது.

மனிதகுலத்தின் சொத்து, தேவையைப் பொறுத்தது மட்டுமல்ல. ஒரு விதத்தில் பார்த்தால், மனித சொத்து என்பது கருணை அடிப்படையில்-மேலும் அதிக மக்களுக்கு, மீன் போன்ற உறவே இல்லாத மக்களுக்கு-வழிவகை செய்வதற்குத்தான். அந்தக் கருணை பச்சாத்தாபத்தால், மற்றவர்களின் அச்சத்தால், வருகிறது. இன்னொரு விதத்தில் பார்த்தால், மனிதனின் சொத்து பேராசையால் வருவது. உடனடி தேவை இல்லை என்ற போதும் தனக்காக மேலும் மேலும் பதுக்கி வைப்பது. இந்தப் பேராசை அச்சத்தால் வருகிறது. மனிதகுலத்துக்கே உரிய சந்தேகம் என்ற கற்பனை காரணமாக வருவது. பேராசை காரணமாக நாம் பூமியின் ஆதாரங்களைச் சுரண்டுகிறோம். நம்முடன் இருப்பவர்களையும் நாம் சுரண்டுகிறோம். ஆக, சொத்து என்பதன் வேர் நம் கற்பனையில்தான் இருக்கிறது. கற்பனை, சொத்துக்கு இட்டுச் செல்கிறது. சொத்து சொந்தமாகிவிடுகிறபோது, அதுவே தர்மம் ஆகிவிடுகிறது. கற்பனை அச்சத்தைப் பெரிதாக்கி, சுரண்டலை ஆதரிக்கும்போது, சொத்து நம்முடையது அல்லாமல் அந்நியமாகிவிடுகிறது. இதுவே அதர்மம்.

மிருகங்கள் விரட்டப்படும்போது மட்டுமே தங்கள் இடத்தைவிட்டுப் போகின்றன. ஆனால் மனிதர்கள் தன்னிச்சையாக சொத்தை விட்டுக்கொடுக்கும் தன்மையுள்ளவர்கள். இது ராமாயணத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ராமர், விஷ்ணுவின் அவதாரமாக உலகில் வாழ்ந்தவர்.

ராமாயணத்தில், அரக்கர்களின் அரசன் ராவணன், யட்ச அரசனான தன் ஒன்றுவிட்ட சகோதரன் குபேரனை இலங்கையை விட்டே துரத்திவிட்டு நாட்டைத் தன் உடைமையாக்கிக்கொண்டான். ராமர் தன் தம்பி பரதன் அயோத்தி நாட்டை ஆள சம்மதித்தான். பரதன் அயோத்தியின் அரசன் ஆகிறான். தன் இளைய மகன் பரதனுக்கு நாட்டை விட்டுக் கொடுக்குமாறு தந்தை ராமரிடம் கேட்க, தயக்கமோ கலக்கமோ இன்றி ராமர் நாட்டை பரதன் ஆள விட்டுக்கொடுக்கிறார். எனவே ராமர்

தர்மத்துக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறார். ராவணன் அதர்மத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறான். ராமர் தன் மனித ஆற்றலை அறிந்துகொண்டதால் அவர் வணங்கத் தகுந்த கடவுளாகக் கருதப்படுகிறார். ராவணன் தன் மனித ஆற்றலைப் புரிந்துகொள்ளவில்லை. அதுதான் அவனை அரக்கனாக, மரியாதைக்கு உரியவன் அல்லாதவனாக ஆக்கியது.



சுக்ரீவன் வாலியின் பலத்தோடு கள்ளத்தனமாக மோதுகிறான், மனிதரான அயோத்தி ராமரின் துணையோடு.

சுக்ரீவனைவிட வாலி பலசாலி. ஆனால் ராமர் ஒரு புதரின் பின்னால் மறைந்திருந்து அம்பு எய்து கொன்றுவிடுகிறார்.

வாலி சுக்ரீவ வதம்-மைசூர் ஓவியம்.

மீன் வளர்ந்து பெரிதாகியதால், மனு அதைச் சிறு பானையிலிருந்து பெரிய பானைக்கு மாற்றினான். மீன் பெரிதாக வளர வளர, கருணை கொண்டு மனு பானைகளைப் பெரிதாக மாற்றிக்கொண்டே இருந்தான்.

ராமாயணத்தில் இரண்டு குரங்குகள் கிஷ்கிந்தை என்ற இடத்துக்காகச் சண்டையிடுகின்றன. அவர்கள் இருவரும் வாலி-சுக்ரீவன் என்ற சகோதரர்கள். ரிக்ஷாவின் மகன்கள். இரண்டு சகோதரர்களும் நாட்டைப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஆனால் தவறாகப் புரிந்துகொண்டதால் வாலி தன் சகோதரன் சுக்ரீவனை நாட்டைவிட்டு வெளியேற்றிவிடுகிறான். வாலி கட்டாயமாக சுக்ரீவனின் மனைவி ரூமாவைக் கொண்டுசெல்லப் பார்த்தான். ராமராக விஷ்ணு இங்கே அவதாரம் எடுக்கும்போது அவர் இந்த இருவருக்கும் இடையே குறுக்கிடுகிறார். இரண்டு சகோதரகளும் மோதிக்கொள்ளும்போது, ராமர் புதரின் பின்னே இருந்து அம்பை எய்ய, வாலி மீது அது பாய்கிறது. 'இது தர்மத்துக்கு எதிரானது' என்று வாலி எதிர்ப்புத் தெரிவிக்கிறான். காட்டில் வசிக்கும் குரங்கு, காட்டு தர்பார் சட்டத்தின்படிதான் இறக்க வேண்டும் என்று ராமர் வாதாடுகிறார்.

வாலிக்கு தர்மத்தைப் பற்றிக் கூற எந்த உரிமையும் இல்லை. ஏனென்றால், தர்மம் என்பது சொத்தைப் பங்குபோட்டுப் பிரித்துக்கொள்வது. சகோதரனையும் சேர்த்துக்கொண்டுதான், தள்ளிவைத்துவிட்டு அல்ல. வாலி ஒரு மிருகத்தைப் போல் நடந்துகொண்டான் நாட்டைப் பங்கு போட்டுக் கொள்ள மறுத்தான். நாட்டின் ஒரு பகுதியையும், அவன் மனைவியையும் தர மறுத்தான். எனவே சுக்ரீவன் ஏமாற்றித்தான் தன் தம்பியைக் கொல்ல நேர்ந்தது. அதர்மத்தின் பின்னணியில், காட்டு தர்பார் சட்டம் சரியானதே.

வாலி இறந்துவிட, சுக்ரீவன் கிஷ்கிந்தை அரசனாகிறான். சுக்ரீவன் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ராமர் கேட்டு, வாலியின் மகன் அங்கதனை அவனுடைய

வாரிசாக நியமிக்கச் சொல்கிறார். வனத்தில் மூத்தவன் பட்டம் ஏற்றவுடன், தூக்கியெறியப்பட்ட தலைவனின் குழந்தைகள் கொல்லப்படுவார்கள். ஆனால் தர்மம் கருணையின் அடிப்படையில் அமைந்தது. ராமர் சுக்ரீவனிடம் மனதை மாற்றிக்கொள்ளச் சொல்கிறார்.


எப்படியாவது புறாவைக் காப்பேன் என்கிறார் சிபி.
தன் சதையையே பருந்துக்கு அளிக்க முன்வருகிறார்.
பருந்துதான் வில்லன், புறா பாவம், சிபி ஹீரோ என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். இவை எல்லாம் மனிதன் நினைப்பவை.

பருந்திடமிருந்து புறாவைக் காக்கும் சிபி-முகலாய ஓவியம்.

வாலி மத்ஸ்ய நியாயத்தைக் கடைப்பிடித்தான் என்றால், சுக்ரீவன் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வாலி கிஷ்கிந்தையைப் பங்கு போட்டுப் பிரித்துக்கொள்ள முடியாததாக இடமாகப் பார்த்தான். சுக்ரீவன் கிஷ்கிந்தையை சொத்தாகப் பார்த்து, தன் முன்னாள் எதிரியின் மகனுக்கு அளிக்க வேண்டும். ஆக, ராமரின் தர்மம் அடங்கிய பானை அயோத்தியை மட்டுமே அடக்கியிருந்தது போய், இப்போது கிஷ்கிந்தையையும் சேர்த்துக் கொண்டு பரந்து விரிந்தது.

பெரிய பானைக்கு ஆசைப்படுவது என்பது உணர்வைப் புரிந்துகொள்ளாமலும், திருப்தி அடையாமலும் இருப்பதைக் காண்பிக்கிறது. வனங்கள் சீராக்கப்பட்டு மனித சமூகத் தேவைக்கு உட்படுத்தும் போது, இயற்கை மேன் மேலும் கலாசாரத்துக்காக அழிக்கப்படுகிறது. மனிதனின் சட்டங்கள் சிலவற்றை சேர்த்துக்கொள்ளவும், சிலவற்றை நீக்கவும் செய்கிறது; அப்படிச் செய்யும்போது இயற்கையை அதன் விளிம்புக்குத் தள்ளிவிடுகிறது. இந்த மகாபாரதக் கதையிலிருந்து உங்களுக்கு இது புரியும்:

சிபி என்றொரு மன்னன். பருந்திடமிருந்து ஒரு புறாவை கருணையோடு காப்பாற்றுகிறான். பருந்து மன்னனைக் கேட்டது: 'நான் எதைச் சாப்பிடுவேன்?' மன்னன் 'இன்னொரு புறாவைச் சாப்பிடு' என்றான். 'இந்தப் புறாவிடம் உன் கருணையைக் காட்டுவதற்காக நீ இன்னொரு புறாவை பலிகொடுக்கிறாய். இது நியாயமா?' மன்னன் உடனே ஓர் எலியையோ ஒரு பாம்பையோ உண்ணச் சொல்கிறான். 'இந்தப் புறா வாழ்வதற்காக அவை ஏன் சாக வேண்டும்?' என்று கேட்டது பருந்து. இந்தக் கேள்விக்கு பதில் இல்லை.

புறாவுக்குக் கருணை காண்பிப்பதால், மன்னன் பருந்துக்குக் கொடுமை செய்கிறான். புறாவைச் சேர்த்துக்கொண்டு, பருந்தை வெளியே தள்ளி வைக்கிறான். எதற்காகப் புறா காப்பாற்றப்பட வேண்டும்? பருந்து ஏன் பட்டினி கிடக்க வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில்கள் இல்லை.




பலராமர்: மைசூர் ஓவியம்




பஹாரி சிறுவடிவ ஓவியம்-பலராமரும் யமுனையும்.

இவை மனித சமூகத்துக்கு விடப்பட்ட சவால்கள்.

மனிதன் தன் கற்பனைக்குத் தகுந்த மாதிரி, எல்லா உயிரினங்களும் பாதுகாப்பாக இருக்க, ஒரு சொர்க்கத்தை சமூகத்தில் உருவாக்குகிறான். என்றாலும், இந்த நடைமுறையில், உலகில் மற்றவைகளைவிட சில கூடுதல் பாதுகாப்புடன் இருக்கின்றன. ஆகவே, கலாசாரம் எப்போதுமே முழுமையானதல்ல. விஷ்ணு புராணங்கள் எல்லாமே இந்த வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுகின்றன. ஏனென்றால் உலகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுள் விஷ்ணு; இந்த உண்மை நிலைமையை மறுப்பதன் மூலம் இவற்றுக்கெல்லாம் திருப்திகரமான பதில்களைப் பெற்றுவிட முடியாது.

மகாபாரதத்தில், பாண்டவர்கள் தங்கள் மாமன் கொடுத்த வனப்பகுதியில் ஒரு நகரம் உருவாக்க முனைகிறார்கள். அதற்கு ஒரே வழி, வனத்தை எரித்து அழிப்பதுதான். கிருஷ்ணரின் உருவத்தில் இருக்கும் விஷ்ணு, அவர்களைத் தூண்டுகிறார். வனம் எரியும்போது, பட்சிகளும், மிருகங்களும் அங்கிருந்து தப்பிச் செல்ல முயல,

கிருஷ்ணரின் ஆணைப்படி பாண்டவர்கள் அவற்றை அம்பு எய்து கொன்றுவிடுகிறார்கள். இது கொடூரம் என்றாலும், வனத்தை அழித்தால் ஒழிய நகரம் உருவாக முடியாது என்பதை அறிவோம். இயற்கையான சுற்றுச் சூழலின் அழிவில்தான் கலாசாரம் உருவாக்கப்படுகிறது.

பாகவத புராணத்தில், கிருஷ்ணரின் மூத்த சகோதரர் பலராமன்-அவரும் விஷ்ணுவின் பிறவிதான்-யமுனை நதி தன்னிடம் வரவேண்டும் என்று நினைக்கிறார். அப்போதுதான் அங்கே செல்லாமல், இருந்த இடத்திலிருந்தே அவர் குளிக்க முடியும். நதித் தாய் வர மறுக்கிறாள். சினம் கொண்ட பலராமன் நதித்தாயின் சிகையைப் பிடித்து இழுத்து தன் பக்கம் வருமாறு கட்டாயப்படுத்துகிறார். சில பகுதிகளில் அவர் கலப்பையை வீசி அவளை இழுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்தச் செயல் மிகவும் கொடுமையாக விவரிக்கப்படுகிறது. நதியின் விருப்பத்துக்கு மாறாக அவள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகிறது. இந்த நிகழ்ச்சி, வாய்க்கால் பாசனத்தை நினைவூட்டுகிறது. அது இயற்கையானதல்ல. நதிக்க்ரைகளை உடைத்து, நதிக்கரையையே நம்பியிருக்கும் பல மிருகங்களை வதைக்கிறது.

மனுவின் நோக்கம் அருமையாக இருக்கலாம். ஆனால் அது பானைக்குள் இருக்கும் மீனை மட்டுமே உள்ளடக்கியது. வெளியில் இருக்கும் மீன் களை அல்ல. ஆக, ஒரு பக்கம் கருணை காண்பிக்கப்போய், அது தனிப்பட்டதாக மாறி, மற்றவைகளுக்குக் கருணை கிட்டாமல் போய்விடுகிறது.


மேலே வசிக்கும் கடவுள்களின் நிலம்.
மனு காப்பாற்றும் மீன் பெரிதாகி, பல உலகங்களை எட்டுகிறது.
நாகங்களுக்குக் கீழேயுள்ள நிலம்.

மனித குலம் எல்லோரையும் சேர்த்துக்கொண்டுவிட முடியாது. சமூகத்துக்குத் தேவை இல்லை என்றால், தாவரங்களும், மிருகங்களும் விலக்கப்பட்டுவிடுகின்றன.

பயிர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன, களைகள் இல்லை. வீட்டுக்கு உபயோகப்படும் மிருகங்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன, கொடிய மிருகங்கள் சேர்க்கப்படுவதில்லை. நம் சிந்தனையோடு இசைந்து போகிறவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள், மற்றவர்கள் தள்ளிவைக்கப்படுகிறார்கள். இப்படித் தள்ளிவைப்பதற்குக் கடைசியில் நிறைய விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

மனு அளிக்கும் ஆதரவுடன் மீன் பெரிதாக வளர வளர, அதன் தேவையை ஒட்டி, மனு பெரிய பானைகளில் மீனை மாற்றிக்கொண்டே இருக்கிறார்.

மீன் தன் வழியைக் கண்டுபிடித்துக்கொள்ளட்டும் என்று ஒரு போதும் மனு நினைக்கவில்லை. ஆகவே அவர் மீனை மீண்டும் கடலில் வீசிவிடவில்லை. மெல்ல மெல்ல, மீன் மனுவைச் சார்ந்து இருக்க மட்டுமே விரும்புகிறது. சுதந்தரமாக இருக்க விரும்பவில்லை. எனவே மீனை ஒரு சிறு குட்டையில் விடவேண்டும். பிறகு பெரிய குட்டையில். பின்னர் ஏரியில். கடைசியாக நதியில். மேலே ஆகாயத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து மழை பெய்யும் கட்டம் வருகிறது. கடல் பொங்கியெழுந்து பூமியை விழுங்கத் தொடங்குகிறது. இதுதான் பிரளயம். பூமியின் மரணம்.

மனிதகுலத்துக்கும் இதுதான் நேர்கிறது. தன் மீது மட்டுமே கவனம் செலுத்தும்போது, இயற்கையின் பிற பகுதிகளோடு தொடர்பை இழந்துவிடுகிறது.

கலாசாரம் பரந்துவிரிந்து மற்ற எல்லாவற்றையும் அழித்து விடுகிறது. இயற்கையின் தேவையையும் மீறி, கலாசாரத்தின் தேவை ஓங்கி நிற்கிறது.

எனவே ஏதாவது ஒன்று அறுபட்டுத்தான் போகும். இயற்கை திருப்பி அடிக்கும்.




பாஞ்சஜனா அரக்கனை விஷ்ணு வதம் செய்கிறார்-ஓவியம்



கொம்புள்ள மீன் மனுவின் கப்பலை இழுத்துச் செல்வது-ஓவியம்.

முதலில், சிறிய மீனுக்கு இரங்கி, வாழ்நாள் முழுதும் நல்லதையே செய்துவந்த போதும், தான் ஏன் கஷ்டபடுகிறோம் என்று மனு வியக்கிறார். மழையை வசை பாடுகிறார், கடலைச் சபிக்கிறார். ஆனால் பிறகுதான் ஞானம் பிறக்கிறது.

இது புராணங்களில் தெளிவாக விளக்கப்படவில்லை. ஏனென்றால் மனு கதையைப் படிப்பவர். மனு மனிதகுலத்தை பிரதிபலிப்பவர். இந்த ஞானத்தைக் கதை கேட்பவர்தான் கண்டுபிடிக்க வேண்டும். கதை சொல்பவர் விளக்க மாட்டார்.

சிறிய மீன் பற்றிய தன் அக்கறைதான் மிகப் பெரிய ஆபத்துக்குக் காரணம் என்று மனு புரிந்துகொள்கிறார். மீன் வளர்ந்து தன்னைக் கவனித்துக் கொள்ளும் என்ற உண்மையை அறியாத அளவுக்கு சிறிய மீன் மீது அவருடைய அக்கறை இருந்தது. தன் செயலுக்கு, உலகில் பின்விளைவுகள் ஏற்படும் என்று அறியாதவராக இருந்தார். இதுதான் கர்மாவின் சட்டம். மனு சிறிய மீனைக் காக்க நினைத்து, கருணையோடு உருவாக்கும் சமூகம் அழிக்கப்படுகிறது. அந்தக் கருணை இயற்கையை உள்ளடக்காமல் தனிப்பட்டதாக இருப்பதே அதற்குக் காரணம். மனு இதை உணர்ந்துகொள்கிற போது, பிரளயத்துக்குப் பொறுப்பு ஏற்கிறார். அப்போது மீண்டும் மீன் மனுவின் முன்னால் தோன்றுகிறது. இப்போது மீனின் தலையில் ஒரு கொம்பு முளைத்திருக்கிறது!

மீன் தலையில் ஏன் ஒற்றை கொம்பு? மனுவின் கற்பனைக்கும் கருணைக்கும் சுரண்டலுக்கும் காரணமான பெருமூளையைச் செலுத்துவதற்கா? கொம்பு விஷ்ணுவின் நெற்றித் திருமண் போல் இருக்கிறது. வாழ்க்கை, வளர்ச்சியைக் குறிப்பதைக் காண்பிக்கிற மாதிரி. மீனைக் காப்பாற்றியபோது, மனு மிருகத்திலிருந்து மனிதனாகிறார். ஆனால், மற்ற எதையும் கவனியாமல் மீன் மீது மட்டுமே கவனம் செலுத்தியதால் அவரால் மனிதனிலிருந்து தெய்வமாக உயர இயலவில்லை. பெரிய பானைகள் சேர்ந்ததால் பொருள்களில் வளர்ச்சி இருக்க, பார்வையை

விரிவாக்கி எல்லாரையும் உள்ளடக்கத் தேவையான, உணர்வுபூர்வமான அல்லது புத்தி பூர்வமான வளர்ச்சி இருக்கவில்லை.

கொம்பு முளைத்த மீன், ஒரு படகு உருவாக்க மனுவுக்கு வழிகாட்டுகிறது, பைபிளில் வரும் நோவா போல. மீன் மனுவிடம் தன் கொம்போடு ஆதி அனந்த சேஷன் நாகத்தைக்கொண்டு படகைக் கட்டச் சொல்கிறது. பிறகு மீன் பூமியின் மையத்திலிருக்கும் மேரு மலைக்குப் படகை இழுத்துச் செல்கிறது. தண்ணீர் வடிந்ததும் மீன் ஞானம் பெற்ற மனுவைக் காக்க, அதன் கொம்பு பூமியைப் புதிதாக்குகிறது.




விஷ்ணுவின் வடிவமாகக் கருதப்படும் சாளக்ராம கற்கள்-புகைப்படம்




சங்கின் புகைப்படம்.

புராணத்தின் இன்னொரு வடிவம், பிரளயம் பூமியில் நிகழும்போது, பஞ்சஜனன் என்ற அரக்கன் வேதங்களைத் திருடிக்கொண்டுபோய், கடலுக்கு அடியில் ஒளித்துவைத்துவிடுகிறான். மீனாக உருவெடுக்கும் விஷ்ணு, அரக்கனை அழித்து, வேதங்களை மீட்டெடுத்து மனுவிடம் ஒப்படைக்கிறார். அரக்கனைக் கொன்ற விஷ்ணு, அரக்கன் ஒளித்து வைத்திருந்த பாஞ்சஜன்யம் என்ற ஊதுகுழலைக் கண்டுபிடித்து, தன்னுடைய பாஞ்சஜன்யமாக ஆக்கிக் கொள்கிறார். எல்லோரும் வேதங்களின் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள, விஷ்ணு பாஞ்சஜன்யத்தை ஒலிக்கச் செய்கிறார்.

அது என்ன ரகசியம்? இயற்கையில், எல்லா தாவரங்களும் மிருகங்களும் சொல்லிவைத்த மாதிரி வட்டமாகச் சுழல்கின்றன. அந்த வட்டத்துக்குள் இருப்பதல்லாமல் அவற்றுக்கு வேறு வழியில்லை. ஆனால் மனிதர்களுக்கு அந்த வட்டத்தைப் பிளக்கும் சக்தி இருக்கிறது. அதை

வெளியேயும் உள்ளேயும் மாற்றிச் சுற்றும் திறன் இருக்கிறது. மனிதகுலம் அச்சத்திலிருந்து விடுபடும்போது, கருணை காட்டும்போது, தர்மத்தைக் கடைப்பிடிக்கும்போது, மிருக உணர்வுகளைத் தாண்டி தெய்வீகத்தன்மையை அடையும்போது, அதன் போக்கில் பிளவு ஏற்படுகிறது.

விஷ்ணுவின் சங்கில் இருக்கும் சுழல் கோடுகள், அவருக்குப் புனிதமானவை. மனிதனின் இந்தத் தனிச் சிறப்பை நினைவுபடுத்துபவை.

# 3

# கூர்மாவின் ரகசியம்

## பாதுகாப்பில்லாதவனுக்கு செல்வம் கிடைப்பதில்லை




விஷ்ணு ஆன்மிக உண்மை. தன்னை உணர்ந்தால் அதை அறியலாம்.
விஷ்ணுவை லக்ஷ்மிகாந்தன் என்கிறார்கள்.
லக்ஷ்மி பொருளியல் உண்மை; அது இயற்கையாகவே ஆன்மிக உண்மையின்பால் ஈர்க்கப்படுபவள்.
லக்ஷ்மியை விஷ்ணுகாந்தன் என்கிறார்கள்.
லக்ஷ்மியின் கரங்களில் இருப்பது, தான்யங்களும், பொன்னும் பொங்கி வழியும் அக்ஷய பாத்திரம்.

விஷ்ணுவின் கரங்களில் லக்ஷ்மி-கேரள ஓவியம்.

செல்வத்துக்குக் கடவுள் லக்ஷ்மி. சிவந்த ஆடையும், தங்க ஆபரணங்களும் அணிந்து தாமரை மீது அமர்ந்து, நிரம்பி வழியும் தானியங்களும், தங்கமும் நிறைந்த பாத்திரத்தை வைத்திருப்பாள். எல்லோரும் அவளை வணங்குவார்கள். ஏனென்றால் அவள் எல்லோருக்கும் வாழ்வாதாரத்தை அளிப்பவள். நாம் உண்ணும் உணவு, நாம் அணியும் ஆடை, நாம் வசிக்கும் இடம் எல்லாம் அவள்தான். அவள் இல்லாமல் நாம் வாழ முடியாது.

லக்ஷ்மி பாரபட்சம் பார்ப்பதில்லை. சாதுவுக்கும் சரி, பாவிக்கும் சரி, ஒரு கிண்ணம் அரிசி போதும். அரசனுக்கும் ஆண்டிக்கும் ஒரே போர்வை குளிரிலிருந்து பாதுகாப்பளிக்கும். ஒரு வீடு ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமாக இடம் கொடுக்கும்.

ஆனால் லக்ஷ்மி பரபரப்பாக இருப்பாள். அவள் ஒரே இடத்தில் நீண்ட நாள் நிலைத்து நிற்கமாட்டாள். அவள் நகர்ந்து செல்வதன் காரணத்தை யாரும் அறியமாட்டார்கள். அவள் ஒரு பாதையில்தான் செல்வாள் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் அவள் வேறு எங்கோ போய் நிற்பாள்!

செல்வம் முதல் வடிவத்தில், உலோகம் மற்றும் தாவரங்களாக பூமிக்குக் கீழே இருந்து கிடைக்கின்றது. அவள் பாதாளத்தில் வசிப்பதால், புராணங்களில் அவளைப் பாதாள நிவாசினி என்று வர்ணிக்கிறார்கள். 'பா' என்றால் பாதம். 'தாளா' என்றால் கீழே. அதனால் லக்ஷ்மி பூமிக்குக் கீழே இருப்பவள். இதுவே அசுரர்களின் இடமுமாகும்.

பிரம்மாவின் பேரர்கள்தாம் அசுரர்கள். அவர்களின் தந்தை கசியபர்; அவர்களின் தாய் தீத்தி. செல்வத்தை மனிதகுலம் தேடினாலும் அசுரர்களின் பிடியில் இருக்கிறாள் லக்ஷ்மி. மனிதர்கள் தேவர்களைக் கடவுளாக வழிபடுகிறார்கள். ஏனென்றால், அவர்களால்தான் லக்ஷ்மியை அரக்கர்களிடமிருந்து மீட்டு மேலே கொண்டுவர முடியும். தேவர்கள், அசுரரகளின் ஒன்றுவிட்ட சகோதரர்கள்.

அவர்களுடைய பாட்டனார் ஒருவரே- பிரம்மா. ஒரே தந்தை- கசியபர். ஆனால் தாய் வேறு. அதித்தி.

தேவர்களின் தலைவர் இந்த்ரன். அவர்தான் மேகங்களைத் தூண்டி மழை பெய்யச் செய்கிறார். அவர் விண்ணுக்கும் கடவுள், மழைக்கும் கடவுள்.




யக்ஷர்களின் அரசன் குபேரனின் கல் உருவச் சிலை




யக்ஷனும் யக்ஷினியும்-கற்சிற்பம்.

அவர் சகோதரர்கள் அக்னி, நெருப்புக் கடவுள், தரையில் இருப்பவர். வாயு, காற்றுக் கடவுள், ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையே பயணம் செய்பவர்.

சூரியன் மற்றும் சந்திரன் இருவருமே கடவுள்கள்; ஆகாயத்தில் வசிப்பவர்கள். அவர்கள் குரு பிரஹஸ்பதி. ஜூபிடர் கிரகத்தின் அதிபதி. பகுத்தறிவுக்கும், கணிதத்துக்கும் தொடர்பு உடையவர்.

பிரஹஸ்பதி இந்த்ரனுக்காக ஒரு யாகம் செய்கிறார். பூமிக்குக் கீழேயிருந்து லக்ஷ்மியை மேலே கொண்டுவர அவருக்கு சக்தி அளிக்கிறார். அக்னியும் வாயுவும் பாறைகளைக் கரைத்து உலோகத்தை வெளியிடச் செய்கின்றன. காற்றும், சூரிய பகவானும், மழையும் தாவரங்களை பூமியிலிருந்து மேலே கொண்டு வருகின்றன.

தேவர்கள் அசுரர்களை அழித்தார்கள் என்பது போன்ற கதைகள் லக்ஷ்மியை பூமியிலிருந்து மேலே

கொண்டுவருவதற்குத்தான் எழுதப்பட்டன.

அதனால்தான் சுரங்கங்களைத் தோண்டுவதும், வேட்டையாடுவதும், மீன் பிடிப்பதும், உழவு மேற்கொள்வதும், அறுவடை செய்வதும் மேற்கொள்ளப்பட்டன. இவை செல்வத்தை உண்டாக்குகின்றன. அதனால் கடுமையானவை. பாறை உடைக்கப்படாவிட்டால், உலோகத்தை வெளிக் கொண்டுவர முடியாது. தானியங்களைப் புடைத்தால் தவிர, தானியங்கள் கிடைக்காது. உண்மையைச் சொல்வதானால், லக்ஷ்மி கிடைக்க வேண்டுமானால், அசுரர்களை அழித்தாக வேண்டும்.

இந்த்ரனுக்கு, லக்ஷ்மி என்பவள் சச்சி. அவன் மனைவி. ஆனால் அசுரர்களுக்கோ அவள் தங்கள் அரசன் புலோமனின் மகள் புலோமி. அவள் பார்கவியும்தான். அவர்கள் குரு பிருகுவின் மகள். அவருக்கு சுக்ரன் என்றும் பெயர் உண்டு. அவர்தான் வீனஸ் கிரகத்தின் அதிபதி. கற்பனைக்கும் சிந்தனைக்கும் தொடர்பு உள்ளவர். லக்ஷ்மிக்கும் அசுரர்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இருப்பதால், அசுரர்களின் இருப்பிடத்துக்கு ஹிரண்யபுரா அல்லது தங்க நகரம் என்று பெயர்.

லக்ஷ்மிக்கு பூமிக்கு அடியிலுள்ள சில அசுர மற்றும் கோரமான படைப்புகளான யக்ஷர்கள் மற்றும் அரக்கர்கள் தொடர்பும் உண்டு. யக்ஷர்கள் நீருக்கு அருகே வசிப்பவர்கள். யக்ஷர்களின் அரசன் குபேரன். தெய்வங்களின் செல்வத்தைப் பாதுகாப்பவன். கணக்கு வைத்துக்கொள்பவன். குபேரன் தான் தங்க நகரமான லங்கையை உருவாக்கினான். அதை அவன் சகோதரன் ராவணன் என்ற அரக்கன், அபகரித்துக்கொண்டான்.


இந்த்ரனின் கையில் வஜ்ராயுதம் வைத்திருக்கிறான், இடியை உண்டாக்கி மழை பொழிய.
இந்தரன் பாதுகாப்பற்ற கடவுள். எப்போதும் லக்ஷ்மியை இழந்துவிடுவோமோ என்று அஞ்சுபவன்.
இந்த்ரனின் வெள்ளை யானை ஐராவதம்.

இந்த்ரனுக்கு அருகே லக்ஷ்மி சச்சியாக அமரும்போது, ஆகாயத்துக்கு மேலே இருக்கும் இந்த்ரனின் நகரமான அமராவதி சொர்க்கமாக மாறிவிடுகிறது.

அங்கே கல்பதரு-வேண்டியதைக் கொடுக்கும் மரம், காமதேனு-விரும்பியதைக் கொடுக்கும் பசு, மற்றும் சிந்தாமணி-நினைத்ததைத் தரும் நவரத்தினக்கல் எல்லாம் இருக்கின்றன. இந்தச் செல்வங்கள் எல்லாம் இந்த்ரனுக்கு பாதுகாப்பும், மகிழ்ச்சியும் அளிக்க வேண்டும். ஆனால் அவன் பாதுகாப்பு அற்றவனாக உணர்கிறான். சச்சி அவனைவிட்டுவிட்டு, இன்னும் அதிகச் செல்வம் உள்ள கணவனைத் தேடிப் போய்விடுவாள் என்று அஞ்சுகிறான்.

சாகர அரசன் ஒரு முறை அசுவமேத யாகம் செய்தான். அரசரின் குதிரையை அனுப்பி, அதைத் தொடர்ந்து ஒரு வீரர் படையும் அனுப்புவார்கள்.

அது செல்லும் இடங்களில் எவரும் எதிர்த்து நிற்கவில்லை என்றால் அந்த இடங்கள் எல்லாம் அரசனுக்கு சொந்தம். சாகர அரசன் பலம் மிகுந்த வனாக இருந்ததால் அவனுடைய குதிரையை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. அதனால் அவன் சக்ரவர்த்தியாக-உலகத்துக்கே அதிபனாக -ஆகவிருந்தான். அப்போது அவன் இந்த்ரனைப் பதவியிலிருந்து தூக்கி எறிய முடியும். பாதுகாப்பற்றிருந்த இந்த்ரன் குதிரையைத் திருடி, கபில முனிவரின் ஆசிரமத்தில் ஒளித்துவைத்தான். சாகரனின் மகன்கள் குதிரையைக் கண்டுபிடித்து, கபிலரைத் திருடன் என்று குற்றம் சாட்டினார்கள்.

கபில முனிவர் அவர்களை ஒரு பார்வையால் அப்படியே சுட்டெரித்துவிட்டார். மகன்களை இழந்த சாகரா தன் யாகம் பற்றிய ஆர்வத்தை இழந்தான்.

அதனால் இந்த்ரன் தான் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்தான்! இன்னொரு கட்டத்தில் காண்டு என்ற முனிவர் கடுமையாகத் தவம் பண்ணிக்கொண்டிருந்தார். ஐம்புலன்களையும் அடக்கி, உள்ளுக்குள்ளே உஷ்ணத்தை உண்டாக்கத்தான் இந்தத் தவம். இந்தத் தவத்தின் மூலம்,

காண்டு முனிவர், இயற்கையை அடக்கித் தன் விருப்பப்படி ஆட்டுவிக்கலாம். காண்டு முனிவர் தம் தவத்தில் வெற்றி பெற்றால், தன்னைத் தூக்கி எறிந்துவிடுவார் என்று இந்த்ரன் பயந்தான். அதைத் தடுக்க, பிரமலோசா என்ற அப்சரஸை அனுப்பி அவரை மயக்கிவிட, அனுப்பிவைக்கிறான். பிரமலோசா தன் முயற்சியில் வெற்றி பெற, காண்டு முனிவர் அவளுடைய மயக்கும் வலையில் வீழ்ந்துவிடுகிறார். காலத்தை மறந்துவிடுகிறார். நூறு வருடங்கள் ஓர் இரவு போலக் கழிந்தன. காண்டுவுக்கு நினைவு வந்ததும் தாம் இந்த்ரனின் ஆணையின்படி அப்ஸரஸால் மயக்கப்பட்டதை உணர்கிறார். அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.




கம்போடிய கோயில் ஓவியம்: இந்த்ரன் யானைகளின் மீது அமர்ந்திருக்கிறான்.

இந்த்ரன் சச்சியை நம்பவில்லை, ஏனென்றால் அவன் தன்னையே நம்பவில்லை. அதற்குக் காரணம் அவன்

தன்னை அறிந்திருக்கவில்லை. பிரம்மாவைப் போல, அவருக்கு ஆன்மிக உண்மை தெரியவில்லை. அதனால் நிலையாமை மற்றும் மரணம் குறித்து கலக்கம் அடைந்திருந்தான்.

தன்னுடைய பயங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, இந்த்ரன் இன்பங்களில் மூழ்கிவிடுகிறான். சச்சி அவனிடமிருந்து ஓடிவிடுகிறாள்.

இன்னொரு மன்னனையோ, முனிவரையோ விரும்பி அல்ல. அவளால் இந்த்ரனின் செயல்களைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

கோபத்துக்குப் பெயர்போன துர்வாசர் என்ற முனி, அழகான தாமரை மலர்களால் ஆன மாலையை இந்த்ரனுக்கு அளித்தார். ஆனால் சுற்றிலும் அழகிகள் சூழந்திருக்க, மயங்கிய நிலையில் இருக்கும் இந்த்ரன் அந்த மாலையை வாங்கிக்கொண்டு தரையில் வீசி எறிகிறான். தன் யானை ஐராவதம் அதை அலங்கோலமாக்குகிறது. கோபம் கொண்ட துர்வாசர் இந்த்ரனை சபிக்கிறார்: 'நீ எல்லாவற்றையும் இழந்துவிடுவாய்! கல்பதரு, காமதேனு, நவரத்தினம் எல்லாவற்றையும். லக்ஷ்மி இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவாள்.' அதுதான் உண்மையில் நடந்தது.

பிற கதைகளில், தன் குரு பிரஹஸ்பதி மீது அதிருப்தி கொண்டதால் அவரை சினம் கொள்ள வைக்கிறான் என்று இருக்கிறது. எப்படியானாலும், இந்த்ரன் தன் செல்வத்தை இழக்கிறான். அதற்கு அவனேதான் காரணம், வேறு எவருமல்ல.




விஷ்ணுவின் ஆமை (கூர்ம) அவதார மைசூர் ஓவியம்.




கர்நாடகத்திலுள்ள காவிரங்கபுராவில் கூர்மத்தை வழிபடும் கோயில்.

லக்ஷ்மி போனதும், பயந்துபோன இந்த்ரன் தன் தந்தை பிரம்மாவிடம் ஓடினான். 'அவளை எப்படியாவது மீண்டும் கொண்டுவர உதவுங்கள்' என்று கதறுகிறான். ஆனால் தேவர்களுக்கு எப்படி உதவுவது என்று பிரம்மாவுக்குத் தெரியவில்லை. விஷ்ணுவின் உதவியை நாடச் சொல்கிறார்.

'தேவி தன்னை பாற்கடலில் கரைத்துக்கொண்டுவிட்டாள். கடலைக் கடைந்து, அவளை வெளிக்கொண்டு வாருங்கள். மலைகளின் அரசன் மந்தரனைப் பயன்படுத்துங்கள். வாசுகி நாகத்தைக் கயிறாக உபயோகியுங்கள்.' இன்னும் சில கதைகளில், மத்தாக மேரு மலையையும், கயிறாக நாகம் ஆதி அனந்த சேஷனையும் பயன்படுத்தினார்கள் என்று இருக்கிறது.

மலைகளின் மன்னனைக் கொண்டு செல்ல தேவர்கள்

முயல, மந்தரா அவர்களால் தூக்கிச் செல்ல முடியாத அளவுக்கு எடை அதிகமாக இருக்கிறார். அதே போல வாசுகி பாம்பும் என்ன இழுத்தும் வர மறுத்துவிடுகிறது. எனவே அவர்கள் விஷ்ணுவிடம் கோரிக்கை வைக்கிறார்கள். விஷ்ணு தன் வாகனமான கருடனை அனுப்பி, மந்தர மலையையும், வாசுகி பாம்பையும் பாற்கடலுக்கு இழுத்து வரச் சொல்கிறார். மந்தர மலையால் தாக்குப் பிடிக்க முடியாது, கடலின் அடியில் மூழ்கிப்போய்விடும்' என்று தேவர்கள் கதறுகிறார்கள். அவர்கள் வியக்கத்தக்க வகையில், அங்கே கூர்மா என்ற மிகப் பெரிய ஆமை கடலின் மேலே எழுந்தது. அது விஷ்ணுவைத் தவிர வேறு யாருமல்ல. கருடன் மந்தரையை கூர்மத்தின் முதுகில் வைக்க, வாசுகி பாம்பைக்கொண்டு மலையைச் சுற்றுகிறார். பாற்கடல் கடையத் தயாராக இருக்கிறது.

தேவர்கள் பாற்கடலைக் கடையத் தொடங்குகிறார்கள். ஆனால் அவர்களால் கடைய முடியவில்லை. அதற்கான சக்தி அவர்களிடம் இருக்கவில்லை.

'நீங்கள் உங்கள் ஒன்றுவிட்ட சகோதரர்களான அசுரர்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் வாசுகியின் வால் பகுதியைப் பிடித்துக்கொள்ளுங்கள். அசுரர்கள் வாசுகியின் கழுத்துப் பகுதியைப் பிடித்துக் கொள்ளட்டும். அப்போதுதான் இரண்டு புறமும் இழுத்துக் கடைவதற்கு முடியும்' என்கிறார் விஷ்ணு.




விஷ்ணுவின் கூர்மாவதாரம், காலன்டர் ஓவியம்

ஒரே தகப்பனாருக்குப் பிறந்தாலும், தேவர்களும் அசுரர்களும் ஒருவரை ஒருவர் வெறுக்கிறார்கள். லக்ஷ்மி பாதாள லோகத்துக்குரியவள் என்று அசுரர்களும், தேவர்கள்

அவள் பூமியின் மேல் இருப்பவள் என்றும் நினைக்கிறார்கள். ஆனால் அவள் மறைந்துபோய்விடவே, அவளை எப்படியாவது வெளிக்கொண்டுவருவது தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. அசுரர்கள் தேவர்களுடன் சேர்ந்துகொண்டு பாற்கடலைக் கடையத் துவங்குகிறார்கள்.

கடலைக் கடைவது தொடங்குகிறது. தேவர்கள் இழுக்கும்போது, அசுரர்கள் ஓய்வெடுக்க, அசுரர்கள் இழுக்கும்போது, தேவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்.

பக்கத்துக்கு ஒரு குழுவாக இழுக்க வைத்ததில் விஷ்ணு மகிழ்ச்சி அடைகிறார். மோதிக்கொள்ளும் இரண்டு பக்கத்துக்காரர்களையும் ஒரு பொதுவான முடிவுக்காக உழைக்க வைத்துவிடுகிறார்!

ஆனால் அந்தச் செயல் எளிதானதல்ல. நேரமும் முயற்சியும் நிறையவே தேவைப்பட்டது. அசுரர்களும், தேவர்களும் இதற்கு முன் இல்லாத அளவுக்கு உழைக்க வேண்டியிருந்தது.

ஹிந்து ஆன்மிக விளக்கங்களில் பால் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. அது லோகாயத உலகில் எல்லாவித சாத்தியக் கூறுகளையும் பிரதிபலிக்கிறது. ஆனால் பாலிலிருந்து மிகச் சிறந்ததைக் கொண்டுவர வேண்டுமென்றால், முதலில் அதிலிருந்து வெண்ணெயை வெளிக்கொண்டுவர வேண்டும். பின்னர் அதைக் காய்ச்சி நெய் எடுக்க வேண்டும். இது மிகப் பெரிய பணி. உலகப் பொருள்களில் விருப்பம் இல்லாத சிவபிரான் அவை எல்லாவற்றையும் ஒதுக்குவது போல் அன்றி, விஷ்ணு கோயில்களில், விஷ்ணு எப்போதும் வெண்ணெய், நெய் எல்லாம் கேட்பார்.

லக்ஷ்மிதான் லோகாயத உலகத்துக்கு உகந்தவள். அதனால்தான் விஷ்ணு அவளைக் கொண்டாடுகிறார்.

இறுதியாக, பாற்கடலைக் கடையும்போது வெண்ணெய் திரண்டு எழுகிறது. இன்னும் பல பொக்கிஷங்கள் வெளிப்பட்டு வருகின்றன. உச்சைஸ்ரவா என்ற பறக்கும் குதிரை, ஏழு துதிக்கைகளுடன் ஐராவதம் என்ற வெள்ளை

யானை, கல்பதருவான பாரிஜாத மரம், காமதேனு, கௌஸ்துபம் எனப்படும் சிந்தாமணி மாலை எல்லாமே. தேவகன்னிகை ரம்பையும் வர, வருணி என்ற மதுவும் வருகிறது.




கம்போடிய கோயில் சுவர் ஓவியம்-பாற்கடலைக் கடைவது.

இந்தப் பொக்கிஷங்கள் எல்லாம் ஒரு காலத்தில் இந்த்ரனின் சொர்க்கத்தில் இருந்துவந்தன. இதில் முக்கியமானவை ரம்பாவும், வருணியும்-பெண்ணும், மதுவும். இவற்றில் எல்லாம் மூழ்கியதால்தான் இந்த்ரன் செல்வத்தை இழந்தான் என்றாலும், இவை எல்லாமே உலகில் போகத்துக்குரியவையாகக் கருதப்படுவதாகத்தான் புராணங்களில் எழுதப்பட்டிருக்கிறது. சிற்றின்ப போகம் பற்றிக் குறிப்பிடுவதில் இவை தர்மசங்கடப்படவில்லை.

அவற்றின் மதிப்பைப் பாராட்டினாலும், அதிலேயே மூழ்கிப் போய்விட்டால் ஆபத்துதான் என்று எச்சரிக்கின்றன. ஆக, இந்த்ரனின் சொர்க்கத்தில், அழகான பெண்கள் ஆட, மது ஆறு போல் பாய, இவை எல்லாம்தான் இந்த்ரனை மதி இழக்கச் செய்கிறது.

குதிரையும், யானையும் தர்மத்துக்கு, அதாவது சரியானவற்றுக்கு அடையாளமாக இருக்கின்றன. மரம், பசு, ரத்தினம் எல்லாம் செல்வத்க்கு அடையாளமாக இருக்கின்றன. தேவ கன்னிகையும், மதுவும் இன்பம் துய்ப்பதைக் காண்பிக்கின்றன. ஆக, பாற் கடலிலிருந்து நல்ல செயல்களுக்கு உரியவையும், செல்வமும், இன்பமும் வெளிப்படுகின்றன. இவை கடலின் கொடைகள். இந்தப் பரிசுகள் எல்லாம் செல்வத்துக்கு அடையாளமான லக்ஷ்மி வருகிறாள் என்பதற்கு முன்னோடிகள்.

லக்ஷ்மி தோன்றியதும், எல்லோரும் பரவசம் அடைகிறார்கள். அவள் சிவந்த புடவை அணிந்திருக்கிறாள். நிறைய ஆபரணங்கள் அணிந்திருக்கிறாள். தாமரையில் அமர்ந்திருக்கிறாள். அவள் கரங்களில் தானியங்களும் பொன்னும் நிரம்பி வழியும் அக்ஷய பாத்திரம் இருக்கிறது. தேவர்களும் அசுரர்களும் இந்த அழகான தேவியைப் புகழ்கிறார்கள். எட்டுத்திசைகளிலிருந்தும் வெள்ளை யானைகள் அவளை வரவேற்க வருகின்றன. தம் துதிக்கையைத் தூக்கி, மணம் மிகுந்த நீரை அவள் மீது தெளிக்கின்றன.

லக்ஷ்மி எங்கே செல்வாள் என்று பார்க்க எல்லோரும் நிசப்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவள் தேவர்களின் மனைவி ஆவாளா, அல்லது அசுரர்களின்

மகள் ஆவாளா? ஆனால் எல்லோரும் வியக்கும்படி, அவள் விஷ்ணு இருக்குமிடம் நகர்ந்து, மாலை இடுகிறாள். அதன்படி அவரைக் கணவனாக அடைகிறாள்.




வட இந்திய ஓவியம் ஒன்று லக்ஷ்மியின் இருபுறமும் இருந்து யானைகள் தண்ணீர் பொழிவதைக் காட்டுகிறது.




கர்நாடகத்தில் பேலூரில் கோயில் சிற்பம், விஷ்ணுவின் தொடையில் லக்ஷ்மி அமர்ந்திருக்கிறார்.

அசுரர்களுக்கு லக்ஷ்மி தேவை, தேவர்களுக்கும்தான். ஆனால் லக்ஷ்மிக்கு விஷ்ணுதான் வேண்டும்; அவர் அவளுக்காக ஏங்குவதில்லை. இது மிக முக்கியம். லக்ஷ்மி ஏன் விஷ்ணுவைத் தேர்ந்தெடுத்தாள்? விஷ்ணு பரபரவென்று இயங்குபவர். பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்து, எதிரிகளை இணைந்து பணியாற்றும்படி செய்கிறார். அவளும் அவரைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அவர் எல்லாவற்றிலிருந்து ஒதுங்கி இருப்பவர். தேவர்களுக்கு உதவுகிறாரே தவிர, பாற்கடல் தந்த பொக்கிஷங்களை அவர் விரும்பவில்லை.

விஷ்ணுவுக்கு தாம் ஒரு தெய்வீக சக்தி, பிரம்மன்,

முடிவற்றவன், நிரந்தரமானவன் என்று தெரியும். அதனால் லக்ஷ்மியைப் பற்றிய உண்மை தெரியும். அவளிடமிருந்து அவர் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் விஷ்ணு தன்னைப் புரிந்துகொள்ள அவள் உதவுவாள் என்று நினைக்கிறார்.

அதனால் அவளைக் கட்டுப்படுத்த அவர் முயலுவதில்லை. மாறாக அவளுடைய சுபாவத்தை ரசிக்கிறார். லக்ஷ்மியைப் பற்றி அவர் அறிந்தவை அவரைப் புன்னகை செய்ய வைக்கின்றன.

ராமாயணத்தில், அரண்மனையை விட்டு வெளியேறி கானகத்துக்குச் செல்ல வேண்டும் என்று சொன்ன போது, ராமர் தன் நிலையை இழந்துவிடவில்லை. அரண்மனையில் எப்படி இருந்தாரோ, அப்படியேதான் வனத்திலும் இருந்தார். அவர் உலகப் பொருள்களிலிருந்து தன்னை அடையாளப் படுத்திக்கொள்ளவில்லை. இதுவே லக்ஷ்மி அவரை விரும்பக் காரணம். அதனால்தான் விஷ்ணுவை ஸ்ரீ-நிவாஸ, ஸ்ரீ-வத்ஸ எனப்படுகிறார்.

அதாவது லக்ஷ்மி உறையும் இடம். அவர் லக்ஷ்மி வல்லப, லக்ஷ்மி காந்த. அதாவது லக்ஷ்மிக்கு விருப்பமானவர். அவர் ஸ்ரீ நாத. அல்லது திருவின் பதி. அவர் அவளைத் தேடிப் போகவில்லை. ஆனால் அவள் எப்போதும் அவரைப் பின் தொடர்கிறாள்.

சித்திரங்களில், விஷ்ணு பாற்கடலில், ஆதி அனந்த சேஷன் என்ற நாகத்தின் மீது சயனித்திருப்பது போல் காட்டப்பட்டிருக்கிறது. லக்ஷ்மி அவர் அருகே அமர்ந்திருக்கிறாள். அமைதியாக அவர் கால்களைப் பிடித்துவிடுகிறாள். லக்ஷ்மி தன்னிச்சையானவள். அவளுக்கு எங்கே போக வேண்டும் என்று தோன்றுகிறதோ அங்கே போவாள். அவளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று போட்டியிடும் தேவர்களும் சரி, அசுரர்களும் சரி, அவளைக் கட்டுப்படுத்த முடியாது. விஷ்ணுவிடம் இருக்கும் ஏதோ ஒரு சக்தி, அவளை அவரிடம் பணியவைக்கிறது. அவர் அவளை நாடவில்லை.


தாமரையில் அமர்ந்து, தாமரையைக் கையில் வைத்திருப்பதால் லக்ஷ்மியை கமலா என்றழைக்கிறார்கள்.
லக்ஷ்மி கையில் வைத்திருக்கும் குடம், செல்வத்தைக் காண்பிக்கிறது.
குழம்பிய சேற்றிலிருந்து அழகான தாமரை பூக்கிறது. தாமரை இல்லாமல் சேறு இருக்கும். ஆனால் சேறு இல்லாமல் தாமரை இருக்காது.
லக்ஷ்மியின் கீழே அமர்ந்திருக்கும் ஆந்தை, அவளுடைய சகோதரி அலக்ஷ்மி. அவள் போகுமிடமெல்லாம் போராட்டம்தான். அதனால்தான் செல்வத்துக்குக் குறுக்கீடு வரும்போது, போராட்டங்களிலும் குறுக்கீடு வருகிறது.

லக்ஷ்மியின் அருகே ஆந்தை அமர்ந்திருக்கும் வங்காள ஓவியம்

அதனாலேயே அவள் அவரை அண்டி அவருக்கு சேவை செய்ய விரும்புகிறாள். விஷ்ணு ஸ்ரீவத்ஸன்-அதாவது லக்ஷ்மி வசிக்கும் இடம். அவள் இருக்கும் இடம் எதுவோ, அதுவே அவர் இருக்கும் இடம்.

லக்ஷ்மிக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவள் பெயர் அலக்ஷ்மி. அவள் குழப்பங்களுக்குத் தெய்வம். ஒரு வீட்டில் எப்போது செல்வம் நுழைகிறதோ அப்போது லக்ஷ்மியின் சகோதரியும் பின்னாலேயே நுழைந்து சண்டையை உண்டாக்கிவிடுவாள். லக்ஷ்மி தானியம் என்றால், அலக்ஷ்மி பதர்.

லக்ஷ்மி உலோகம் என்றால், அலக்ஷ்மி அதைத் தொடரும் புகை. பழத்தின் சதை லக்ஷ்மி என்றால், உண்ண முடியாத அதன் தோல், விதை இரண்டும் அலக்ஷ்மி. இருவரும் சேர்ந்தே வருவார்கள். எனவே லக்ஷ்மி பாற்கடலிலிருந்து வந்ததும், அலக்ஷ்மியும் ஆலஹால விஷமாகக் கூடவே வந்துவிடுகிறாள்.

விஷ நாற்றத்துடன் காற்று நிரம்புகிறது. ஒளி மறைந்துவிடுகிறது. தேவர்களும் அசுரர்களும் அந்தப் புகையில் மூச்சு முட்டி திணறுகிறார்கள்.

'எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று விஷ்ணுவை நோக்கிக் கதறுகிறார்கள்.

விஷ்ணு உடனே சிவபெருமானை நினைக்கிறார். அவர்தான் எல்லோரும் நிராகரிப்பவற்றை ஏற்றுக்கொள்பவர் ஆயிற்றே? எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள்; அவளோடு உடன்வரும் வெகுமதிகளை வரவேற்பார்கள். ஆனால் யாரும் ஆலஹால விஷத்தை ஏற்க விரும்புவதில்லை. யாராவது ஒருவர் ஆலஹால விஷத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டல் அது உலகை அழித்துவிடும். எனவே, சிவபெருமான் அழைக்கப்பட்டு, அவர் வந்ததும் ஆலஹால விஷத்தை ஒரே விழுங்கில் குடித்துவிடுகிறார்.


தன்வந்திரியின் கையிலுள்ள சங்கும் சக்கரமும் அவர் விஷ்ணுவின் வடிவம் என்று தெரிவிக்கின்றன.
குடத்தில் அமிருதம் இருக்கிறது.
தன்வந்திரியின் கையில் அட்டை இருக்கிறது. ஆயுர்வேதத்தில் காயத்திலிருந்து கெட்ட ரத்தத்தை உறிஞ்ச அட்டையை உபயோகிப்பார்கள்.

மருந்துகளின் கடவுள் தன்வந்திரி-ஒரு தென்னிந்தியக் கோயில் சிலை.

சில நாடோடிக் கதைகளில், அலக்ஷ்மி ஆலஹால விஷத்திலிருந்து வருகிறாள். வந்து தனக்கு ஒரு கணவன் வேண்டும் என்று கேட்கிறாள்.

விஷ்ணு லக்ஷ்மியை ஏற்றுக்கொண்டுவிட்டதால், யாராவது ஒருவர் அவளை ஏற்க வேண்டும். தேவர்களும் அசுரர்களும் அவளை வேண்டாம் என்று சொல்ல, விருப்பு வெறுப்பற்ற சிவபெருமானுக்கே அவளைக் கொடுத்துவிடுகிறார்கள்!

சில அறிஞர்கள், அலக்ஷ்மி காட்டுத்தனமானவள், வீட்டுக்கடங்காத காளி என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். வேறு சிலர் லக்ஷ்மியும், அலக்ஷ்மியும் சேர்ந்துதான் இயற்கை எனப்படுகிறாள் என்கின்றனர். இயற்கையின் விருப்பமான அம்சம்தான் லக்ஷ்மி. அலக்ஷ்மி இயற்கை விரும்பாத அம்சம்.

லக்ஷ்மி அன்பு என்றால், அலக்ஷ்மி சிக்கல்கள் ஏற்படுத்துபவள். லக்ஷ்மி ருசியான உணவு போன்றவள் என்றால் அலக்ஷ்மி விஷப்புகை போன்றவள்.

ஒருவர் இல்லாமல் இன்னொருவர் இல்லை. மாயைதான் இருவருக்கும் இடையே வேறுபாட்டை உண்டாக்குகிறது. விஷ்ணுவுக்கு வேறுபாடு எதுவும் பார்ப்பதில்லை. அவர் லக்ஷ்மியை அலக்ஷமியோடு சேர்த்து அணைத்துக்கொள்வார். அவருக்கு லக்ஷ்மியின் இடம் எது, அலக்ஷ்மியின் இடம் எது என்று தெரியும். அலக்ஷ்மியை அலட்சியப்படுத்தக் கூடாது என்று அறிவார்.

சிவபெருமானிடமிருந்து விஷ்ணு எப்படி வேறுபடுகிறார் என்பது விஷ்ணு சிவபெருமானைப் போல் அல்லாமல், ஒரு கடவுளாக, பார்க்கப்படுகிறார் என்பதுதான். சிவபெருமான் எந்தப் பக்கத்தையும் சார்ந்து இருப்பதில்லை. அவர் அசுரர்களையும், தேவர்களையும் விரும்பவும் இல்லை. வெறுக்கவும் இல்லை. ஆலஹால விஷத்தை அருந்தி, அவர் அசுரர்களையும், தேவர்களையும் காத்திருக்கிறார். விஷ்ணு தேவர்களின் பக்கம் நிற்கிறார். இது அம்ருதாவின்

கதையிலிருந்து தெரியவரும்.

அம்ருதா என்பது நிலைத்த தன்மையுடைய அமிருதம். லக்ஷ்மியும், ஆலஹால விஷமும் வெளிப்பட்டவுடன் பாற்கடலிலிருந்து வெளிப்பட்டது. ஆரோக்கியத்துக்கும், நோய் குணமாவதற்கும் உதவும் தன்வந்திரியின் கரங்களில் இருப்பது. அவர்தான் ஆயுர்வேதத்துக்குக் கடவுள். பாரம்பரியமான இந்திய சிகிச்சை முறை ஆயுர்வேதம்.


நெற்றியில் கீழிருந்து மேலாக உள்ள கோடு விஷ்ணுவைப் போல் உலகியலில் செயல்படுகிறார் என்பதைக் காட்ட.
காலில் அணிந்திருக்கும் யோக பட்டை, அவர் சிவபிரான் போன்றவர் என்பதைக் குறிக்கிறது.

தன்வந்திரி விஷ்ணுவின் ஒரு வடிவம். விஷ்ணுவைப் போலவே அவரும் ஒரு சங்கையும், ஒரு சக்கரத்தையும் வைத்திருக்கிறார். ஆனால், எது அவரை விஷ்ணுவிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறது என்றால், அவர் ஒரு கையில் வைத்திருப்பது அமிருதம், இன்னொரு கையில் வைத்திருப்பது ரத்தத்தை உறிஞ்சி குணப்படுத்தும் அட்டையைப் பயன்படுத்துவார்கள். ஆயுர்வேத சிகிச்சை அளிப்பவர்கள், பாதிக்கப்பட்ட புண்களிலிருந்து சீழை எடுக்க இந்தப் புழுவைப் பயன்படுத்துவார்கள். குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட வேளைகளில், அமிருதத்துக்குப் பதிலாக, அவர் கையில் மூலிகைகளை அல்லது இடித்துக் குழைய வைக்கும் ஔடதக் கிண்ணத்தை வைத்திருப்பார்.

எல்லோருக்கும் அமிருதம் வேண்டும். இறவா வரம் தரும் பானம். பிரம்மாவின் குழந்தைகள் எல்லோரும், அவர்கள் கடவுளாகவோ, அரக்கர்களாகவோ இருந்தாலும் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறார்கள். எல்லோருக்கும் வாழ்ந்துகொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை. எனவே தேவர்களும், அசுரர்களும் அமிருதம் உள்ள பானையைப் பெற ஓடுகிறார்கள். கடைவதற்கு இருந்த இரண்டு பக்கத்தினரும் மோதுகிறார்கள். சண்டை வலுக்கிறது. தங்களுக்கே அமிருதம் வேண்டும் என்ற போராட்டம். யாரெல்லாம் பாற்கடலைக் கடைய உதவினார்களோ அவர்களுக்கு அமிருதம் பெறும் உரிமை உண்டு என்றாலும், யார் முதலில் பருகுவது? தேவர்களும் அசுரர்களும் ஒருவரை ஒருவர் நம்புவதில்லை.

விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து தேவர்கள், அசுரர்கள் முன்னால் தோன்றினார். அவள் அவ்வளவு அழகாக இருந்ததால் எல்லோருக்கும் அவள் மீது ஆசை ஏற்படுகிறது. சிவபெருமான், ஆலஹால விஷத்தைக் குடித்த பின்னர், தன் மலைப்பகுதி இருப்பிடத்துக்குச் செல்ல இருந்தவர், மோகினியைப் பார்த்துவிட்டார். அவளுடைய அழகில் மயங்கி, அவளை அப்படியே

அணைத்துக்கொள்கிறார். அவர்களுடைய சேர்க்கையால் பிறந்தவர்தான் ஹரி-ஹர சுதன். விஷ்ணுவுக்கும் சிவபெருமாருனுக்கும் பிறந்த குழந்தை என்பதால், சிவபிரானின் சன்னியாசத் தன்மையோடு இருக்கிறார்; திருமணம் செய்துகொள்ள விரும்புவதில்லை. விஷ்ணுவின் போர்க் குணங்களும் இருப்பதால், எப்போதும் சமூகத்தைக் காக்கும் போக்கு அவரிடம் இருக்கிறது. தமிழ் நாட்டில், இந்த போர்க்குணமும்-சன்னியாச குணமும் கொண்டவரை அய்யனார் என்று வழிபடுகிறார்கள். கேரளத்தில் அவர் மணிகண்டன், சாஸ்தா அல்லது ஐயப்பன். சபரிமலையில் இவருக்குக் கோயில் இருக்கிறது. இங்கே சில வயதுக்கு உட்பட்ட பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆண்களும் அங்கே போக வேண்டுமென்றால், பிரம்மசரிய விரதத்தையும், எளிமையான சில கட்டுப்பாடுகளையும் அனுசரிக்க வேண்டும்.


அமிருதத்தை ஏந்திச் செல்லும் மோஹினி.
அசுரர்கள் அமிருதத்துக்கு ஏங்குகிறார்கள், ஆனால் மோஹினியால் கவனம் சிதறுகிறார்கள்
தேவர்கள் அமிருதத்துக்கு ஏங்குகிறார்கள்; ஆனால் மோஹினியால் கவனம் சிதறுகிறார்கள்.

விஷ்ணுவின் மோஹினி வடிவம்-தென்னிந்தியச் சிற்பம்.

மோகினியின் மயக்கும் கவர்ச்சியில் ஒரு கணம் கட்டுண்டுவிட்டதால், எல்லோரும் அமிருதத்தை மறந்து விடுகின்றனர். அவள் அழகான குரலில், 'நான் அமுதத்தை எல்லோருக்கும் வினியோகிக்கட்டுமா?' என்று கேட்கிறாள். ஓர் அழகான பெண் அப்படிக் கேட்கும்போது ஒருவராலும் மறுக்க முடியவில்லை.

மோகினியிடம் அமுதம் நிறைந்த குடம் கொடுக்கப்பட்டவுடன், தேவர்களும் அசுரர்களும் அதை வாங்கிக்கொள்ள உட்கார்ந்துகொண்டுவிடுகிறார்கள்.

மோகினி அவர்களிடையே கண்களைச் சிமிட்டியபடி நடந்து சென்று, ஒவ்வொருவர் வாயிலும் அமிருதத்தை ஊற்றுகிறாள்.

திடீரென்று, மோகினி தேவர்களின் வாயில் மட்டுமே அமிருதத்தை ஊற்றுவதை அசுரர்கள் பார்த்துவிடுகிறார்கள். அசுரர்களுக்கு ஒன்றுமே கொடுக்கப்படுவதில்லை. ஏதோ கோளாறு நடந்திருக்கிறது என்று அவர்கள் ஊகித்துவிடுகிறார்கள். தங்களை அந்த அழகி ஏதோ ஏமாற்றிவிட்டதாக நினைக்கி றார்கள். தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மோகினியை நோக்கி விரைகிறார்கள், அமுத கலசத்தை மீண்டும் அவளிடமிருந்து தட்டிப் பறிப்பதற்காக. அதற்குள் தேவர்கள் எல்லோரும் அமுதத்தை உண்டு கூடுதல் பலம் பெற்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு அழிவில்லை. அவர்கள் மோகினியின் பாதுகாப்புக்கு விரைந்து ஓடுகிறார்கள். பெரிய சண்டை துவங்குகிறது. அசுரர்களின் ஆயுதங்கள் தேவர்களை ஒன்றும் செய்வதில்லை.

தேவர்கள் அசுரர்களை எளிதாகத் தோற்கடித்து விடுகிறார்கள்.



தேவர்கள் தங்களிடம்
இருப்பதையும்
இழந்துவிடுவோமோ
என்று அஞ்சுகிறார்கள்.

மோஹினி கவனம் இழந்த
தேவர்களுக்கு அமிருதம்
வழங்குகிறார். அவர்கள்
தகுதியானவர்கள் என்பதால்
அல்ல. மரண பயத்தை
விட்டாலும், பொருளை
இழப்பதை விடுவதில்லை
என்பதைக் காண்பிக்க.

தேவர்களிடம்
இருப்பது கண்டு
அசுரர்கள்
அஞ்சுகிறார்கள்.

மோஹினி தேவர்களுக்குப் பரிந்து செயல்படுவதைக் காட்டும் ஓவியம்

அசுரர்கள் மரணமடைந்தவுடன், இறப்புக்கு அஞ்சாத தேவர்கள், பாற்கடலைக் கடைந்து கிடைத்த அளவிட முடியாத செல்வங்களுடன் தங்கள் இருப்பிடமான அமராவதிக்குச் செல்கிறார்கள்.

மேலோட்டமாகப் பார்த்தால், மோகினி எவ்வாறு அசுரர்களை ஏமாற்றிவிட்டு, தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்தாள் என்பது ஒரு தந்திரக் கதை போல இருக்கும். அசுரர்களை ஒரு பெண் ஏமாற்றிவிட்டாள். அசுரர்கள் வில்லன்கள் என்பதால், அவர்களை ஏமாற்றியதில் தவறில்லை என்று சொல்வோர் உண்டு. ஆனால் இது சாதாரணமான, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட கதை.

இவர்கள் கடவுளான விஷ்ணுவைப் போன்ற பிரம்மாவின் குழந்தைகள்தாம் என்பதால், தேவர்களும் அசுரர்களும் ஒன்றுவிட்ட சகோதரர்கள்தாம்.

அசுரர்களையும் தேவர்களையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கும் ஆங்கில மொழிபெயர்ப்புகள், விளக்கமளிப்பதைவிட தங்கள் முடிவைத் தெரிவிப்பது போலத்தான் இருக்கிறது. அசுரர்கள் என்ன கொடுமைச் செயல்கள் புரிந்தார்கள் என்பதற்காக அவர்களைக் கடுமையாகச் சாடுகிறார்கள் என்பதை ஒருவராலும் விளக்க முடியவில்லை. இருந்தாலும், அவர்களை மோசமான பிசாசுகள் போல எல்லோரும் பார்க்கிறார்கள். இந்தப் பொறுமையற்ற அவசர முடிவு, ஒருவரை உண்மையான நிலையைப் பார்க்க முடியாமல் தடுத்துவிடுகிறது.

எது உண்மை நிலை என்றால், தேவர்கள் இறப்பதில்லை என்பதோடு, அசுரர்களும் மரணத்தை வெல்லும் சக்தியை ஒரு வரமாகப் பெற்றிருக்கிறார்கள்.

ஒரு போரில் இறந்தால், அவர்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும். ஏனென்றால் அவர்கள் குரு ப்ருகுவின் மகன் சுக்ரனுக்கு சஞ்சீவனி வித்தை என்ற தந்திரம் தெரியும். சுக்ரன் இதை சிவபெருமானிடமிருந்து பெற்றார்.

படைப்பவரான பிரம்மா, உண்மையிலேயே தேவர்கள் மற்றும் அசுரர்கள் மீது பாசத்துடன் இருந்தார் என்றால், அழிக்கும் கடவுளான சிவபெருமான் தேவர்கள்-அசுரர்கள் பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லை. ஆகவே, பிரம்மாவும், சிவபெருமானும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சரிசமமாகவே வரங்கள் கொடுத்திருந்தார்கள். அதனால், உலகில் எதுவும் நகர்வது இல்லை; எந்த மாற்றமும் ஏற்படுவது இல்லை. எதுவும் நடப்பதில்லை.


அழிவின்மைக்கான அமிருதம்;
விடுதலைக்கான விலை.
கருடன் நாகர்களின்
அடிமை.
நாகர்கள் கருடனின் ஆகாரமாகிறார்கள்.

நகர வைக்க வேண்டும் என்றால், ஏதாவது ஒரு சக்தியைக் கொடுக்க வேண்டும். இரண்டு சமமான குழுக்களிடையே எதிர்த்தரப்பை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இயக்கத்துக்கு வேண்டிய வகையில் அவர்கள் ஒருபுறம் சக்தியாகவும், மறுபுறம் எதிர்ப்புச் சத்தியாகவும் செயல்படுவார்கள்.

காப்பவர் என்ற முறையில் விஷ்ணு, இயக்கத்தை உருவாக்கி, சக்தியில் பேதங்கள் உண்டாக்கி, அமிருதத்தை தேவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அசுரர்களுக்கு மறுத்து விடுகிறார்.

தேவர்கள் எப்போதுமே அசுரர்களைக் கொன்றுவிட்டு, லக்ஷ்மியை சொர்க்கத்துக்கு எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். சில வேளைகளில் அவர்கள் இதைத் தாங்களே செய்துவிடுவார்கள். சில வேளைகளில் மட்டும் விஷ்ணுவின் துணையை நாடுவார்கள். இந்த்ரன் தனக்குப் பாதுகாப்பு இல்லை என்று எண்ணியதால், அத்தோடு அவர் இன்பப் பிரியர் என்பதால், அவர்களால் அதிக காலம் லக்ஷ்மியை வைத்திருக்க முடியவில்லை. அவள் போய்விடுகிறாள். அவளைத் திரும்பப் பெற மீண்டும் அசுரர்கள் தேவைப்பட்டார்கள். சென்ற அறுவடையின் போது அசுரர்களைக் கொன்றாலும், சஞ்சீவனி வித்யா மூலம் அவர்களை உயிர்ப்பித்ததால், நிலங்கள் செழிப்பாகி ஒவ்வோர் ஆண்டும் பயிர்கள் வளர்கின்றன. ஒவ்வொரு முறை அசுரர்கள் உயிர்த்தெழும்போதும், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் மூள்கிறது. அசுரர்கள் இறக்கிறார்கள். லக்ஷ்மியை தேவர்கள் எடுத்துக்கொள்ள, புதிய சுற்று தொடங்குகிறது.

தேவர்களும் அசுரர்களும் லக்ஷ்மியை எடுத்துக் கொண்டு போவதில் தீவிரமாக இருக்கிறார்கள். தேவர்கள் மறைத்தாலும், அசுரர்கள் லக்ஷ்மியை மீண்டும் உருவாக்குகிறார்கள். அதனால்தான் யாகங்களில் தேவர்களுக்கு அர்ப்பணம் கொடுக்கப்படுகிறது. இது ஒரு வகையில் அமிருதத்தைப் பெற்றுக்கொண்ட தேவர்களுக்கு மட்டுமல்லது, மறுக்கப்பட்ட அசுரர்களுக்கும்

சேர்த்துத்தான். அசுரர்கள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்படுவதை விஷ்ணு விரும்பவில்லை. அப்படி நடந்துவிட்டால், உலகின் சுழற்சி நின்றுபோய் நின்று போய்விடும்.




விஷ்ணுவும் லக்ஷ்மியும் அனந்த சேஷன் நாகத்தின் மீது படுத்திருக்கிறார்கள்.




பாம்புப் படுக்கையான அனந்தசேஷன் மீது படுத்திருக்கும் விஷ்ணுவும், அருகே லக்ஷ்மியும்

இரண்டு சக்திகளுக்கு இடையே மோதல் ஏற்படுவது ஹிந்து புராணங்களில் சகஜமாகக் காணப்படுவதுதான். ஒரு மோதல் லோகாயதத்துக்கும் ஆன்மிக உண்மைக்கும், ரிஷிகளுக்கும் மயக்கும் மங்கைகளுக்கும், சிவபெருமானுக்கும் மோகினிக்கும் ஏற்படுவதுதான். இன்னொன்று தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையேயான லோகாயத உண்மை.

விஷ்ணுவின் தலைமையில், உண்மைகளுக்குள்ளேயான மோதல் நாகங்களுக்கும் கருடனுக்கும் இடையேயான மோதல்தான். இரண்டுமே விஷ்ணுவுக்கு வேண்டப் பட்டவை.

அசுரர்களைப் போல நாகங்களும் பூமிக்குக் கீழே வாழ்கின்றன. அசுரர்களின் நகரத்தைப் போலவே,

நாகர்களின் நகரம் போகவதி, தங்கத்தாலும் முத்துக்களாலும் உருவாக்கப்பட்டது. தேவர்களைப் போல, கருடர்களும் வானத்தில் பறக்கின்றன. அசுரர்கள், தேவர்கள் போலவே, பருந்துகளின் தலைவரும், நாகமும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். பிரம்மாவின் குழந்தைகள். இரண்டு மனைவிகளுக்குப் பிறந்தவர்கள்.

பிரம்மா காசியபர் என்ற ரிஷியின் உருவம் எடுத்துக்கொண்டு, கத்ரு, வினதா என்று இரண்டு மனைவிகளை ஏற்றுக்கொள்கிறார். கத்ரு தனக்கு நிறையக் குழந்தைகள் வேண்டும் என்கிறார். எனவே அவர் நாகங்களின் தாயார் ஆகிறார். மாறாக, வினதா தனக்குக் குறைந்த அளவில், பலசாலிகளான குழந்தைகளே வேண்டும் என்கிறார். எனவே, அவர் பலம் மிக்க கருடனின் தாயார் ஆகிறார்.

கருடன் அடிமைத்தனத்தில் பிறந்தவர். ஒரு பந்தயத்தில் தோற்றுப் போய் அவர் தாயார் கத்ருவுக்கு சேவகம் செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்.

நாகர்களுக்கு சேவகம் செய்து அவமானப்பட கருடன் விரும்புவதில்லை. எப்படியாவது ஒரு வழி கண்டுபிடிக்க முயலுகிறார். 'உங்களின் சுதந்திரமும், உங்கள் தாயாரின் சுதந்திரமும் அமிருதம் வைக்கப்பட்ட குடத்தில் இருக்கின்றன. அதைத் தான் தேவர்கள் கவனமாகப் பாதுகாக்கிறார்கள்' என்று நாகர்கள் பதிலளிக்கிறார்கள்.

கருடன் வானத்திற்கு உயர்கிறார். மிகப் பெரிய முயற்சி எடுக்காமலே தேவர்களைத் தோற்கடிக்கிறார். சொர்க்கத்திலிருந்து கீழிறங்கி கைகளில் அமிருதம் அடங்கிய குடத்துடன் வருகிறார். தன் கையில் இருந்தாலும், கருடன் அமிருதத்திலிருந்து ஒரு சொட்டுக்கூடப் பருகுவதில்லை. இந்தப் பற்றற்ற தன்மை விஷ்ணுவுக்குப் பிடித்துப் போய்விடுகிறது. கருடன் நல்ல நண்பராக இருப்பான் என்று நம்புகிறார். விஷ்ணு கருடனை வழியில் தடுத்து, 'என்னுடைய வாகனமாக நீ இருந்தால், உன் விடுதலைக்கும் உன் தாயாரின் விடுதலைக்கும் வழி செய்து, நாகர்கள் அழிவற்றவர்களாக இல்லாமல் போகச் செய்கிறேன்' என்கிறார்.

விஷ்ணுவின் சொற்படி, அமிருதக் குடத்தை நாகர்களுக்கு ஒப்படைக்கு முன், கருடன் தன் விடுதலை, தன் தாயார் விடுதலையை வேண்ட,

'அப்படியே ஆகட்டும்' என்று நாகா சொல்லிவிட்டு, 'நீங்கள் இனி சுதந்திரமாக இருக்கலாம்' என்கிறார்.

வாக்குக் கொடுத்தபடி, கருடன் அந்தக் குடத்தைப் புல் தரை மீது வைக்கிறார். பிறகு நாகர்களை நோக்கி 'நீங்கள் குளித்துவிட்டுப் புனிதமாக வந்து அமிருதத்தை வாங்கிக்கொள்ளுங்கள்' என்கிறார். அமிருதத்துடன் கருடன் வருவதற்காகக் காத்திருந்த நாகர் நதியை நோக்கி ஓடுகிறார்கள்.

அவர்கள் போனதும், கருடன் இந்த்ரனை அழைத்து அமிருதக் குடத்தை எடுத்துக்கொண்டு செல்லும்படி சொல்கிறார். அகமகிழ்ந்து போன தேவர்களின் மன்னன் கருடனுக்கு ஒரு வரம் கொடுக்கிறார். 'இனிமேல் நாகர்கள் உங்களுக்கு உணவு ஆவார்கள். அவர்களைக் கொல்வதால் உங்களுக்கு எந்தப் பாபமும் வாராது!' என்கிறார்.

நாகர்கள் திரும்பி வந்தவுடன் குடம் அங்கே இல்லாததைக் கண்டு கோபம் அடைகிறார்கள். அதைப் பிடித்து வைத்துக்கொள்ளாமல் இருந்ததற்காக கருடனைக் கோபித்துக்கொள்கிறார்கள். 'எனக்கு அப்படி எந்தக் கட்டாயமும் இருக்கவில்லை. நான் இனி உங்கள் அடிமை அல்ல!' என்று கருடன்

கொக்கரிக்கிறான்.

குடம் வைத்திருந்த புல் தரையில் ஊர்ந்து செல்கின்றன அதிருப்தியடைந்த நாகங்கள். இதற்கு ஒரு மந்திர சக்தி இருந்தது. புல்லின் மீது அமுதத்தை வைத்திருந்ததால் புல் மீண்டும் முளைக்கும் சக்தி பெறுகிறது. அதே போல, புல்லின் மீது ஊர்ந்து செல்லும் நாகங்களுக்கும் மீண்டும் புத்துயிர்

பெறும் சக்தி கிடைக்கிறது. அவ்வப்போது அவை தம் சட்டையை உரித்துப் போட்டு, மீண்டும் இளமையுடன் இருக்க முடியும்.

தேவர்களும், அசுரர்களும் நிரந்தர எதிரிகள் என்பது

போலவே, நாகர்களும், கருடன்களும் எதிரிகளாகிறார்கள். கருடனும், தேவர்களும் வானத்தில் உள்ள சக்திகளான சூரியன், சந்திரன், காற்று, மழை, மற்றும் தீயைக் குறிப்பிடுகிறார்கள். நாகர்களும், அசுரர்களும் மண்ணின் புத்துயிர் பெறும் தரத்தைக் குறிப்பிடுகிறார்கள். தேவர்கள் லக்ஷ்மியை பூமியிலிருந்து விடுவித்தாலும், விஷ்ணுவால் மட்டுமே அவளுக்கு இடம் கொடுக்க முடியும்.

விஷ்ணு தேவர்கள் பக்கம் இருந்தாலும், அவருக்கு அசுரர்களின் மதிப்பு தெரியும். அதனால்தான் கருடனையும் நாகத்தையும் புனிதமானதாக விஷ்ணு கருதுகிறார்.

# 4
# திருவிக்ரமாவின் ரகசியம்
## அறியாமை பாதுகாப்பின்மைக்கும் கொடுமைக்கும் வழி வகுக்கிறது




விஷ்ணுவால் மட்டுமே லக்ஷ்மியையும் சரசுவதியையும் ஒன்றாக வைத்திருக்க முடியும்.
செல்வத்தின் கடவுள் லக்ஷ்மி, எருதின் வால் முடி போலக் கையில் வைத்திருப்பது செல்வம், வசதி ஆகியவற்றை அவள் கொண்டுவருவாள் என்பதன் அடையாளம்.
ஞானத்தின் கடவுள் சரசுவதி ஓர் இசைக்கருவியை வைத்திருக்கிறாள். அது ஒத்திசைவு, லயம் என உலகு அமைதியாய் வாழச் செய்கிறது.

13ஆம் நூற்றாண்டு வங்காள ஓவியம்-லக்ஷ்மியும் சரசுவதியம் விஷ்ணுவுடன் அமர்ந்திருக்கிறார்கள்.

லக்ஷ்மி செல்வத்துக்குக் கடவுள் என்றால், சரசுவதி கல்விக்குக் கடவுள். லக்ஷ்மி சிவப்புப் புடவையுடன் ஏராளமான தங்க நகைகள் அணிந்துகொண்டிருக்க, சரசுவதி வெள்ளைப் புடவையில், தங்க நகை ஏதும் இல்லாமல் இருக்கிறார். லக்ஷ்மி எங்கு போனாலும் செல்வத்தைக் கொண்டு செல்வார். சரசுவதி அமைதியைக் கொண்டுவருவார். அவர்கள் இருவரையும் வெகு அபூர்வமாகத்தான் சேர்ந்து பார்க்க முடியும்.

சரசுவதி இருக்குமிடத்துக்குத்தான் லக்ஷ்மி வரவழைக்கப்படுவாள். அதனால்தான் செல்வச் செழிப்பு இருக்குமிடத்தில் அமைதி நிலவுகிறது.

ஆனால், லக்ஷ்மி வரும்பொழுது, கவனம் சரசுவதியிடமிருந்து லக்ஷ்மிக்குப் போய்விடுகிறது. சரசுவதி கோபமுற்று அங்கிருந்து அகன்றுவிடுகிறாள்.

அவள் இடத்துக்கு லக்ஷ்மியின் சகோதரி அலக்ஷ்மி வந்து அவள் கூடவே இருக்கிறாள். அலக்ஷ்மியுடன் கூடவே பிரசினைகளும் வருகின்றன.

பிரசினை வந்தவுடன் அமைதி போய்விடுகிறது. அமைதி போன பிறகு, செல்வச் செழிப்பு இயற்கையாகவே மறையத் தொடங்குகிறது. லக்ஷ்மி போனவுடன் எதுவும் இருப்பதில்லை!

இதுதான் திரும்பத் திரும்ப தேவர்களுக்கு ஏற்படுகிறது. இந்த்ரனுக்கு அருகில் லக்ஷ்மி அமர்ந்திருக்ககையில், இந்த்ரன் சரசுவதியை அலக்ஷியம் செய்துவிட்டு அச்சத்துடன் இருக்கிறான். அதனால் லக்ஷ்மி அவனை விட்டுப் போய்விடுகிறாள். இந்த்ரனுக்குச் சரியான புத்தி வந்த பிறகே லக்ஷ்மி திரும்பி வருகிறாள். இந்த்ரன் அடக்கம் மேலோங்க, விஷ்ணுவை சரணாகதி அடைகிறான்.

இதுவேதான் அசுரர்களுக்கும் ஏற்படுகிறது. பாற்கடலிலிருந்து கிடைக்கும் பொக்கிஷங்கள் எதுவும் கிடைக்காமல் போய்விட, அவர்கள் சன்னியாசிகளாகி

சரசுவதியை அடைகிறார்கள். சிவபெருமானிடமிருந்தோ, பிரம்மாவிடமிருந்தோ அவர்கள் வகை வகையான வரங்களைப் பெற்று வெல்ல முடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்கள் தேவர்களைத் தோற்கடித்து விடுகிறார்கள். அமராவதிக்குப் போய் லக்ஷ்மியைப் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதிகாரமும் செல்வமும் சேர்ந்ததும், அவர்கள் சரசுவதியை மறந்து விடுகிறார்கள். அவர்கள் அயோக்கியர்களாக மாறிவிட, பின்னர் விஷ்ணுவின் கையால் அவர்களுக்கு சரிவு ஏற்படுகிறது.


மயில் பெருமை-அகந்தையின் பாரம்பரியச் சின்னம். அவை சரசுவதியின் முன் தலைகுனிகின்றன.
சரசுவதி வெள்ளுடை அணிந்திருக்கிறாள், எளிமையைக் காட்ட.
இசைக்கலைக்கும் கடவுள் என்பதைக் காட்ட, வீணையோடு சரசுவதி.
அன்னம் பகுத்தறியும் புத்திசாலித்தனத்துக்கு அடையாளம்; காரணம் பாலையும் நீரையும் அன்னம் பிரித்தெடுக்கும்.

ஒவ்வொரு சமயத்திலும் தேவர்களும் அசுரர்களும் சரசுவதி மீது அல்லது லக்ஷ்மி மீது கவனம் செலுத்துவார்கள். ஆனால் விஷ்ணுவோ இருவரையும் எப்போதும் கவனித்து வருவார். விஷ்ணுவின் போக பத்னி லக்ஷ்மி என்பதால், மனிதகுலத்தின் வாழ்க்கைத் தேவைகளுக்கு அவள் ஓர் இணைப்பாக இருக்கிறாள். சரசுவதி விஷ்ணுவின் மோக்ஷ பத்னி. மனித குலத்தின் ஆன்மிகத் தேவைகளுக்குப் பாலமாக இருக்கிறாள். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள மாட்டார்கள் என்பதால், சரசுவதியைத் தன் வாய்க்கு உள்ளும், லக்ஷ்மியைப் பாதத்திலும் மறைத்து வைத்திருக்கிறார். ஆக, அவர்களுக்கிடையே ஒற்றுமை இருக்குமாறு அவர் சமாளித்துவிடுகிறார்.

மகாபாரதத்தில், இந்திரபிரஸ்த அரசை நிறுவிவுடனே, இந்த்ரனைப் போலவே, அதை சூதாடித் தோற்று பதின்மூன்று ஆண்டுகளுக்கு அதன் உரிமையைப் பாண்டவர்கள் இழந்து விடுகிறார்கள். செல்வத்தை (லக்ஷ்மியை) இழந்த பின், பாண்டவர்கள் அவமானப்படுத்தப்பட்டு வனத்துக்குச் செல்கிறார்கள். அங்கே சரசுவதியை மீண்டும் அடைந்து, தங்கள் வாழ்க்கையில் லக்ஷ்மியின் பங்கு என்ன என்பதை அறிகிறார்கள். வனவாசம் முடிந்ததும், அவர்கள் கௌரவர்களிடம் தங்கள் நாட்டைத் திருப்பித் தரும்படி கேட்கிறார்கள். ஆனால் கௌரவர்கள் இந்திரபிரஸ்தத்தை விடாமல் பிடித்துக்கொண்டு தங்கள் வார்த்தையைக் காற்றில் பறக்கவிட, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே போர் மூள்கிறது. இரண்டு அணியினரும் கிருஷ்ணரிடம் உதவி கேட்டுச் செல்கிறார்கள். கிருஷ்ணர் தன்னையோ தனது படைகளையோ எடுத்துக்கொள்ளலாம் என்கிறார். பாண்டவர்கள் சார்பாக அர்ஜுனன் கிருஷ்ணரைத் தேர்வு செய்கிறான். கௌரவர்களின் சார்பாக துரியோதனன் கிருஷ்ணரின் சேனையை எடுத்துக் கொள்கிறான். ஆக கிருஷ்ணரின் சக்தியை அறிந்து பாண்டவர்கள் செயல்பட, கௌரவர்களோ அவரிடம் இருப்பதை அறிந்து

செயல்பட்டார்கள்.

போரில், கௌரவர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட, பாண்டவர்கள் அரசையும், ஞானத்தையும் பெறுகிறார்கள்.




வராஹர் சிறு ஓவியம்.




வராஹரும் பூதேவியுமாக, தென்னிந்தியக் கோயில் சிற்பம்.

சரசுவதியைப் பெற வேண்டும் என்ற தாகம் பிரம்மாவிடமிருந்து பிரம்மத்துக்கு, ஜீவாத்மாவிலிருந்து பரமாத்மாவுக்கு, எல்லையிலிருந்து எல்லையற்றதற்கு என்ற பயணத்தைக் காண்பிக்கிறது. இந்தப் பயணம் 'என்னிடம் என்ன இருகிறது' என்பதிலிருந்து கிளம்பி 'நான் யார்' என்பதில் நிறைவு பெறுகிறது. ஆனால் மாயையில், நாம் 'என்னிடம் என்ன இருக்கிறது' என்பதை 'நான் யார்' என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

என்னுடையது என்பது நான் ஆகிவிடுகிறது. என்னிடம் இருப்பது அதிகமாக ஆக, நான் என்ற நினைப்பு அதிகமாகிறது. நாங்கள் எங்கள் சுய உருவை உருவாக்கினோம். இது ஒரு மாயை. தங்கள் செல்வத்தையும், பாற்கடலைக் கடைந்த பின் அழிவற்ற

தன்மையையும் இழந்தபின்பும் இந்தப் பாதையைத்தான் அசுரர்கள் எடுத்தார்கள், சரசுவதியைப் பின் தொடர்வதைவிட்டு, லக்ஷ்மியைத் தொடர்ந்தார்கள். லக்ஷ்மியை அடைந்து விட்டால் அவர்கள் அழிவற்றவர்களாகவும் சக்தி மிகுந்தவர்களாகவும் ஆகிவிடுவோம் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள். லக்ஷ்மி கூடவே இருந்தாலும், தேவர்கள் பாதுகாப்பு இல்லாமல் எப்போதும் கவலையோடு இருந்தார்கள்.

எனவே ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பூதேவியைப் பாதாளத்துக்குக் கீழே கடலுக்கு அடியில் இழுத்துவிட்டு, தனக்கு உரிமை கொண்டாடுகிறான்.

அவளுடைய எசமானனாகத் தான் இருப்பதாக அறிவிக்கிறான். இது ஒரு மாயை. பூமி யாருக்கும் சொந்தமல்ல. அவளைச் சொந்தம் கொண்டாட அல்லது அவளது பகுதிகளை சொந்தம் கொண்டாட முயல்வது முட்டாள்தனமான முயற்சி.

பூமா தேவியை ஹிரண்டாக்ஷன் கடத்திக்கொண்டு போனது தேவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கிறது. தங்கள் தந்தை பிரம்மாவிடம் புகார் கூறுகிறார்கள்.

பிரம்மாவுக்கு பூதேவியின் அழுகைக்குரல் கேட்கிறது. ஆத்திரத்தில், பிரம்மாவின் நாசி விடைக்கிறது. அவருடைய விடைத்த நாசியின் ஒரு பகுதியிலிருந்து கொம்புகளுடன் காட்டுப் பன்றி கிளம்புகிறது. இப்படி வராஹ உருவத்தில் வந்தது அந்த விஷ்ணுவேதான்!

வராஹம் கடலுக்கடியில் நுழைந்து அசுரன் ஹிரண்யாக்ஷனிடம் மோத வருமாறு சவால் விடுகிறது. ஹிரண்யாக்ஷனுடன் பயங்கரமான சண்டை அவன் பூதேவியயைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்க, அவளை விடுவிப்பதாயில்லை. முடிவில், வராஹம் அசுரனைக் கொன்றுவிடுகிறது. தன் கொம்பில் பூமியைப் பந்து போல் தூக்கி மேலே எழும்புகிறது. பூதேவி விஷ்ணுவைப் பாராட்டிப் பாடுகிறாள். பூபதி என்று அவரைக் கொண்டாடுகிறாள். அதாவது பூமிக்கு அதிபதி. தன் கணவன். அவர் அவளைப் பாதுகாப்பதாகக் கூறுகிறார்.

'உன்னை யாராவது அவமரியாதையாக நடத்தினால், அவர்கள் எனக்குப் பதில் சொல்லியாக வேண்டும்' என்கிறார் விஷ்ணு.







கோவாவில் தீபாவளியின்போது நரகன் உருவபொம்மையைக் கொளுத்துகிறார்கள்.




வட இந்திய ஓலை ஓவியம்: நரகனின் கோட்டையைத் தாக்குகிற காட்சி.

அன்றிலிருந்து விஷ்ணு பூமியின் பாதுகாவலன் ஆகிறார். பூமியை மேலே ஆகாயத்திலிருந்து பார்த்துக் காக்கிறார். அதனால்தான் விஷ்ணு நீல நிறமாயிருக்கிறார்.

அவர்கள் மேலே எழுந்தவுடன் பூதேவி வராஹரைத் தன் கணவராக ஏற்றுக்கொள்கிறாள். பூபதி என்று பெயர் சூட்டுகிறாள். அவர்கள் காதலுடன் அணைத்துக் கொண்டார்கள். விஷ்ணுவின் அணைப்பு அத்தனை அழுத்தமாக இருந்ததால், பூமி நொறுங்கியது, மலைகளும் பள்ளத்தாக்குகளும் உண்டாகின. தன் கொம்புகளை பூமியில் அழுத்த, பூமியில் எல்லா தாவரங்களின் விதைகளும் விழுந்து புதைந்தன.

வராஹர்-பூமாதேவி சேர்க்கையால் ஒரு குழந்தை பிறந்தது. அவன் பெயர் நரகன். விஷ்ணுவின் மகனாக இருந்தாலும் அவன் ஓர் அசுரன். எல்லா அசுரர்களைப் போலவே அவனும் தனக்கு சக்திகள் பல கிடைக்க வேண்டும் என்று வேண்டினான். அவன் பிரம்மாவைத் துதித்து, அழியாமை வரம் கேட்டான். அது மறுக்கப்பட்டதும்

அவன் சொன்னான்: 'என் தாயாரை நான் தாக்கினால்தான் நான் கொல்லப்பட வேண்டும்.' தன் தாயான பூமித்தாயை தாக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையில் இதைச் சொன்னான். பிரம்மா நரகனுக்கு அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தார். வரம் கிடைத்ததில் பலம் பெற்ற நரகன் தேவர்களின் இருப்பிடம் சென்று இந்த்ரனின் குடையும், அதிதியின் காதணியும் தனக்கு உரிமையாக வேண்டும் என்றான்.

நரகனுக்கு சண்டை போட சவால் விடுக்கிறார் கிருஷ்ணர். கிருஷ்ணரின் அருகில் அவர் மனைவி சத்யபாமா இருப்பதை நரகன் பார்த்தான். கிருச்ஷ்ணரும் சத்யபாமாவும் விஷ்ணு மற்றும் பூதேவி என்ற அழிவற்ற அவதாரங்கள் என்பதை அறியாதவன். தங்கள் பெற்றோர் என்பதை அறியாதவன்.




லக்ஷ்மியின் வடிவங்களான ஸ்ரீதேவி-பூதேவியுடன் விஷ்ணு ஓவியம்.




தூணிலிருந்து வெளிப்படும் நரசிம்மர்: மைசூர் ஓவியம்.

தன் ஆயுதத்தை கிருஷ்ணர் மீது வீசினான். அது சத்யபாமாவைத் தாக்கியது. அப்படி செய்த போது, அவள் தாயைத் தாக்கியதாக ஆயிற்று. உடனே அவன் கிருஷ்ணரின் ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிர் இழப்பதற்கு வாய்ப்பளித்துவிட்டான்.

நரகன் என்ற அசுரனின் பொம்மைகள் கர்நாடகத்தின் கொங்கன் பகுதியில் தீபாவளியின்போது எரிக்கப்படுகின்றன. தீபத் திருநாளான தீபாவளி குளிர்கால அறுவடை சமயத்தில் வருவது. இந்தப் பண்டிகை லக்ஷ்மியின் வருகையைக் கொண்டாடும் பண்டிகை. இங்கே அசுரனை உருவாக்கியவரும், அழித்தவரும் விஷ்ணுதான். அதாவது பயிர்களை விதைத்து வளர்க்கும் விவசாயியே அதை வெட்டிஅறுவடை செய்பவன் ஆகிறான்

என்ற உதாரணத்தைக் காண்பிக்கிறது. லக்ஷ்மி கிடைக்க வேண்டுமானால், அசுரனை ஒவ்வோர் ஆண்டும் கொல்ல வேண்டும் என்பதை நமக்கு இது நினைவுபடுத்துகிறது.

பூதேவி லக்ஷ்மியின் ஒரு வடிவம்தான். லக்ஷ்மிக்கு இன்னொரு வடிவம் உண்டு. அதுதான் ஸ்ரீதேவி. அது செல்வத்தைக் குறிக்கிறது. எல்லோரும் ஆசைப்படும் பொன்னையும் புகழையும் குறிக்கிறது. ஸ்ரீதேவிதான் சச்சி. இந்த்ரனின் அருகே அமர்ந்திருப்பவள். பூதேவி என்பவள் புலோமி.

அவளைத்தான் அசுரரகள் தூக்கிச் சென்றார்கள். இருவராலும் ஒருவரை ஒருவர் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனவே பூதேவியும் ஸ்ரீதேவியும் விஷ்ணுவை வந்தடைந்தார்கள்.

உலகத்தில் வாழ, இயற்கை எல்லா உயிரினங்களுக்கும் இரண்டு விஷயங்களைத் தந்திருக்கிறது: ஒன்று பலம், இன்னொன்று கபடத்தனம். அழியாமையை வேண்டி, ஹிரண்யாக்ஷன் பலத்தை உபயோகித்தான். தோற்றுப் போனான். எனவே அவன் சகோதரன் ஹிரண்யகசிபு கபடத்தனத்தைக் கையாண்டான். பிரம்மாவைத் துதித்து, 'உன்னால் எனக்கு அழியாமை தர இயலவில்லை என்றால், என்னைக் கொல்பவன் மனிதகுலத்தைச் சேர்ந்தவனாகவோ, மிருக குலத்தைச் சேர்ந்தவனாகவோ இருக்கக்கூடாது. ஆயுதம் பயன்படுத்தக்கூடாது. வசிக்கிற இடமாகவும் இருக்கலாகாது; வெளிப்புறமாகவும் இருக்கலாகாது. தரையிலோ, ஆகாயத்திலோ கூடாது. பகலிலும் கூடாது; இரவிலும் கூடாது.' அவனுக்கு வரம் அளிக்கப்பட்டது.


நரசிம்மர் முழு மனிதனும் அல்ல; முழு மிருகமும் அல்ல.
நரசிம்மர் தூணை உடைத்துக்கொண்டு வெளிப்பட்டார்.
ஹிரண்யகசிபு; அவன் அசுரன் ஆனால் இறப்பை வென்றதால் தன்னைக் கடவுள் என்று நம்புகிறான்.
பிரஹலாதனும் அசுரன்தான். ஆனால் விஷ்ணு பக்தன்.

எனவே தன்னை யாரும் கொல்ல மாட்டார்கள், தான் சாக மாட்டோம் என்று ஹிரண்யகசிபு எண்ணிக்கொண்டான். 'நான் இறக்கவில்லையானால், நான் ஆன்மிக உண்மையாகி விடுவேன். அதாவது நான் கடவுள் ஆகிவிடுவேன்!'

இங்கே ஹிரண்யகசிபு இறவாமை கிடைக்க சரசுவதியைப் பயன்படுத்திக்கொள்கிறான். அதனால் இங்கே லக்ஷ்மி வருகிறாள். சரசுவதி அசுரர்களுக்காக, ஒரு வகையில் கருவியாக உதவுகிறாளே தவிர, அவளே முடிவல்ல. லக்ஷ்மியைப் பெற சரசுவதியைப் பயன்படுத்திக்கொண்டாலும், அவளை வித்யாலக்ஷ்மி என்றுதான் அழைக்கிறார்கள். வித்யா லக்ஷ்மி என்னிடம் உள்ளதை அதிகரிக்கச் செய்கிறாளே தவிர, என்னை பிரம்மத்திடம் அழைத்துச் செல்வதில்லை. ஜீவாத்மா மாயைக்குள் சிக்கி, ஜீவாத்மாவாகவே இருக்கிறது.

இறவாமை ஒன்று மட்டுமே கடவுளின் அம்சம் அல்ல. தேவர்களுக்கு இறவாமை இருக்கிறது என்பதால் அவர்கள் கடவுளர்களாக மதிக்கப்படுகிறார்களே தவிர, கடவுள் அல்ல. ஏனென்றால் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பதில்லை, பாதுகாப்பற்றவர்களாக உணர்கிறார்கள். அவர்களால் லக்ஷ்மியை வைத்துக் காப்பாற்ற முடிவதில்லை. தவிர, தேவர்கள் பூமிக்கு மேலேதான் வசிக்கிறார்கள். பூமிக்குக் கீழே அல்ல. கடவுள் அல்லது பரமாத்மா எல்லா இடங்களிலும் வசிக்கிறார்.

ஹிரண்யகசிபுவின் மகன் பிரஹலாதன் தன் தந்தையைக் கடவுளாக அங்கீகரிக்க மறுக்கிறான். அவன் விஷ்ணுவை மட்டுமே வேண்டுகிறான்.

கோபம் கொண்ட ஹிரண்யகசிபு தன் மகனைக் கொடுமைப்படுத்துகிறான். தண்ணீரில் வீசி எறிகிறான். ஆனால் தன் பக்தனை விஷ்ணு மூழ்காமல் காப்பாற்றிவிடுகிறார். தன் சகோதரி ஹோலிகாவிடம் பிரஹலாதனை எடுத்துக்கொண்டு தீயில் நடக்கச் சொல்கிறான். ஹோலிகாவை நெருப்பு எதுவும் செய்யாது என்ற வரம் அவளுக்கு இருக்கிறது. ஆனால் ஹிரண்யகசிபு

ஆச்சரியப்படும் வகையில், ஹோலிகாவும் பிரஹலாதனும் பெருந்தீயில் நுழைய, ஹோலிகா எரிந்து சாம்பலாகிவிட, பிரஹலாதன் எந்த ஆபத்தும் இன்றி வெளிவந்துவிடுகிறான். ஏனென்றால், பிரம்மா கொடுத்த வரத்தை விஷ்ணுவால் திரும்பப் பெற முடியும். ஹோலி பண்டிகையின்போது, பெரும் தீ மூட்டி, குளிர்காலத்துக்கு விடை சொல்வது போல் இந்தக் கதையைக் கூறிக் கொண்டாடுவார்கள்.


நரசிம்மர்தான் மிகவும் உக்ரமான, ஆக்ரோஷமான விஷ்ணு வடிவம்.
லக்ஷ்மி அவரை அமைதிப்படுத்தி, அவர் உக்ரத்தைக் குறைக்கிறாள்.

நரசிம்மர் தொடையில் லக்ஷ்மி அமர்ந்திருக்கும் ஆந்திர பொம்மை.

இறுதியில் ஹிரண்யகசிபு தன் மகனிடம் விளக்கம் கேட்கிறான். பிரஹலாதன் சொல்கிறான்: 'விஷ்ணுதான் இடத்துக்கும் காலத்துக்கும் அதிபதி. உங்கள் தந்திரத்தால் நீங்கள் காலத்தை வென்றிருக்கலாம். ஆனால் நீங்கள் இடத்தை வெல்லவில்லை. நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். ஆனால் விஷ்ணு எல்லா இடத்திலும் இருக்கிறார். அதனால்தான் விஷ்ணு ஒரு கடவுளாக இருக்கிறார். உன்னால் முடியவில்லை!'

ஹிரண்யகசிபு சமாதானம் அடையவில்லை. அவன் பிரஹலாதனிடம் சவால் விடுகிறான். 'நீ என்ன, விஷ்ணு என் அரண்மனைத் தூணிலும் இருப்பான் என்கிறாயா?' என்று கேட்கிறான். பிரஹலாதன் ஆமாம் என்று தலையசைக்கிறான். அவன் சொல்வது தவறு என்று காண்பிக்க, ஹிரண்யகசிபு தன் அரண்மனையில் ஒரு தூணை எட்டி உதைக்கிறான். தூண் தெறித்துவிழ, அவன் அதிர்ச்சியடையும் வகையில் ஓர் உருவம் அதிலிருந்து வெளிப்படுகிறது. அது விசித்திரமான உயிரினமாக இருக்கிறது. மனிதனுமல்ல, மிருகமும் அல்ல. அது நரசிம்மர். பாதி சிங்கம், பாதி மனிதன். நரசிம்மர் தன் கை நகங்களால் அசுரனைப் பற்றுகிறார். அது எந்த ஆயுதமும் இல்லை. அரண்மனையின் முற்றத்துக்கு இழுக்கிறார்.

அது குடியிருக்கிற இடமும் அல்ல, வெளிப்புறமும் அல்ல. தன் தொடைகளில் அந்த அசுரனை வைத்துக்கொள்கிறார். அது தரையும் அல்ல.

ஆகாசமும் அல்ல. அந்தி வேளையில்-அது பகலும் அல்ல, இரவும் அல்ல-நரசிம்மர் அவன் குடலைக் கிழித்து அவனுடைய ரத்தத்தைக் குடிக்கிறார். ஆக, தந்திரமான ஹிரண்யகசிபு கடவுளை ஏமாற்றப் பார்த்த போதும், கடவுள் அவனையும் விஞ்சி விடுகிறார்.

அசுரனின் ரத்தத்தைக் குடித்ததால், விஷ்ணுவுக்கு ரத்த தாகம் எடுத்து விடுகிறது. லக்ஷ்மி தேவி அவர் மடியில் அமர்ந்து அவரை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. குளிர்ந்து அமைதியடைந்ததும், நரசிம்மர் பிரஹலாதனை

ஆசிகூறி வாழ்த்துகிறார்.




நவ குஞ்சரா என்ற பட்டா ஓவியம்: ஒரிய மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்ட முழு

பாதி மனிதனும் பாதி மிருகமுமாக ஓர் உருவம் இருக்க முடியும் என்று ஹிரண்யகசிபு நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. கல் தூணுக்குள் உயிரோடு ஒருவர் இருக்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. விஷ்ணு அவர் கற்பனையைச் சிதறடித்துவிட்டார். இந்தக் கதை விஷ்ணு நாடோடிக் கதைகளில் இருக்கிறது. விதி என்பது மனித கற்பனைகளுக்குள் அடங்குவதல்ல. இந்த உலகில் நமக்கு வியப்பு அளிக்கும் விஷயங்கள் எப்போதும் இருக்கின்றன.

விஷ்ணுவின் கதைகளில் இது மீண்டும் மீண்டும் வருகிறது. ராமாயணத்தில் சீதை தங்க மானைப் பார்த்துவிட்டு, ராமரிடம் தனக்குப் பிடித்துத் தரச் சொல்கிறாள். லக்ஷமணர் அது உண்மையான மான் அல்ல, அது இயற்கையானது அல்ல என்கிறார். உடனே ராமர், 'இயற்கையை அளவிட்டு அறிந்துகொண்டுவிட முடியும் என்று நினைக்காதே. இயற்கை அளவற்றது. மனித மனம்தான் முடிவானது.' என்கிறார்.

மகாபாரதத்தில், பீஷ்மர் கௌரவர்களின் தளபதியாக இருந்து, யாரும் அவர் முன் ஓர் அம்பை எய்ய வில்லைத் தாழ்த்தும் முன், தான் வில்லைத் தாழ்த்திவிட முடியும் என்கிறார். அதாவது, பீஷ்மரைக் கொல்லுமுன், அவர் முன்னால் ஒரு பெண்ணைக் கொண்டுவர வேண்டும். ஆனால் போர்க்களத்தில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் பீஷ்மரைக் கொல்ல முடிவதில்லை. அதனால் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே ஒன்பது நாட்களாக நடந்து வரும் குருக்ஷேத்திரப் போர் தொடர்கிறது. இறுதியில் கிருஷ்ணர் பாண்டவர்களிடம் சிகண்டியைப் போர்க்களத்துக்குள் அர்ஜுனனுடன் தேரில் சென்று, பீஷ்மருடன் போரிடச் சொல்கிறார். சிகண்டி பெண்ணாகப் பிறந்தாலும் ஓர் யக்ஷனின் உதவியால் ஆணாக மாறிவிடுகிறாள். அதனால் சிகண்டி தான் ஓர் ஆண் என நம்புகிறாள். ஆனால் பீஷ்மர் இந்தப் பால் மாற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் ஒரு பெண்ணாகவே அவளைப் பார்க்கிறார். தனக்கு முன்னால் சிகண்டி கிருஷ்ணரின் ரதத்தில் செல்லும்போது, பீஷ்மர் தன் வில்லைத் தாழ்த்தி,

அர்ஜுனன் தன்னை வீழ்த்த வழிவகுத்துவிடுகிறார். விஷ்ணு பால் குழப்பத்தை ஏற்றுக்கொள்கிறார் என்று கதை சொல்கிறது. அப்படி எந்தக் குழப்பத்துக்கும் இடம் கொடுக்காததால், பீஷ்மர் மரணமடைகிறார்.


சரசுவதி இல்லாததால், நாம் மேலெழுந்தவாரியாக உருவத்தை கவனிக்கிறோம். நம்மைவிடக் குள்ளமான வாமனன் ஒரு கடவுள், முடிவற்றவன் என்பதைக் அறியத் தவறிவிடுகிறோம்.

குஜராத் பாடனில் உள்ள படிக்கட்டுக் குளத்தில் வாமனன்.

மகாபாரதத்தின் தமிழ் வடிவம் ஒன்றில், அர்ஜுனனின் மகன் அரவான் என்ற போராளி பற்றி எழுதப்பட்டிருக்கிறது. போரில் வெற்றி பெற வேண்டும் என்றால், உடலில் புனித முத்திரைகள் குத்தியிருக்கும் ஒருவனைப் பாண்டவர்கள் பலி கொடுக்க வேண்டும். பாண்டவர் முகாமில் அப்படிப்பட்டவர்கள் கிருஷ்ணர், அர்ஜுனன் மற்றும் அரவான் என மூவர் இருக்கிறார்கள். கிருஷ்ணரும் அர்ஜுனனும் மிக முக்கியமானவர்கள் என்பதால், அரவான் தான் பலியாக முன் வருகிறான். ஆனால் அவன் ஒரு வேண்டுகோள் வைக்கிறான்: 'நான் திருமணம் செய்துகொள்ள வேண்டும். நான் இறப்பதற்குள் திருமண இன்பத்தை அனுபவிக்க விரும்புகிறேன். நான் மறைந்தால் என்னை நினைத்து உண்மையாக அழ என் விதவையை விட்டுச் செல்ல வேண்டும்.' எனவே பாண்டவர்கள் அரவானுக்கு ஒரு மணமகளைத் தேடிச் செல்கிறார்கள். திருமண இரவுக்கு மறுநாள் இறக்கப்போகும் ஒருவனை யாரும் மணக்க முன்வருவதில்லை. இறுதியில் கிருஷ்ணர் இதைக் கையாள முன்வருகிறார். அவர் மோகினி அவதாரம் எடுத்து, அரவானை மணக்கிறார். அவர்கள் ஓர் இரவைக் கழித்தபின், மறு நாள் காலை அரவானின் தலை வெட்டப்படுகிறது. ஒரு விதவை போல, கிருஷ்ணர் அரவானுக்காக அழுகிறார்.

ஒரிசாவில் புழக்கத்தில் இருக்கும் மகாபாரதத்தில், அர்ஜுனன் ஒன்பது மிருகங்கள் ஒன்றாகச் சேர்ந்த ஒரு மிருகத்தை எதிர்கொள்கிறான். சேவல் தலை. மயில் கழுத்து. எருதின் பின்புறம். சிங்கத்தின் இடை. யானையின் கால்கள். மனித உரு, மான் உரு, புலி உரு. பின்னால் வாலுக்கு ஒரு நாகம். இந்த விசித்திரமான மிருகத்தைப் பார்த்து அர்ஜுனன் மிரண்டு போனாலும், அதைக் கொல்லவில்லை உயர்த்துகிறான். ஆனால் மனிதக் கரத்தில் அது கிருஷ்ணரின் சக்கரத்தை உயர்த்திக் காண்பிக்கிறது. அர்ஜுனன் திகைத்து நின்றுவிடுகிறான். அந்த மிருகத்தை அடையாளம் காண முடியாமையும், அப்படி அது இருப்பதையும் குறித்து சிந்தனை செய்கிறான்.

இது எல்லா விவரணைகளையும் கடந்தது. வழக்கமான வடிவங்களிலிருந்து அது மாறுபட்டிருந்தது. மனிதனின் கற்பனை வள எல்லையைத் தாண்டியது. இது மிருகம் அல்ல. தெய்வாம்சம் உள்ளது. இது கிருஷ்ணர்தான். இது கடவுள்தான். மனித யோசனையால் கண்டுபிடிக்க முடியாதபோது, தெய்வீக சிந்தனை ஒன்றுதான் இதைக் கண்டுபிடிக்க உதவும். எனவே, அர்ஜுனன் வில்லைக் கீழே போட்டுவிட்டு, கடவுளின் விசித்திரமான உருவத்துக்கு வணக்கம் செலுத்துகிறான்.


அசுரர்களின் குரு சுக்ரர், பலி வாமனருக்கு நிலம் கொடுப்பதைத் தடுக்கும்போது, கண்ணை இழக்கிறார்.
நீர் வார்த்து, பலி தான் நிலத்தைக் கொடுக்கவிருப்பதைத் தெரிவிக்கிறான்.

ஹிரண்யாக்ஷன் தன் அதிருப்தியை வெல்ல, தன் சக்தியை உபயோகித்து பலம் மிகுந்தவன் ஆகிறான். ஹிரண்யகசிபு தந்திரக்காரன். அவனைப் பின் தொடரும் அசுரர்கள், விரோசனும் பலியும் தாராளமாக நடந்துகொண்டு மக்களின் அன்பைப் பெற முயலுகிறார்கள். ஹிரண்யாக்ஷனும், ஹிரண்யகசிபுவும் தங்களைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்க, விரோசனும், பலியும் மற்றவர்களைப் பற்றிக் கவலை கொள்கிறார்கள். இது வளர்ச்சியைக் காட்டுகிறது. மற்றவர்களை விலக்கி வைக்கும் ஹிரண்யாக்ஷன் மற்றும் ஹிரண்யகசிபு போல் அல்லாமல், விரோசனும் பலியும் எல்லோரையும் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் அசுரர்களாக இருந்தாலும், புராணங்களில் அவர்களை மதித்து எழுதியிருக்கிறார்கள்.

இருந்தாலும் விரோசன் மற்றும் பலியின் கவனம் 'நான்' என்பவரைவிட 'என்னிடம் இருக்கிறது' என்பவரிடம் மீதே இருக்கிறட்து. உலகில் எல்லா பொருட்களும் கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். மாயையில் சிக்கியிருக்கும் மனிதன் பொருட்களால் மட்டுமே மகிழ்ச்சி அடைந்துவிட முடியும் என்பதை அவர்கள் உணர மறுக்கிறார்கள். பொருள் வளத்தோடு ஆன்ம வளமும் சேரும்போதுதான் திருப்தி என்பது உண்டாகிறது.

விரோசன் பிரஹலாதனின் மகன். எல்லா அசுரர் கதைகளையும் போலவே, விஷ்ணு மோகினியாக வந்து அவனிடமிருந்து ஒரு பரிசு பெறும் வரை அவன் பலம் மிகுந்தவன் ஆக இருக்கிறான். 'எது வேண்டுமோ, கேள்' என்கிறார்ன் விரோசன். மோகினி உடனே அவன் தலையைக் கோருகிறாள்.

தான் கொடுத்த வார்த்தையை மதித்து, விரோசன் தன் கழுத்தை அறுத்துக் கொள்கிறான். தேவர்கள் மகிழ்ந்து போகிறார்கள்.




திருவிக்ரமராக விஷ்ணு-ஓவியம்.

விரோசனின் மகன் பலி முன்பிருந்த எல்லா அசுரர்களையும்விட மிகுந்த பலசாலி ஆகிறான். தன் தந்தையைப் போலவே தாராளமாக இருக்கிறான்.

இதனால் அசுரர்களில் மிகுந்த புகழ் பெற்றவனாகிறான். அவனுடைய காலத்தில் எங்கும் செழிப்பாக இருக்கிறது. அவன் புகழ் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது. ஒரு காலகட்டத்தில் தேவர்களின் புகழைக்கூட மங்கச் செய்துவிடுகிறது. மனித குலம் பலியிடம் மதிப்புக் காண்பிக்க, சச்சியும் இந்த்ரனைவிட்டுவிட்டு, புத்திசாலியும், புனிதனும் ஆன பலியின் அருகே அமரப் போய்விடுகிறாள். பலியின் ராஜ்யத்தில் எல்லாமே ஒழுங்காக இருக்கிறது. எல்லாருடைய தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. நோய் நொடியோ, இறப்போ எதுவும் இல்லை. மக்கள் பாலியைக் கடவுளாகப் பார்த்தார்கள். பலியும்கூட தான் ஒரு கடவுள் என்று நினைக்கத் துவங்குகிறான். யார் எதை எல்லாம் விரும்புகிறார்களோ அதை எல்லாம் அவர்களுக்கு அவனால் கொடுக்க முடிகிறதே!

அப்போதுதான் விஷ்ணு வாமன அவதாரம் எடுத்து, பலியிடம் வருகிறார். 'உனக்கு என்ன வேண்டுமோ, கேள். கேட்பதை எல்லாம் தருகிறேன்' என்கிறான். வாமனன் மூன்றடி மண் வேண்டும் என்கிறான். எதையும் யோசிக்காமல், வாமனன் கேட்டதைத் தருகிறேன் என்கிறான் பலி. ஆனால் பலியின் ஆலோசகர் சுக்ரர் வாமனன் யார் என்று புரிந்துகொண்டுவிடுகிறார். பலியிடம் கொஞ்சம் பொறு என்கிறார். ஆனால் தான் கொடுத்த வாக்கிலிருந்து பின் வாங்க பலி விரும்பவில்லை.

தானம் செய்வதற்காக, பலி தன் கிண்டியிலிருந்து நீரை ஊற்ற வேண்டியிருக்கிறது. அதைத் தடுக்க, சுக்ரர் தன் உடலைக் குறுக்கிக்கொண்டு, கிண்டிக்குள் நுழைந்து அதன் துவாரத்தை அடைத்துக்கொள்கிறார். சுக்ரரின் வேலையைப் புரிந்துகொண்ட விஷ்ணு, நீர் எதுவும் வெளிவராததால் அடைத்துக்கொண்டிருக்கும் துவாரத்தில் வழி செய்யப் பார்க்கிறார். விஷ்ணு ஒரு புல்லை எடுத்து அதைக் கூர்மையாக்கி, அதை துவாரத்துக்குள் செலுத்த, அது சுக்ரரின் ஒரு கண்ணைப் பறித்துவிடுகிறது. கிண்டியிலிருந்து வெளிப்பட்ட சுக்ரர் வலியால் துடித்துக்

கதறியபடி இருக்க, நீர் தடையின்றி வருகிறது. சடங்கு முடிந்து, வாமனனுக்கு மூன்றடி மண் தர முன்வருகிறார்.


ஆன்மிகத்தை மேம்படுத்துபவள்தான் மோக்ஷ-பத்னி. இதன் பொருள், உணர்வுபூர்வமான, புத்திசாலிதனமான வளர்ச்சி. இது மனிதனுக்கு பற்றற்று, தாராளம், நம்பிக்கை மற்றும் பொறுமை ஆகியவற்றை அளிக்கின்றன.
போக-பத்னி பொருளியல் வளர்ச்சியைக் காண்பிக்கிறாள், உலக இன்பத்தை மனிதனுக்கு அளிக்கிறாள்.
வெள்ளை ஆடை அணிந்த சரசுவதி.
சிவந்த ஆடை அணிந்த லக்ஷ்மி, போக-பத்னி.
விஷ்ணு இரு மனைவியரையும் சரிசமமாக வைத்திருக்கிறார். அதனால் அசுரர்கள், தேவர்களைவிட மேலானவர்.
அசுரர்கள், தேவர்கள் அலட்சியம்.
அசுரர்களோடும் தேவர்களோடும் மோதியவர்.

பலியின் கண் முன்னால் வாமனன் விசுவரூபம் எடுத்து, ஒரு காலை ஆகாயம் வரை உயர்த்தி, இன்னொரு காலால் பூமியைத் தொடுகிறார்.

ஆக, பூமி முதல் ஆகாயம் வரை பெற்றுவிடுகிறார். மூன்றாவது அடியை எங்கே வைக்க என்று கேட்கிறார் விஷ்ணு. அவர் கேட்பது மூவுலகிலும் கேட்கிறது. விஷ்ணுவின் விசுவரூபம் கண்ட பலி மகிழ்ந்து போய், தலையைக் காண்பித்து, 'உங்கள் காலடியை என் சிரஸில் வையுங்கள்' என்கிறான். விஷ்ணு அவன் தலையில் காலடியை வைத்து, அவனைத் தரைக்குக் கீழே பாதாள உலகத்துக்கு அனுப்பி வைத்து, அதுதான் அசுரர்களுக்கு ஏற்ற இடம் என்கிறார்.

விஷ்ணுவின் விசுவரூபத்தைக் கண்ட எவரும் விஷ்ணுதான் திருவிக்ரமன், தேவர்களின், மனிதகுலத்தின், அசுரர்களின் உலகங்களை வென்றவன் என்று முடிவு செய்கிறார்கள். அவர் எல்லா உலகங்களிலும் வியாபித்து இருக்கிறார். அவர்தான் கடவுள்.

பலி சிறந்த அரசன். தன் தந்தையைப் போலவே, வாழும் எல்லா உயிரினங்களையும் திருப்தி செய்துவிட்டால் போதும், எல்லாம் ஒழுங்காக அமைந்துவிடும் என்று நம்புகிறான். விஷ்ணு மிகவும் பிரம்மாண்ட வடிவம் எடுத்து, பலி அலட்சியம் செய்த அம்சத்தை அவன் கவனத்துக்குக் கொண்டு வருகிறார். அதாவது மனித குலத்தின் ஆசைகள் கணக்கிலடங்காதவை என்றால், இருக்கும் பொருட்கள் கணக்குக்கு உட்பட்டவை.

பலியால் எல்லா உயிரினங்களின் ஆசைகளையும் திருப்தி செய்துவிட முடியாது. இதை பலி உணரத்தான், வாமனன் விசுவரூபம் எடுக்கிறார்.

வாமனனின் விசுவரூபத்தின் முன், தான் அற்பமானவன் என்று பலி அறிகிறான்.

விஷ்ணு கதைகளில், மக்கள் கேட்பதை எல்லாம் கொடுத்துவிடும் கருத்து ஒரு வித அசௌகரியத்தைத்

தருகிறது. யார் எதை வேண்டுகிறார்களோ அதை எல்லாம் கொடுப்பது என்று இன்னொருவர் முன்வந்தால், அவரை அகந்தையானவராக, தன் தகுதியை கூடுதலாக மதிப்பீடு செய்பவராக நினைப்பார்கள். இப்படி கொடுப்பது அவர்களை பிரசினைகளில் கொண்டு சேர்த்துவிடுகிறது.

ராமாயணத்தில், தசரதர் தன் மனைவி கைகேயிக்கு அவள் என்னவெல்லாம் கேட்கிறாளோ அதை எல்லாம், ஒரு முறை அல்ல, இரண்டு முறைகள், அளிப்பதாகச் சொல்கிறார். ஆக, கைகேயி பட்டத்துக்குரிய ராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும் என்றும், தன் மகன் பரதன் அரசனாக வேண்டும் என்றும் கேட்கிறாள். ஆகவே, அரசர் அளித்த வரம் நாட்டின் அமைதியையே குலைத்துவிடுகிறது.




வராஹ, நரசிம்ம மற்றும் வாமன மைசூர் ஓவியங்கள்

மகாபாரதத்தில், சந்தனு தன் மனைவி கங்காவுக்கு அவள்

கேட்கிற எல்லாவற்றையும் வழங்கும் வரம் கொடுத்துவிட, அவள் தான் என்ன செய்தாலும் கேள்வி கேட்கக்கூடாது என்கிறாள். அவள் தனக்குப் பிறக்கும் குழந்தைகளை உடனே நீரில் மூழ்கடிப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைகிறான். அதனால், இப்படிப்பட்ட வரங்கள், கடவுளைத் தவிர மற்றவர்களுக்கு எல்லாம் மாயையாகவே இருக்கின்றன. கடவுள் யார், எது கேட்டாலும் கொடுப்பவர்.

ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் எல்லைகள் இருக்கின்றன. தேவர்கள் அவர்களுடைய சொர்க்கத்தில் வசிக்கிறார்கள். மனிதர்கள் பூமியில் வாழ்கிறார்கள்.

அசுரர்கள் பூமியின் அடியில் இருக்கிறார்கள். தங்கள் முழுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அசுரர்கள் தங்களுக்குச் சேர்ந்த இடத்தையும் கடந்து வெற்றிகொள்ளப் பார்க்கிறார்கள். அவர்கள் உயர்ந்து பிற உலகங்களை ஆக்ரமித்துக்கொள்கிறார்கள். வாமனர்-பலி கதையில் வருவது போல, விஷ்ணு வந்து அவர்களை உண்மையை உணரவைக்கிறார்.

ஆனால் ஒவ்வோர் ஆண்டும், பலி பூமியிலிருந்து எழ அனுமதிக்கப்படுகிறார். அவர் அப்படி எழுவது வடக்கே தீபாவளியாகவும், கேரளத்தில் ஓணமாகவும் கொண்டாடப்படுகிறது. அது செழுமையைக் கொண்டாடும் நாள். வயல் வெளிகளில் அறுவடை செய்ய, எல்லா அசுரர்களையும் போல, பலியைக் கொன்றாக வேண்டும். பூமிக்குக் கீழே அவனைத் தள்ளினால்தான் அவன் சஞ்சீவனி வித்யாவால் ஊட்டம் பெற்று, அடுத்த அறுவடை பிரமாதமாக அமைய, மறு வருடம் வருவான்.

அசுரர்களும் தேவர்களும் ஒருவரைப் போலத்தான் மற்றவரும். இருவருமே கஷ்யபரின் குழந்தைகள். பிரம்மாவின் பேரர்கள். எனவே அவர்களுடைய நிரந்தர நிலைமை அவர்களுக்குத் தெரியும். தங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் லக்ஷ்மியை அடைய விரும்புகிறார்கள்.


ஆல மரத்தைப் புருஷத்துடன் இணைத்துப் பார்க்கிறார்கள். காரணம், அதன் நீண்ட ஆயுள்.
பிரளய வெள்ளத்தில் ஆலிலை மிதக்கிறது.
மார்க்கண்டேயர் பயப்பட்ட மாதிரி அல்லாமல், குழந்தை எந்த பயமும் இன்றி இருக்கிறது.
மார்க்கண்டேய ரிஷி, குழந்தையால் உள்ளிழுக்கப் பட்டபின் அவர் முழு உலகையும் காண்கிறார்.

ஆலிலையில் குழந்தையாக கிருஷ்ணன்-மைசூர் ஓவியம்

அவர்கள் சரஸ்வதியை அலட்சியம் செய்யவே, லக்ஷ்மியையும் இழந்து, சந்தோஷத்தையும் இழக்கிறார்கள். ஆனால், அசுரர்களும் தேவர்களும் ஒருவரைப் போல் மற்றவர்கள் இருக்க மாட்டார்கள். அசுரர்கள் வளர்ச்சியை எதிர்பார்ப்பவர்கள். தேவர்களுக்குத் தங்களிடம் இருப்பது போதும் என்ற நினைப்பு இருந்தாலும், அது எங்கே பறிபோய்விடுமோ என்று ஒருவித பாதுகாப்பின்மையில் தவிப்பார்கள். அவர்கள் அதிகமாக எதுவும் ஆசைப்பட மாட்டார்கள். சொர்க்கத்தைத் தாண்டி எதற்கும் ஆசைப்பட மாட்டார்கள். இந்த்ரன் முவுலகையும் அரசாள முயலுவதில்லை. ஆனால் அசுரர்கள் மூவுலகத்தையும் ஆள விரும்புகிறார்கள். அவர்களுக்கு எப்போதும் திருப்தி என்பது கிடையாது. அவர்களை பூமிக்கு அடியில் தள்ளியிருப்பதில் விருப்பமில்லை. அவர்களுக்கும் பூமிக்கும் வானத்துக்கும் எசமானர்களாக இருக்கத்தான் விருப்பம்.

தேவர்களும் அசுரர்களும் மனிதகுலத்தின் இருவகை அம்சங்களைப் பிரதிபலிக்கிறார்கள். அதாவது நம் உறுதியையும், வளர்ச்சியையும். முன்னது நமது பாதுகாப்பின்மையையோ சாதித்துவிட்ட நிலையையோ குறிக்கிறது. பின்னது நமது ஏமாற்றத்தையும் அமைதியின்மையையும் குறிக்கிறது.

நாம் பெரும்பாலும் லக்ஷ்மியைத்தான் நேசிக்கிறோம். சில வேளைகளில், லக்ஷ்மி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே சரசுவதியை நாம் அலட்சியம் செய்து அவதிப்படுகிறோம். நாம் இந்த உணர்ச்சிகளை அனுபவிக்கிறோம் என்பது ஆன்மிக உண்மையை, அதாவது விஷ்ணுவை, உணரவில்லை என்பதன் அறிகுறிதான்.

ஹிரண்யாக்ஷனை தம் பலத்தால் தோற்கடித்த விஷ்ணு, ஹிரண்யகசிபுவை புத்திசாலித்தனத்தால் தோற்கடிக்கிறார். வாமனரைப் பொறுத்தவரை, விஷ்ணுதான் பலிக்கு அடக்கத்தை போதித்து அவனை மாற்றி, உயிர்வாழ்வதன் அர்த்தம் மூவுலகையும் வெற்றிகொள்வதல்ல, பிரம்மத்தின் எல்லையற்ற ஆற்றலை உணர்வதுதான் என்று

காட்டுகிறார். இந்த ஆசை பொருள் சார்ந்த வளர்ச்சி மட்டும் அல்ல; உணர்வுபூர்வமான, அறிவார்ந்த வளர்ச்சி. அதுதான் ஆன்மாவின் மேன்மையையும், அடக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.




விராட சொரூபம்-தஞ்சாவூர் ஓவியம்.

இந்த்ரனுக்கு சாதகமாக ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு மற்றும் பலி ஆகியோர் மீது விஷ்ணு எடுத்த

நடவடிக்கைகளைப் பார்த்தால், கடவுள்கூட பாரபட்சம் காண்பிக்கிறார் என்று தோன்றும். அதனால் அதிரடியாக அசுரர்கள் எல்லோரும் கெட்டவர்கள், தேவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. ஆனால் இது வெகு எளிமையான விளக்கம். தேவர்கள் பாதுகாப்பின்மையை உணர்பவர்கள் என்பதோடு, சாதித்து விட்ட மன நிலையில் உள்ளவர்கள். அதனால் எல்லாவற்றிலும் மிகையாக நடந்துகொள்வார்கள். அதனால் அவர்களை சரியான முன்னுதாரணமாகக் கொள்ள முடியாது. மாறாக, விரோசன் மற்றும் பலி போன்ற அசுரர்கள் தாராளமானவர்கள். தங்களுக்குத் தீங்கு இழைக்கப்பட்டவர்களாகத்தான் தெரிவார்கள்; வில்லன்களாக அல்ல. பிரஹலாதன் அசுரனாக இருந்த போதும், விஷ்ணுவின் மிகப் பெரிய பக்தன்.

கெட்ட கடவுள்கள் மற்றும் நல்ல அசுரர்கள் என்ற கருத்து மிகக் குழப்பமாக இருக்கும். ஆனால் கடவுள்கள் அல்லது அசுரர்கள் என்ற பிரிவு நியாயமான, நேர்மையான அடிப்படையில் எழுந்த கருத்தில் இருந்து உருவானது. இதற்கு, ஹிந்து புராணங்களை 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் மோசமாக மொழிபெயர்த்ததே காரணம். அதில் தேவர்கள் நல்லவர்கள் என்றும், அசுரர்கள் கெட்டவர்கள் என்றும் எழுதியிருந்தார்கள்.

புராணங்களின்படி, தேவர்களும் அசுரர்களும் இரண்டு வகை மனிதர்கள்-ஒரு வகையினர் வானுலகிலும், இன்னொரு வகையினர் பூமிக்குக் கீழேயும் வாழ்பவர்கள். சமூக ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக விஷ்ணுவின் செயல் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு தடவையும் அசுரர்கள் எல்லையைத் தாண்டும்போது அவர்கள் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே அவர்களைத் தள்ளிக்கொண்டே இருக்கிறார். அசுரர்களைக் கொன்றதால், லக்ஷ்மியை தேவர்களுக்காக உருவாக்குகிறார். ஆனால் தேவர்கள் லக்ஷ்மியை அனுபவிக்கலாமே தவிர, அவர்களால் லக்ஷ்மியை உருவாக்க முடிவதில்லை.

அதற்கு அவர்களுக்கு எப்போதும் அசுரர்கள் தேவைப்படுகிறார்கள். அதனால், ஹிந்து உலகில் அசுரர்கள்

ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறார்கள்.

தீயது என்ற வார்த்தை அடிக்கடி அசுரர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தத் தீயது என்ற சொல்லுக்கு ஹிந்துத்துவத்தில் இடம் இல்லை. தீயது என்றால், கடவுளின் அம்சம் இல்லாதது என்று பொருள். இந்தக் கருத்து ஹிந்துத்துவத்தில் இல்லை. ஏனென்றால், ஹிந்துக்களுக்கு இந்த உலகம் முழுதுமே தெய்வீகத்தன்மை வாய்ந்தது. அதனால் எனவே தீயது என ஒன்றுமே இல்லை. உலகே தெய்வீகமானத்து என்ற இந்தக் கருத்து விஷ்ணுவின் பல கதைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.




சனத் குமாரர்கள் என்ற நான்கு முனிவர்கள்-ஓவியம்.

ஒரு முறை யசோதா தன் மகன் மண்ணைத்

தின்னும்போது, அவனை வாயைத் திறந்து காண்பிக்கச் சொல்லும்போது, அவன் வாய்க்குள் ஈரேழு உலகமும், நட்சத்திரங்களும், கிரஹறங்களும் இருப்பதைப் பார்த்து வியப்படைகிறாள். இந்த மகன் கிருஷ்ணர்; விஷ்ணுவின் அவதாரம்.

ஒரு முறை மார்க்கண்டேய மகரிஷி உலகம் அழியப்போவதாக ஒரு காட்சியைக் காண்கிறார். கடல் பொங்கியெழுந்து உலகை விழுங்கிவிடுகிறது.

எல்லாமே அழிந்துபோய்விடுகிறது. தாவரங்கள், மிருகங்கள், மலைகள் என்று சிந்தனைக்கு எட்டிய எல்லா உயிரினங்களும் அழிகின்றன. வாழ்க்கையின் எந்தவித அடையாளங்களும் இல்லை. மார்கண்டேயர் உலகத்துக்காகக் கண்ணீர்விடுகிறார், ஓர் ஆலிலை தண்ணீரில் மிதந்து வருகிறதைப் பார்க்கிற வரை. அந்த ஆலிலையில் ஒரு குழந்தை இருக்கிறது: அவர்தான் விஷ்ணு. குழந்தை மூச்சை இழுக்கிற போது, ரிஷியின் உடல் விஷ்ணுவின் உடலுக்குள் இழுத்துக்கொள்ளப்பட்டுவிடுகிறது. அந்த உடம்புக்குள் அவர் ஓர் அற்புதக் காட்சி காண்கிறார். எல்லா கடல்களும், கண்டங்களும் நட்சத்திரங்களும் கிரஹறங்களும் இருக்கின்றன! அவர் எல்லா ஜீவராசிகளையும் பார்க்கிறார்- நடப்பவை, ஊர்பவை, பறப்பவை எல்லாவற்றையும்.

விஷ்ணுவுக்குள் அவர் தாவரங்கள், மிருகங்கள், உயிரினங்கள்-மனிதர்கள் தேவர்கள் எல்லோரையும். பின்னர் அவர் விஷ்ணுவின் உடம்பிலிருந்து வெளியே தள்ளப்படுகிறார். எல்லாமே கடவுளுக்குள் வாசம் செய்கின்றன என்பதை உணர்கிறார்.

குருக்ஷேத்திர யுத்த பூமியில், கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை உபதேசிக்கிறார். தன் நண்பர் கிருஷ்ணர் சாதாரண மனிதரல்ல என்பதை அர்ஜுனன் உணர்கிறான்.




விஷ்ணுவின் சொர்க்கமான வைகுந்தத்தில் வாயிற்காப்போன்களாக ஜெயனும், விஜயனும்.

உங்கள் சுயரூபத்தைக் காட்டுங்கள் என்று கிருஷ்ணரை வேண்டுகிறான். எனவே கிருஷ்ணர் விசுவரூபம் எடுத்துக்

காட்டுகிறார். நட்சத்திரங்களை எல்லாம் தாண்டி அவர் தலை எட்ட, அவர் பாதங்கள் தரைக்குக் கீழே தொடுகின்றன. அவர் எண்ணற்ற கைகளையும், தலைகளையும், கால்களையும் வெளிப்படுத்துகிறார். சூரியனும், சந்திரனும் அவர் இரு கண்கள். அவர் உலகை உள்ளிழுத்து, நெருப்பை வெளியே விடுகிறார். கிரஹங்களைத் தன் பற்களின் இடையே வைத்திருக்கிறார். அவருக்குள் காலம் இருக்கிறது-கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் மூன்றுமே. அவருக்குள் தெரிந்த, தெரியாத நாலா பக்கங்களின் இடமும் இருக்கிறது. எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பவர் அவர்.

அசுரர்களிடமும் எல்லாம் அடங்கியிருக்கின்றன. எல்லாவற்றிலும் தெய்வீகத்தன்மையின் சுடர் இருக்கிறது; புராணிகர்கள் சொல்லும் பூதங்களின், வில்லன்களின் கதைகளில் எல்லாம் இது இருக்கிறது.

காரணமோ விளக்கமோ இல்லாத செய்கையைத் தீயது குறிப்பிடுகிறது. அந்தச் செய்கையை நியாயப்படுத்த முடியாது. ஆனால் ஹிந்துத்வத்தில் எல்லா செய்கைகளுக்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஹிந்து உலகமே கர்மா என்ற கருத்தை அடிப்படையாக வைத்து ஆளப்படுகிறது. எந்த நிகழ்வுமே அந்த க்ஷணத்தில் ஏற்படுவதில்லை. எல்லாமே பழைய செயல்களின் விளைவுகள். இந்தப் பிறவியில், அல்லது முந்தைய பிறவிகளில் செய்தவை.

'ஒரு வாழ்க்கைதான்' என்ற தத்துவத்தை நம்பும் கலாசாரங்களிலும் மதங்களிலும் தீயது என்பது கட்டாயமாக இருக்கும். ஹிந்துத்வத்தில் மறு பிறவி இருப்பதாக நம்பப்படுகிறது. முந்தைய பிறவிகளின் செயல்கள் எல்லாவற்றையும் அது விளக்குகிறது. ஆக, ஹிந்து உலகில், தீயது என்ற சொல்லுக்கு இடமில்லை. ஜெய-விஜயர்களின் கதையில் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஹிரண்யாக்ஷன் மற்றும் ஹிரண்யகசிபுவின் கடந்த கால வாழ்க்கைக்குத் திரும்பச் சென்று, அவர்கள் ஜெய-விஜயர்களாக வைகுந்தத்தில் விஷ்ணுவுக்கு வாயில்

காப்போராக இருந்ததை நினைவுகூர வேண்டியிருக்கிறது.

சனத் குமாரர்கள் வைகுந்தத்தில் நுழைய முற்படும் போது, விஷ்ணு உறங்கிக்கொண்டிருக்கிறார் என்று அவர்களை ஜெய-விஜயர் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். கோபம் கொண்ட நான்கு ரிஷிகளும், 'நீங்கள் விஷ்ணுவிடமிருந்து வெகு தூரம் தள்ளி அசுரர்களாகப் பிறக்கக் கடவது' என்று அவர்களை சபிக்கிறார்கள். சாபம் உடனே பலித்து, இரண்டு வாயிற்காப்போரும் திதியின் வயிற்றிலிருந்து அசுரர்களாகத் தோன்றுகிறார்கள்.

ஜெய மற்றும் விஜயன், இப்போது ஹிரண்யாக்ஷன் மற்றும் ஹிரண்யகசிபு இருவருமே வைகுந்தத்துக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்று செய்யும் சில செயல்கள், விஷ்ணு கீழிறங்கி வந்து அவர்களுக்கு விமோசனம் அளிக்க வைக்கின்றன. ஹிரண்யாக்ஷன் தன் பலத்தை எல்லாம் உபயோகித்து பூமியைக் கடலுக்குக் கீழே கொண்டு போகிறான். ஹிரண்யகசிபு தந்திரத்தைப் பயன்படுத்தி, தன் மகன் பிரஹலாதனைக் கொடுமைப்படுத்துகிறான்.

இரண்டு சகோதரர்களின் கொடுமைகளும் விபாபத பக்தி அல்லது பக்தியின் மாறுபட்ட திருப்பம் என்று சொல்லப்படுகிறது. கடவுளை வெறுப்பதன் மூலம், ஒருவன் கடவுளைத் தொடர்ந்து நினைத்துப் பார்க்கிறான். அதன் மூலம் கடவுளின் அன்பைப் பெறுகிறான்.

பூதேவியின் குரலும், பிரஹலாதனின் குரலும் வைகுந்தத்தை எட்டி, விஷ்ணுவைக் கலங்க வைக்கின்றன. அவர் கீழிறங்கி வந்து இந்த இருவர் தவிர, தம் முன்னாள் வாயிற்காப்போரையும் காப்பாற்றுகிறார். அவர்கள் செய்த கடமைக்கு, வாயிற்காப்போர் தண்டிக்கப்பட்டுவிட்டதாக விஷ்ணு நினைக்கிறார். அசுரர் வம்சத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது தம் கடமை என்று உணர்கிறார். எனவே வராஹராகவும், நரசிம்மராகவும் தன்னை மாற்றிக் கொண்டு சகோதரர்கள் இருவரையும் மாய்க்கிறார். தங்கள் அசுர உருவைத் துறந்து, அவர்கள் வைகுந்தத்துக்கு வாயிற்காப்பவர்களாகச் செல்கிறார்கள்.

இந்தக் கதையைச் சொல்லும்போது, வராஹரும், நரசிம்மரும் செய்த கொடூரம், தெய்வீக அன்பைக்

காண்பிக்கும் தெய்வீக தண்டனையாக மாறிவிடுகின்றன. எந்த அசுரர்களும் கொடுமைக்காரர்களாகப் பார்க்கப்படுவதில்லை. அவர்களின் கொடுமைக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. அவர்களின் செய்கைகள் மன்னிக்கப்படா விட்டாலும், அவர்களைச் சற்றே குறைந்த கொடுமையாளர்களாக, அவர்கள் செய்கைகளைப் புரிந்து கொண்டவர்களாக ஒருவர் முடிவுக்கு வரச் செய்கிறது.

ஜெயன்-விஜயன் என்ற பெயர்கள் வெற்றியைக் குறிக்கின்றன. ஆனால் ஜெய என்றால் ஆன்மிக வெற்றி. விஜய என்றால் லோகாயத வெற்றி.

பொருள் சார்ந்த வெற்றி. விஜய என்பது வழக்கமான வெற்றி. ஒருவர் மீது இன்னொருவர் தாக்கி வெல்வது; இன்னொருவரின் மனதை வெல்வது; அல்லது வெல்பவர்களும் தோற்பவர்களும் உள்ள போட்டியில் கிடைக்கும் வெற்றி. ஜெயன், மாறாக, தன்னையே வென்றவனாக, தன் மனத்தையே வென்றவனாக, தோல்வி என்பது இல்லாத வெற்றியடைந்தவனாக இருக்கிறான்.

வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலும், நாம் நினைப்பது போல் நடக்காமல் வேறு மாதிரி நடந்துவிடுகின்றன. முன்னதில், நம் விருப்பப்படி நடக்கும் போது நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அதுதான் விஜயம்; வெற்றி. பொருள் சார்ந்த வெற்றி. அடுத்தவரின் இழப்பில் நாம் நினைத்தது கிடைத்துவிடுகிறது. பின்னதில், நம் விருப்பப்படி நடக்காவிட்டால், நாம் வருத்தம் அடைகிறோம். ஆனால் மகிழ்ச்சி அடையாத நிலையில் நாம் பொருள் சார்ந்த விஷயங்களை நினைத்துப் பார்க்கிறோம். நம்முடைய உணர்ச்சிகளைக் கேள்விக்கு உள்ளாக்குகிறோம். அப்படி நினைப்பதும், கேள்வி கேட்பதும் இந்த உலகின் புதிர்களை நமக்குக் காண்பிக்கின்றன. நாம் உண்மையான உலக இயற்கையைப் புரிந்துகொள்கிறோம். அதுதான் ஜெய என்ற நிலை. ஆன்மிக வெற்றி. ஏனென்றால் நாம் சாசுவதமான உண்மையைத் தெரிந்துகொள்கிறோம்.

ஜெய-வைப் பொறுத்தவரை, சரசுவதி நம் பாதையை நோக்கி வருவாள். விஜய-வைப் பொறுத்தவரை லக்ஷ்மி நம் திசை நோக்கி வருவாள். ஆனால் வாழ்க்கையின்

முக்கியத்துவம் இரண்டு நிலைகளையும் ஒன்றாக அனுபவிப்பதுதான். ஒரே சமயத்தில் லக்ஷ்மியும் சரசுவதியும் வர வேண்டும்.

ஒருவரை அடுத்து மற்றவர் அல்ல. எப்போது ஜெயனும் விஜயனும் சேர்ந்து வருகிறார்களோ, அப்போதுதான் வைகுந்தத்தின் வாயில்கள் நமக்கு நம் வாழ்க்கையில் திறக்கின்றன.

# 5

# ராமரின் ரகசியம்

## மிருக உருவையும் தாண்டி தெய்வீகத்தைக் காணல்




கிருஷ்ணரின் க்ரீடம்.
வாமனன் குடை.
வராஹத்தின் முகம்.
நரசிம்மரின் முகம்.
பலராமரின் கலப்பை.
கல்கியின் வாள்.
பரசுராமரின் வெட்டரிவாள்.
ராமரின் வில்.
கூர்மம் (ஆமை) பின்புறம்.
மீனின் வால்.

விஷ்ணுவின் மிருக-மனித வடிவங்களைக் காட்டும் சமீபகால ஓவியம்.

விஷ்ணுவின் கதைகளை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று காலவரையறையற்ற நிலையில் நடப்பது. இன்னொன்று, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் நடப்பது. முதல் பகுதி தேவர்கள்-அசுரர்கள் பற்றியது. இரண்டாவது பகுதி மனிதர்கள் மற்றும் அரக்கர்கள் பற்றியது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையேயான போர், செல்வம் சேமிப்பது, உணர்வுபூர்வமான பாதுகாப்பளிப்பது, மற்றும் அறிவு வளர்ச்சி சம்பந்தப்பட்ட காலவரையறை அற்ற செயல்கள் பற்றியது. மனித குலத்துக்கும் அரக்கர்களுக்கும் இடையேயான போராட்டம், சமூகத்தில் சரியாக நடந்துகொள்வது, அதற்கான வழி முறைகள், சரித்திரம் மற்றும் பூகோள நியதிப்படி நடப்பது குறித்தது.

தேவர்கள் வானத்துக்கு மேலேயும், அசுரர்கள் பூமிக்குக் கீழேயும் வாழ்கிறார்கள். அவர்கள் போர் சரியாக இரண்டாகப் பிரிந்து, வானுலகதுக்கும் பூமிக்கும் நடக்கிறது. மனிதகுலமும் அசுரர்களும் பூமியில் வசிக்கிறார்கள். அவர்கள் போர் கலாசாரத்துக்கும் இயற்கைக்கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையே நடக்கிறது.

நீதி, நேர்மை மற்றும் நல்லவை போன்ற வார்த்தைகள் போதுமான அளவுக்கு தர்மம் என்ற சொல்லை விளக்குவதில்லை. ஏனென்றால் நல்லதும் கெட்டதும் காலத்துக்குத் தகுந்த மாதிரி, உலகின் ஒவ்வொரு பகுதிக்கு ஏற்ப மாறுபடுகிறது. மனிதன் தன் தெய்வீக சக்தியை சமூக நடத்தை மூலம் அறிய, தர்மம் என்ற அடிப்படைக் கொள்கைதான் உதவுகிறது.

தர்மம், அதர்மம் போன்ற சொற்களின் அர்த்தத்தை அறிய, நாம் மனிதகுலத்துக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள பெரிய பிளவை உணர்ந்தாக வேண்டும். நல்லதற்கோ, கெட்டதற்கோ, மனிதகுலத்துக்கு மட்டுமே காட்டு தர்பாரைத் தூக்கி எறிய முடிகிறது. நமக்கும், பிறருக்கும் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் காட்டு தர்பாரை எதிர்ப்பது நல்லதற்குத்தான். இதுதான் தர்மம். நாம் பிறரை ஏமாற்றி,

நம்முடைய பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் பிறரை மோசம் செய்வதை ஆதரித்தால் அது அதர்மம்.

எல்லா உயிரினங்களையும் பாதுகாப்பதற்கும், பாதுகாக்க முயல்வதற்கும் தர்மம் சட்டங்கள் வடிவில் இருக்கின்றன. இதற்கு என்ன பொருள் என்றால், வசதியற்றவர்களுக்கு உதவுவது; அதாவது பலம் பொருந்தியவர்கள் பலகீனமானவர்கள் மீது அக்கறை காண்பிப்பது. அதர்மம் என்பது இதற்கு நேரிடையானது. காட்டு தர்பாரை சில குறிப்பிட்டவர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது அதர்மம். நிலமாகவும், பதுக்கிவைத்தும், கவர்ந்துகொண்டும் செய்யும் ஆக்ரமிப்பும், பலத்தை பிரயோகிப்பதும் அதர்மம். தர்மம் என்பது இந்த ஆசைகளை எல்லாம் மீறி வளர்வது.


கடவுளான ராமர் மட்டுமே மன்னராக வழிபடப்படுகிறார்.
சீதை கலாசாரத்தின், குடும்பப் பாங்கின் வடிவம்.
லக்ஷ்மணர் இயற்கையின் தேவையை வெளிப்படுத்தும் மனிதர்.
இயற்கையை வசப்படுத்திய ராமர்.
சரிசமமாக பாவிப்பதை உணர்த்த வில்லைப் பிடித்திருக்கும் ராமர்.
இயற்கையைச் சார்ந்தது கலாசாரம் என ராமருக்குத் தெரியும். ஆனால் கலாசாரம் இயற்கையைச் சார்ந்து இல்லை.
மிருக சுபாவத்தைப் பிரதிபலிக்கும் ஹனுமான், தெய்வீக நிலைக்கு உயர்கிறார்.

ராமர்-சிற்றோவியம்

தர்மத்தை உயர்த்திப் பிடிக்கும் மனிதகுலத்தினர் மனுவின் வழி வந்தவர்கள். மனுதான் மீன்களின் சட்டத்தைத் தகர்த்தெறிந்தவர். அதர்மத்தை ஆதரிக்கும் மனிதர்கள் அரக்கர்கள். பிரம்மாவின் பேரக் குழந்தைகள்தாம் மனுவின் மனிதகுலத்தினரும் அரக்கர்களும். அவர்களுக்கு இரண்டு வகை மனங்கள் இருக்கின்றன. இந்தப் போராட்டத்தை ராமாயண காப்பியத்தில் பார்க்கலாம்.

விஷ்ணுவின் அவதாரமான ராமர் என்ற மன்னனின் க தை யை ராமாயணம் சொல்கிறது. நாகரிகத்தின் கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்து, எத்தனையோ தூண்டுதல்கள் இருந்தும் மிருக உணர்வுகளுக்கு இடம் கொடாதவரின் கதை. ராமாயணத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்றால், முதலில் ப்ரிது, அவர் தந்தை வேனா பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.

பாகவத புராணத்தில் வேனா என்ற அரசன் பூமியைக் கொள்ளையடிக்க, பூமி வெறுத்துப் போய் ஒரு பசுவின் வடிவத்தில் ஓடிப்போய்விடுகிறது.

எனவே இது இயற்கையாகவே குழப்பத்தில் முடிகிறது. தாவரங்கள் பழங்களை உருவாக்க மறுக்கவே, விதைகள் இல்லாமல் அவை முளைக்க மறுக்கின்றன. எங்கு பார்த்தாலும் பசி, பட்டினி. மிருகங்கள் கதறின. மனிதகுலம் அழுதது. இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று முனிவர்கள் நினைத்தார்கள். ஒரு புல்லின் இதழை எடுத்தார்கள், மாய மந்திரங்களை ஜெபித்தார்கள். அந்தப் புல்லை சக்தி மிக்க ஆயுதமாக மாற்றி, பேராசை பிடித்த அரசனைக் கொல்ல நினைத்தார்கள். வேனாவின் உடலைக் கடைந்து, கொடுமையானவற்றையும், அடங்காதவற்றையும் வெளியே எடுத்தார்கள். நல்லவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு, ஒரு புதிய அரசனைத் தோற்றுவித்தார்கள். அந்த அரசன் பெயர் ப்ரிது. விஷ்ணுவின் ஒரு வடிவம்.







ப்ரிது பூமிப் பசுவை விரட்டிப் பிடித்துப் பால் கறக்கும் குறுஞ்சித்திரம்

ப்ரிது பூமிப் பசுவிடம் சென்று தன் மக்களுக்குப் பால் தருமாறு கேட்டார். பசு மறுத்துவிட்டது. பசுவின் கோபம் தீரவில்லை. எனவே ப்ரிது வில்லை எடுத்து உயர்த்தி அம்பு எய்து கொல்ல முயன்றான். 'என்னைக் கொன்றால், இயற்கை முழுதும் அழிந்துவிடும்; உயிரினங்களும்தாம்' என்றது பூமிப் பசு. பூமியை அடக்காமல், தன்னால் மனிதகுலத்துக்கு உணவளிக்க முடியாது என்று ப்ரிது விவாதித்தான். பூமியை அடக்குவது தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. காடுகளை வயல்களாக மாற்ற வேண்டியிருந்தது. நதிகளிலிருந்து வாய்க்கால்களாக நீரைச் செலுத்தினார். 'அப்படியானால் பார்த்துச் செய்' என்றது பூமிப்பசு. எனவே ப்ரிது தர்மத்தை நிலை நாட்ட சட்டங்களை வகுத்து, இயற்கையை அழிக்காமல் கலாசாரத்தை வாழ வைத்தான்.

இது ஒன்றும் சுலபமல்ல என்பது நினைவு இருக்க வேண்டும். வளர்ச்சி இருந்தால்தான் மனிதகுலம் இருக்கும். மிருகங்களுக்கு அப்படி வளர்ச்சி குறித்து எந்த அக்கறையும் இல்லை. இயற்கையை அடக்கி ஆண்டால்தான் மனித குலம் வளர்ச்சி அடைய முடியும். காடுகளை அழித்து, இயற்கைச் சூழலை அழித்துத்தான் மனிதகுல நாகரிகம் வளர்ச்சி காண வேண்டியிருக்கிறது. ஆனால் இதைக் கட்டுப்படுத்தாவிட்டால், பொருளாசை மிகுந்த வளர்ச்சி உலகையே அழித்துவிடும். அதைச் செய்ய, புத்திசாலித்தன வளர்ச்சியையும், உணர்வு ரீதியான வளர்ச்சியையும் சரியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இவை இரண்டும்தான் ஆன்மிக வளர்ச்சிக்குத் துணையாக இருப்பவை.

மிருகங்களின் தேவை, மனித குலத்தின் தேவை ஆகியவற்றைப் பொறுத்தவரை, தர்மம் இயற்கையையும் கலாசாரத்தையும் சரிசமமாகப் பார்க்கிறது தர்மத்தின் அடையாளமாக வில் இருக்கிறது. அதைக் கடவுள் ப்ரிதுவுக்குக் கொடுத்திருக்கிறார். வில்லின் நாணை லேசாகவும் விட முடியாது; இறுக்கமாகவும் விட முடியாது. ப்ரிது உலகின் பொறுப்பு மிக்க அரசனாக வர்ணிக்கப்படுகிறான். அதனால்தான் பூமிக்கு ப்ரித்வி என்ற பெயர் உண்டாயிற்று.

மனித சமூகம் குடியிருப்புகளை உருவாக்கவே, காடுகள் வயல்களாகவும், மிருகங்கள் வீட்டுக்கு அடங்கியதாகவும் மாறின. இது மனிதனுக்குக் கூடுதல் ஆதாரத்தை-உணவாகவும், நேரமாகவும் அளிக்கிறது. இதனால் பொருளாசையிலிருந்து மனிதனை கலை, தத்துவம் போன்ற பிற அம்சங்களுக்குத் திருப்பிவிடுகிறது. பூமியை அதிகமாக அழித்துவிடாமல் இருக்க, சட்டங்களும் விதிகளும் இருக்கின்றன. இவை வர்ண-ஆசிரம-தர்மம் என்று அறியப்படுகின்றன.




சபையில் ராமர்-கேரள ஓவியம்.

வர்ண தர்மம் என்றால், தம் வாழ்க்கை நிலைக்குத் தகுந்த மாதிரி மனிதர்கள் நடந்து கொள்வது. ஆசிரம தர்மம் என்பது எல்லா மனிதர்களும் அவரவர் வாழ்க்கையின் பிரம்மசரியம், கிரஹஸ்தாசிரம், வானப்பிரஸ்தம் போன்ற ஒவ்வொரு நிலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் சொல்கிறது. எனவே, தர்மத்தில் மனித குலம் அதன் கடமையைப் பொறுத்து அமைகிறதே தவிர, விருப்பத்தைப் பொறுத்து அல்ல. விதிமுறைகள் மட்டுமே முடிவானதாகிவிடாது. அவை எச்சரிக்கை அறிகுறிகள். அப்போதுதான் பேராசை தலை தூக்காது.

சமூகத்தில் நான்கு பிரிவுகள் இருக்கின்றன. பிராமணர், ஆன்மிகச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பவர்கள். க்ஷத்திரியர்கள் நிர்வாகம் செய்பவர்கள். வைசியர்கள் செல்வத்தைச் சேமிப்பதற்காகச் செயல்படுபவர்கள். சூத்ரர்கள் உடல் உழைப்பைத் தருபவர்கள்.

வர்ணம் என்பது விருப்பம்தான். ஜாதி என்பது தொழில். ஒரு லட்சிய உலகில் வர்ணம் என்பது ஜாதியைக் குறிக்கிறது. ஆனால் இது வெகு அபூர்வம். அப்படியானால், வர்ணம் என்பது ஜாதியை மறைத்துவிடுகிறபோது, விருப்பத்தைவிட, செய்யும் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகையில், பிரசினைகள் எழுகின்றன.

நான்கு நிலைகள் வாழ்க்கையில் இருக்கின்றன. அதாவது, நான்கு ஆசிரமங்கள். பிரம்மசரியம் என்பது மாணவப் பருவம். கிருஹஸ்தா என்பது குடும்பத்தலைவன் நிலை. வானப்பிரஸ்தா என்பது ஓய்வு கால நிலை. சன்யாச என்பது எல்லாவற்றையும் துறந்த நிலை. இரண்டு தலைமுறைகளுக்கு மேல், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் பூமியின் ஆதாரங்களைப் பயன்படுத்தாமல் ஆசிரமம் காக்கிறது. பேரன் பிறக்கும்போது, சன்யாச நிலை வந்துவிடுகிறது. சாதாரண குடும்பத்தலைவரைவிடக் குறைவாகவே உணவு உட்கொள்ளலாம். கொள்ளுப் பேரக் குழந்தை பிறக்கும் போது, சன்யாச நிலையை எட்டிவிடுவதால், வனங்களில் கிடைப்பதை மட்டுமே உண்ண வேண்டும்; வயல் வெளிகளில் விளைவதை அல்ல.


அரசாட்சியின் முன்மாதிரியாக விஷ்ணு இருக்கிறார்.
சக்கரம் லயத்தையும் கட்டுப்பாட்டையும் காண்பிக்கிறது.
கதாயுதம் ஒழுங்கின் பிரதிநிதி
கீழ் நோக்கிக் காட்டும் கை, அளிக்க விருப்பமிருப்பதைக் காண்பிக்கிறது.
சங்கு, செய்தியைச் சொல்வதற்கு.
விஷ்ணு பயணம் செய்யும் கருடன் தூரப்பார்வைக்கும், விசாலப் பார்வைக்கும் எடுத்துக்காட்டு.

கருடன் மீது அமர்ந்திருக்கும் விஷ்ணுவின் சிற்பம்.

தர்மத்தை நிலை நிறுத்தி, மக்களை தர்மத்தை அனுசரிக்க வைக்கும் பொறுப்பு அரசனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் விஷ்ணுவின் மறு பிரதிநிதியாகக் கருதப்படுகிறான்.

பாம்பின் மடியில் விஷ்ணு அமர்ந்திருப்பதால், அவர் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எல்லோரும் அவரவர் ஆசிரம நிலைக்குத் தகுந்த மாதிரி இருத்தல் வேண்டும். ஏதேனும் தவறாகப் போய்விட்டால், விஷ்ணு கருடனில் விரைவது போல அவரும் விரைந்து சென்று நிலைமையைச் சாந் செய்தாக வேண்டும். மிருக உணர்விலிருந்து விடுபட வேண்டிய அவசியத்தை மக்களிடம் வலியுறுத்தி விஷ்ணுவைப் போலவே, அவரும் சங்கு எடுத்து ஊத வேண்டும். விஷ்ணு தன் சுட்டுவிரலில் சக்கரத்தைச் சுழற்றுவது போல, அவர் எல்லாம் சாந்யாக நடந்துகொண்டிருக்கிறதா என்று அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். விஷ்ணுவைப் போல, அவரும் கதையையும் தாமரையையும் வைத்திருக்க வேண்டும். சட்டத்தை மீறுவோரைத் தண்டித்து, சட்டத்தை மதித்து நடப்போரைப் பாராட்ட வேண்டும்.

இதுவே அமைதியையும், செல்வச் செழிப்பையும் நாட்டில் நிலவச் செய்யும். எல்லா அரசர்களும் விஷ்ணு போலச் செயல்பட்டால், பிரபஞ்சம் முழுதும் அமைதியும், செழுமையும் இருக்கும். மிருகங்கள் மற்றும் தாவரங்களின் தேவைகள் பாதிக்கப்படாமல், பூமி மீண்டும் செயல்படும் தன் திறனை இழக்காமல், மனிதகுலத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அரசன் தன் கடமைகளைச் செய்தால் மட்டுமே, பூமிப் பசு மகிழ்ச்சி அடையும்.

ஆனால் பொருளியல் சார்ந்த பிரபஞ்சத்தில், எதுவும் நிரந்தரமில்லை. ஆன்மிக உண்மை சாந்து வீழ்வதால், அச்சம் தலை தூக்குகிறது. கடமை ஆசைக்கு வழிவிடுகிறது. பேராசை தன் கோரமான முகத்தைத் தூக்குகிறது. முடிவில் விதிமுறைகள் சமரசம் செய்து கொள்ளப்படுகின்றன. தங்கள் நிலைக்குத் தகுந்தாற்போல், சமூகத்தில், ஒவ்வொரு தளத்திலும் செயல்பட மனிதகுலம்

மறுக்கிறது. கூடுதாலக எதையும் செய்தால், பூமிப்பசுவின் முதுகு ஒடிந்து, அதன் மடிகள் வறண்டுபோய்விடும். பயந்துபோய் தன் பாதுகாவலன் ஆன விஷ்ணுவிடம் திரும்புகிறாள். அவர் வெவ்வேறு வடிவங்கள் எடுத்து கீழிறங்கி வருகிறார், சில வேளைகளில் மிருகமாக, சில வேளைகளில் மனிதனாக. இப்படிக் கீழிறங்கி வருவது அவதாரம் எனப்படுகிறது.




விஷ்ணுவின் அவதாரங்கள்

அவதாரங்களின் எண்ணிக்கையும் மாறுபடுகிறது. ஜெயதேவரின் 12ஆம் நூற்றாண்டு கீத கோவிந்தத்தின்படி, இந்த அவதாரங்கள் மொத்தம் பத்து: மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ஹ, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண, புத்தர் மற்றும் கல்கி. பாகவத புராணத்தில், இருபத்தி இரண்டு அவதாரங்கள் சொல்லப்படுகின்றன. மீதி பன்னிரண்டு இவை: சதுர்சன, நாரத நர-நாராயண, கபில, தத்தாத்ரேய, யக்ன, ரிஷப, ப்ரிது, தன்வந்திரி, மோஹினி, வியாச மற்றும் பலராம. அவதாரங்களில் சேர்க்கப்பட்டுள்ள மேலும் இருவர்: ஹம்ஸ மற்றும் ஹயக்ரீவ.

விஷ்ணு காப்பது உலகை. இயற்கை மற்றும் சமூக நீதியைக் குலைப்பவற்றை அழிப்பது. அப்படிக் காப்பதும் ஆன்மிகம்தான். ஜீவராசிகளுக்கு விளக்கம் அளித்து, அவர்கள் இயற்கையையும், சமூக ஒழுங்கையும் மீறாமல் பார்த்துக்கொள்வது.

மனிதனின் பரிணாமத்தைத் தான் விஷ்ணுவின் அவதாரங்கள் சொல்கின்றன என்று அடிக்கடி கூறப்படுகிறது. நீரில் வாழும் மீன், பின்னர் தரையிலும் நீரிலும் வசிக்கும் பிராணியான கூர்மம், நிலத்தில் வசிக்கும் வராஹம், தொடர்ந்து பாதி மனித நரசிம்ஹம், நிறைவாக மனிதனாக வாமனர்.

மனித அவதாரங்கள், மாறாக, வர்ண முறையைச் சார்ந்திருக்கின்றன. பரசுராமர் ஒரு பிராமணர், ஆனால் க்ஷத்ரியர் போல் நடந்துகொள்கிறார்.

ராமர் பிறப்பாலும் செயலாலும் க்ஷத்ரியர், கிருஷ்ணர் பிறப்பால் க்ஷத்ரியர் என்றாலும் வைசியர் போல் மாடுமேய்ப்பவராகவும், சூத்ரராகத் தேரோட்டியாகவும் செயல்படுகிறார். அவர்களும் ஆசிரம தர்மத்தைத்தான் பின்பற்றுகிறார்கள். பரசுராமர் பிரம்மசாரி. ராமரும் கிருஷ்ணரும் கிருஹஸ்தர்கள், புத்தர் வானப்பிரஸ்தம் அனுசரிப்பவர், இறுதியில் சன்னியாசியாகிவிடுகிறார்.

பொருளாதார உண்மை அல்லது லோகாயத உண்மை மாறுபடக்கூடும். விஷ்ணு எதிர்பார்ப்புக்கு உகந்த மாதிரி தன்னை மாற்றிக்கொண்டு, அதன்படி செயல்படுகிறார்.




விஷ்ணு நாகத்தில் சாய்ந்திருக்க, அருகே லக்ஷ்மி-களிமண் பொம்மை

ஆக, காலப்போக்கில், எல்லா அமைப்புகளும் முறைகளும், நெறிகளும், விதிகளும், பொருத்தத்தை இழந்துவிடுகின்றன. இப்படி படிப்படியாக எல்லா நெறிமுறைகளும் சரிவது, யுகத்துக்கு ஏற்றாற்போல் நடக்கும் என்ற கருத்தில் வெளிப்படுகிறது.

குழந்தைப்பருவம், இளமை, முதிர்ச்சி, முதுமை என்று நான்கு நிலைகள் மனித வாழ்க்கைக்கு இருப்பது போல்,

ஒவ்வோர் அமைப்பும், முறையும்.-கிருத, த்ரேதா, த்வாபர மற்றும் கலி என்ற நான்கு நிலைகளைக் கடக்க வேண்டியிருக்கின்றது. தர்மம் என்ற காளை, கிருத யுகத்தில் நான்கு கால்களில் நிற்கும் என்றால், த்ரேதா யுகத்தில் மூன்று கால்களில், த்வாபர யுகத்தில் இரண்டு கால்களில், கலி யுகத்தில் ஒற்றைக் காலில் நிற்கும்.

இதன் பிறகு, தர்மம் என்ற காளையும் அது தாங்கி நிற்கும் சமுதாயமும் பிரளய நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிடுகிறது. இதுதான் உலகின் மரணம்.

தொடர்ந்து மறு பிறப்பு. புதிய வாழ்க்கையில், மீண்டும் நான்கு யுகங்களும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்கின்றன. இதுதான் காலச் சக்கரம் எனப்படுகிறது.

பகவத் கீதையில், கிருஷ்ணர், 'எங்கெல்லாம் தர்மத்துக்குக் கேடு வருகிறதோ, அங்கெல்லாம் நான் வந்து அதைக் களைவேன்' என்கிறார். இந்த வரியைப் படிக்கையில், யுகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். விஷ்ணு காலம் ஓடுவதைத் தடுப்பதில்லை. அதைத் திரும்பச் செல்ல வைப்பதும் இல்லை. ஓர் அவதாரம் ஒரு லட்சிய தர்மத்தை நிறுவுவதில்லை. ஏனென்றால் லட்சிய தர்மம் என்று ஒன்றில்லை. ஓர் அவதாரம், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஏற்றவாறு தர்மத்தை மாற்றி அமைக்கிறது. கிருத யுக தர்மம், த்ரேதா யுக தர்மம் போல இருக்காது. காலம் வேறுபடும்போது, தேவைகள் மாறுகின்றன. அதனால் நாகரிகத்தின் நெறிமுறையும் வேறுபடுகின்றது. நோய் இருக்குமிடத்தில் மருத்துவர் வருவது போல, விஷ்ணு வருகிறார்.

அவர் ஆரோக்கியத்தைத் தருகிறார். ஆனால் வயதாவதை அவரால் தடுக்க முடியாது. எப்படியும் ஒரு நோயாளி இறந்துவிடுவார். மருத்துவரின் பணி, நோயாளியை முழு வாழ்க்கையை ஆரோக்கியமாக வாழ வழி செய்வதுதான். இதைத்தான் அவதாரங்கள் செய்கின்றன. மீதி இயற்கையின் தேவைக்கேற்ப, மனித வாழ்க்கை அமைகிறது. பிரளயம் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் ஓர் அவதாரம் அது முன்னதாகவே நிகழ்ந்துவிடாமல் தடுக்கிறது.


பரசுராமர் என்றால், வெட்டரிவாள் ஏந்திய ராமர் என்று பொருள். குருவாக, அவர் மரத்துண்டுகளை சடங்குகளுக்காகச் சேகரிப்பார். நேர்மையாக நடக்காத மன்னர்களைக் கொன்றுவிடுவார்.
பரசுராமர் கிருத யுகத்தின் முடிவையும், திரேதா யுகத்தின் தொடக்கத்தையும் காண்கிறார்


பலராமர் கலப்பையை வைத்திருக்கிறார். அவர் சமூகத்தின் கீழ்நிலையைச் சேர்ந்தவர் என்பதைக் காட்ட.
பலராமர் துவாபர யுகத்தின் முடிவையும், கலியுகத்தின் துவக்கத்தையும் பார்க்கிறார்.
யாதவ ராமர், யது குலத்தில் தோன்றிய பலராமர். கிருஷ்ணரின் மூத்த சகோதரர்.


திரேதா யுக முடிவையும், துவாபர யுகத்தின் துவக்கத்தையும் ராமர் பார்க்கிறார்.
ராமர் தமது அரசகுலப் பிறப்பைக் காட்ட வில்லைக் கையில் ஏந்தியிருக்கிறார்.
பார்கவ ராமர், ப்ருகு வம்ச ராமர். பரசுராமரின் இன்னொரு பெயர்.

விஷ்ணுவின் மூன்று அவதாரங்கள்-எல்லாமே ராமர்-மைசூர் ஓவியம்.

ஒரு காலகட்டம் அதன் முடிவை எட்டும்போது, ஓர் அவதாரம் அடுத்த கட்டத்துக்கு மாற உதவுகிறது. தங்கயுகமான கிருத யுகத்தில் தோன்றும் பரசுராமர், வெள்ளி யுகமான த்ரேதா யுகத்துக்கு வழி செய்கிறார். த்ரேதா யுகம் த்வாபர யுகமான வெண்கல யுகத்துக்கு வழி செய்யும்போது, ராமர் அவதாரம் செய்கிறார். த்வாபர யுகம் வழிவிட்டு இரும்பு யுகமான கலியுகத்துக்கு வழி செய்யும்போது கிருஷ்ணர் அவதரிக்கிறார். கலியுகத்தில் புத்தர் தோன்று கிறார். கலியுகம் நிறைவடையும்போது, கல்கி பிரளயத்தைத் தோற்றுவிக்கிறார்-மரணமும் அதைத் தொடர்ந்து மீண்டும் பிறப்பும்.

கிருத யுகத்திலிருந்து திரேதா யுகத்துக்கு மாறும்போது, சொத்து பற்றிய அம்சம் வருகிறது. சொத்து என்றால் பல வகைகள். வீட்டில் வளர்க்கும் அல்லது வேலை செய்யும் பிராணிகள், நிலம், தவிர, பெண்கள்கூட!

மனைவியை சொத்தாகத்தான் பார்க்கிறார்கள். அவள் கணவனுக்கு அடங்கியவளாகவும், நம்பிக்கைக்கு உரியவளாகவும் இருக்க வேண்டும். கிருத யுகத்தில், இது எந்தத் தூண்டுதலும் இல்லாமல் தானாக முன்வந்து செய்வது. ஆனால் அந்தப் பொற்காலம் முடிய முடிய, ஆசையும் நேசமும் இதை எல்லாம் மாற்றிவிடுகின்றன. விசுவாசமாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இளவரசி ரேணுகா, பூசாரியான ஜமதக்னியை மணக்கிறாள். ஐந்து குழந்தைகளைப் பெறுகிறாள். கடைசிக் குழந்தைதான் பரசுராமர். ரேணுகா ஒரு விசுவாசம் மிக்க மனைவி. நதிக்கரையில், சுடாத மண்ணில் செய்த களிமண் குடத்தில் நீரை மொண்டுகொண்டு வரும் அளவுக்கு விசுவாசமானவள். ஆனால் ஒரு நாள் ரேணுகா ஓர் அழகான கந்தர்வன் தன் மனைவிகளுடன் நதியில் கொண்டாட்டமாகக் குளிப்பதைப் பார்க்கிறாள்.

சிலர் அவன் கந்தர்வன் அல்ல, கார்த்தவீர்யன் என்ற மன்னன் என்கிறார்கள். அந்த மனிதனின் அழகால்

கவரப்பட்டுவிடுகிறாள். அந்தக் கண நேர சபல எண்ணத்தால் தன்னுடைய மந்திர சக்தியை இழந்து விடுகிறாள். இனி அவளால் வெறும் களிமண் குடத்தில் நீர் மொண்டு வர முடியாது.




பரசுராமர் -மைசூர் ஓவியம்.




தாய் ரேணுகாவின் தலையைக் கொய்யும் பரசுராமர் -மைசூர் ஓவியம்.




பரசுராமர் கார்த்தவீர்யனைக் கொல்லும் வட இந்திய ஓவியம்.

அவள் கணவர் இதை அறிந்தபோது, மிகுந்த சினம் அடைகிறார். தன் மகன்களை அழைத்து, தாயாரின் தலையைக் கொய்துவிடச் சொல்கிறார்.

முதல் நால்வரும் மறுத்துவிடுகிறார்கள். பரசுராமர் தன் கோடாலியை எடுத்துக்கொண்டு வந்து தன் தாயாரின் கழுத்தை வெட்டி எடுத்துவிடுகிறார்.

எந்த நிபந்தனையுமற்ற இந்தக் கீழ்ப்படிதலுக்காக, பரசுராமருக்கு ஜமதக்னி ஒரு வரம் கொடுக்கிறார். 'தாயாருக்கு மீண்டும் உயிர் கொடுங்கள்'

என்கிறார் பரசுராமர். ஜமதக்னி அவ்வாறே செய்கிறார். ஏனென்றால், அவர் பிருகு குலத்தில் தோன்றியவர். பிருகுவின் மகன் சுக்ரன். அசுரர்களுக்கு உதவுபவர். அதனால் ஜமதக்னியிடம் இறந்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் சஞ்சீவனி வித்தை இருந்தது.

கிருத யுகத்தில், அரசர்கள் நிறையப் பசுக்களை தானமாக அளித்தார்கள். க்ஷத்ரியர்களின் தாராள மனப்பான்மை காரணமாக, பிராமணர்கள் தங்கள் வருவாய் பற்றிக் கவலைப்படாமல், தங்கள் சடங்குகளையும், ஆன்மிக தத்துவ செயல்பாடுகளையும் செய்துவர முடிந்தது. ஆனால் கிருத யுகம் நெருங்கவே, ஹைஹயா வம்ச அரசன் கார்த்தவீரியன், ஜமதக்னிக்கு தானமாகக் கொடுத்த பசுவைத் திருப்பிக் கேட்கிறான். ஜமதக்னிக்கு இது அடாவடித்தனமாகத் தோன்றுகிறது. ஆனால் அரசன் வற்புறுத்துகிறான். வலுக்கட்டாயமாகப் பசுவை எடுத்துக்கொண்டு போக வருகிறான். கார்த்த வீரியன் ஆயிரம் கரங்கள் உள்ளவனின் சக்தி படைத்தவன். அவனை யாராலும் தடுக்க முடியாது. ஜமதக்னி அவனிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறான். ஆனால் அரசன் மறுத்துவிடுகிறான். அரசன் பசுவை இழுத்துக்கொண்டு போகும் ஓலத்தைக் கேட்க சகிக்காமல், தன்னுடைய கோடாலியால் அரசனை வெட்டிக் கொன்றுவிடுகிறான். ஒரு பூசாரி ஒரு மன்னனைக் கொல்வது அதிர்ச்சி அளிக்கும் நிகழ்ச்சி. கார்த்தவீரியனின் பிள்ளைகள் இதைக் கேட்டவுடன், பழி தீர்ப்பதற்காக, அவர்கள் ஜமதக்னியின் ஆசிரமத்துக்குச் சென்று அவன் தலையை வெட்டிவிடுகின்றனர். சினம் கொண்ட பரசுராமர், உலகத்தில் போர்வீரர்களோ, அரசர்களோ இல்லாமல் போவது என்று சபதம் செய்கிறார். எனவே கொலைகள் தொடர்கின்றன. அவர் இருபத்தோரு தலைமுறைகளைக் கொல்கிறார். சிலர் 21 க்ஷத்ரிய வம்சத்தை என்கிறார்கள். அதனால் அத்தனை மன்னர்களின் ஏராளமான ரத்தம் ஐந்து ஆறுகளாக ஓடத் தொடங்குகின்றது. அதைத் தன் தந்தைக்கு சமர்ப்பணம் செய்கிறார். பலத்தைப் பெறுவதற்காகத் தங்கள் படையைப் பயன்படுத்தும் பூமியிலுள்ள எல்லா அரசர்கள் மீது ஒரு கண் வைத்திருப்பதாக சூளுரைக்கிறார்.




சகோதரர்கள்-ஒரு சிற்றோவியக் காட்சி.




மகாராஷ்டிர சித்ரகதி ஓவியத்தில் சகோதரர்கள்.

ஆனால் ஒரு நாள் பரசுராமர் ராமரைச் சந்திக்கிறார். தன் பணி முடிந்துவிட்டதாக நினைக்கிறார். அவரை ஓர் ஆதர்ச அரசனாக, சொந்த ஆதாயத்துக்காகத் தன் படைகளைப் பயன்படுத்தாதவர் என்று கருதுகிறார். பரசுராமரைப் போலவே ராமரும் விஷ்ணுவின் ஓர் அவதாரம். ஆனால் மன்னனாக வணங்கப்படுபவர் அவர் ஒருவரே.

ஆசாரியரின் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பரசுராமர் ஒரு போர்வீரனைப் போல்தான் நடந்து கொள்கிறார். அப்படியாக, வர்ண தர்மத்தை மீறியிருக்கிறார். ராமரோ அரச குலத்தில் பிறந்தவர். வாழ்க்கை முழுதும் அரச தர்மம் எப்படிச் சொல்கிறதோ அப்படியே வாழ்ந்து காட்டியவர்.

அவர் அயோத்தி மன்னர் தசரதரின் மூத்த மகன்.

அவருடைய முதல் மனைவிக்குப் பிறந்தவர். அதனால் பட்டம் சூட்டிவிடத் தகுதியானவர். ஆனால், பட்டாபிஷேகத்துக்கு முதல் நாள், அவருடைய சிற்றன்னை கைகேயி, எப்போதோ தசரதர் தருவதாகச் சொன்ன இரண்டு வரங்களை இப்போது கொடுக்குமாறு கேட்கிறாள். ராமர் 14 ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும் என்றும், பதிலுக்கு அவளுடைய மகன் பரதன் அரசனாக முடி சூட்டப்படவேண்டும் என்றும் கேட்கிறாள். இதைத் தெரிவித்தவுடன் ராமர் எந்த வருத்தமும் இல்லாமல், தன் அரச உடைகளைக் களைந்து, தன் மனைவி சீதையுடனும், அன்பான சகோதரன் லக்ஷ்மணனுடனும் வனத்துக்குச் செல்கிறார். தாய் ஏமாற்றிச் செய்த இந்த ஏற்பாட்டுக்கு இசைய மறுத்துவிடுகிறான் பரதன். பரதன் தானும் ஒரு முனிவர் போல வாழ்ந்து, சகோதரன் திரும்ப வந்து நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்கும்வரை காத்திருக்கிறான்.

தன் வனவாசத்தின்போது, வடக்கிலிருந்து தொடங்கி தெற்கே வரவர, ராமர் சந்திக்கும் சகோதரர்கள், தன் சகோதரர்கள் நடந்துகொண்டது போல் அல்லாமல் இருப்பதை அறிகிறார். தன் சகோதரன் யக்ஷனான குபேரனிடமிருந்து லங்கையைக் கவர்ந்துகொண்ட ராவணன் என்னும் அரக்கன் ஆட்சி செய்து வந்தான். அயோத்திக்கும் லங்கைக்கும் இடையே, வானரங்களின் நாடான கிஷ்கிந்தையை வாலி ஆண்டு வந்தான். அவன் அந்த நாட்டைத் தன் சகோதரன் சுக்ரீவனுடன் பகிர்ந்துகொள்ளாமல், ஒரு மனத்தாங்கல் காரணமாக, அவனை விரட்டிவிடுகிறான்.




மகாராஷ்டிர ஓவியம் -சூர்ப்பனகை.




ராவணன் சீதையை அபகரித்துச் செல்லல்-ஓவியம்.

இது ஒன்றும் சரித்திரக் குறிப்பு அல்ல. வினோதமான நடப்புகளின் அறிகுறி. வடக்கு ஆன்மிக உண்மைக்கு உதாரணமாக இருக்க, தெற்கு அதற்கு நேர் மாறாக பொருளியல் சார்ந்த உண்மையைக் குறிக்கிறது. எனவே, அயோத்தியிலிருந்து தெற்கே தள்ளிப் போகப் போக, தர்மத்தின் கொள்கைகள் மெல்ல மெல்லச் சீரழிந்து வருவதையும், மனிதனின் மிருக சுபாவமும் பேராசைக் குணமும் வெளிப்படுவதை ராமாயணம் காண்பிக்கிறது.

தர்மம் என்பது சொத்து உரிமை மற்றும் திருமண உரிமை. ராமரும் சீதையும் என்றென்றும் ஒருவருக்கு ஒருவர் விசுவாசமாக இருக்கும் தம்பதி என

வர்ணிக்கப்படுகிறார்கள். ராமர் இன்னொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். சீதை இன்னோர் ஆணை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள்.

அவர்கள் ஆதர்ச தம்பதி. அவர்களைச் சூழ்ந்திருப்பவர்கள், அவர்கள் ஒன்று சேர்ந்திருப்பதற்குத் தொடர்ந்து குந்தகம் விளைவித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

சூர்ப்பனகை என்ற அரக்கி ராமர் தன்னை அனுபவிக்க வேண்டும் என்று கோர, ராமர் தாம் ஏற்கெனவே திருமணமானவர் என்று கூறிவிடுகிறார்.

அந்தச் சந்திப்பு மோசமாக மாறி, காட்டு தர்பாரின்படி, அவள் சீதைக்குக் கேடு விளைவிக்கப் பார்க்கிறாள். சினம் கொண்ட லக்ஷ்மணன் அவள் மூக்கை அறுத்துவிடுகிறான். ஆத்திரமடைந்த சூர்ப்பனகை, அண்ணன் ராவணனிடம் சென்று முறையிடுகிறாள். இதைத் தாங்கவொண்ணாத ராவணன் சீதையை அபகரித்துக்கொண்டு தன் லங்கை ராஜ்யத்துக்குக் கொண்டு செல்கிறான். தன் பல மனைவிகளுள் ஒருத்தியாக அவளை வைத்துக்கொள்ளப் பார்க்கிறான். அவளுக்கோ ராமரைத் தவிர வேறு ஒருவரும் இல்லை!




இலங்கைக்குப் பாலம் கட்டுகிற ஹனுமான்-சித்திரம்.




ஹனுமான் ராமர் தம் இதயத்தில் இருப்பதைக் காட்டும் ஓவியம்.

காட்டில், நாகரிகம் மெல்ல மெல்லக் கைவிடப்பட்டு, விதிகள் மறக்கடிக்கப்படுகின்றன. வலுக்கட்டாயமாக, ஒருவன் தன் சகோதரனின் சொத்தை அபகரிக்கலாம். வலுக்கட்டாயமாக, திருமண உரிமைகளை ஆணும் பெண்ணும் தூக்கியெறிந்துவிடலாம். சீதையோ, ராமரோ இந்தக் காட்டு தர்பார் விதிகள் குலைக்காமல், தங்கள் வாழ்க்கை தர்மத்தை மேற்கொள்கின்றனர். அவர்கள் அயோத்தியை விட்டு வந்திருக்கலாம். ஆனால் அயோத்தி அவர்களை விட்டுவிடவில்லை.

வனத்தில் ராமர் சுக்ரீவனைச் சந்தித்து அவன் அரசனாக உதவுகிறார். பிரதி உபகாரமாக, சுக்ரீவன் ராமருக்கு அவர் மனைவி சீதையைக் கண்டு பிடித்துத்தர முன்வருகிறான். ராமருக்கு உதவ வேண்டும் என்ற வார்த்தையைக் காக்கச்

செயல்படுகிறான். ஆனால் அப்படி எந்த உடன்பாடும் செய்து கொள்ளாதவர் ஹனுமான், ஹனுமான் ராமருக்கு எப்படியும் சேவை செய்வார். இந்த தாராள மனப்பாங்கு, தன்னை மீறி வேறு ஒருவருக்கு உதவ வேண்டும் என்ற ஆன்மிக விழிப்புணர்வைக் காட்டுகிறது. ஹனுமான் இயற்கையிலிருந்து விடுபட்டு, புருஷராக வாழ்கிறார்.

மிருகங்கள் தங்கள் காம இச்சையாலும், கொடூர எண்ணங்களாலும் செயல்படுகின்றன. மனிதர்கள் தங்கள் மூளை பலத்தால் இந்த எண்ணங்களை வெற்றி கொள்கிறார்கள். மிருகமாயிருந்தாலும், பெரிதாக மூளை எதுவும் இல்லாமலே, ஹனுமான் பிரம்மசரியத்தை அனுசரிக்கிறார். பிறர் பலன் அடைவதற்காகப் போராடுவார். இதுவே அவரை எல்லோரும் வணங்கத் தகுந்தவராக ஆக்கியிருக்கிறது. மிருகமாயிருந்தாலும்கூட, அவரைக் கடவுளுக்கு சமமாகக் கொண்டாட வைத்திருக்கிறது.

ஹனுமானின் தலைமையில், வானரங்கள் இலங்கைத் தீவுக்குப் பாலம் அமைத்து ராவணனைத் தாக்கத் தீர்மானிக்கிறார்கள். அரசன் என்பவன் தன் மக்களுக்கு உதவுபவனாகவும், மக்களைக் காப்பவனாகவும் இருக்க வேண்டும். ராவணன் இரண்டும் செய்யாதவன். ராவணனுக்கு நாடு என்பது வெறும் நிலப்பரப்புத்தான். லங்கை அழிந்தாலும் பரவாயில்லை, சீதையை விடுவிக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறான். தன் சகோதரர்களையும், மகன்களையும் போர் முனைக்கு அனுப்பிவிட்டு, சீதையை விட்டுக்கொடுக்க மறுக்கிறான். தன் பிடிவாதத்தைக் கைவிட மாட்டேன் என்கிறான்.




மகாராஷ்டிர சித்ரகதி ஓவியம்: சீதை அயோத்தியிலிருந்து அழைத்துச் செல்லப்படுகிறாள்.




சீதையின் புதல்வர்கள் லவனும் குசனும்-ஓவியம்.

ராவணனுக்குப் பத்துத் தலைகள்; இருபது கைகள். அவன் ஒரு ஆசாரியரின் மகன் என்றும், வேத சாஸ்திரங்களில் விற்பன்னன் என்றும் சொல்வார்கள். சிவபெருமானின் பக்தன் என்றும் கூறுவார்கள். இவ்வளவு ஞானம் இருந்தும், அத்தனை சக்தி மிக்கவனாக இருந்தும், அவன் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வதில்லை. குரங்குகள் தங்களை மனிதர்களைப் போல மாற்றிக் கொண்டாலும், ராவணன் மிருக குணத்திலிருந்து மனித குணத்துக்கு இறங்கிவருவதில்லை. உண்மையில், அவன் மிருகத்தைவிட மோசமானவனாக இருக்கிறான். காரணம் அவன் செயல்கள் தன்னைக் காத்துக்கொள்ளவும், தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளவும் மட்டுமே அமைந்திருக்கின்றன. தன்னையே

ஏமாற்றிக்கொள்பவனாக, தனக்கே முக்கியத்துவம் கொடுப்பவனாக இருக்கவே, அவன் அழிவுக்கு அவையே காரணங்களாகின்றன.

ராவணனைக் கொன்ற பிறகு, ராமர் அயோத்திக்கு சீதையுடன் திரும்பச் சென்று அரசனாக முடிசூட்டிக் கொள்கிறார். இது ராமராஜ்யத்தின் தொடக்க மாக, ராமரின் ஆட்சியாக, தர்மத்தை நிலை நாட்டும் பொற்காலமாகக் கருதப்பட்டது.

ஆனால் ஒரு நாள், ராமர் தெருவில் பேசிக் கொள்ளப்படும் புரளியைக் கேள்விப்படுகிறார். அயோத்தி மக்கள் சீதை தங்கள் அரசியாக இருப்பதை அறிந்து தர்மசங்கடப்படுகிறார்கள். ராவணனின் கைதியாகப் பல மாதங்கள் இருந்ததால், அவள் புகழ் களங்கமடைந்து விட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். சீதை அக்னி பிரவேசம் செய்து குற்றமற்றவள் என்று நிரூபித்த பின்னரும், ராமர் அவளைத் துறந்து அவளைக் காட்டுக்கு அனுப்பிவிடுகிறார். ராமாயணத்தில் இது சற்று பிரசினையான பகுதி. தர்மத்துக்கு எதிராக அளிக்கப்பட்ட அநீதி என்பது தெளிவு.

இந்தப் பகுதி தர்மம் என்பதன் சிக்கலான விஷயத்துக்கு நம் கவனத்தை இட்டுச் செல்கிறது. ராமர் முதலில் அயோத்தியின் மன்னரா அல்லது சீதையின் கணவரா? அரசன் என்ற முறையில், அவர் அயோத்தி மக்களின் கருத்துக்கு மதிப்பு அளிக்க வேண்டும். களங்கமானவள் என்ற பெயர் பெற்ற அரசியாக இருக்க முடியாது என்ற அரச தர்மத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். ஆனால் கணவர் என்ற முறையில், அவர் அவளைக் காக்க வேண்டும். ராமர் தன் சொந்த மகிழ்ச்சியைத் தள்ளிவைத்துவிட்டு, முதலில் மன்னராக இருக்க விழைகிறார். அதனால் குடும்பத்தின் நேர்மையில் சமரசம் செய்துகொள்ள அவர் இடம் கொடுக்கவில்லை.




ராமர் மீசையுடன்-வித்தியாசமான கலம்காரி ஓவியம்

சீதை அவர் மனைவியும், அரசியும் மட்டுமல்ல, அவளும் மக்களில் ஒருத்தி என்று வாதிடுவோர் உண்டு. ஆனால்,

மன்னர் என்ற வகையில், ராமர் விதிகளை உருவாக்காமல், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுபவர். விதி என்பது அவர் வம்சத்து விதியும்தான். அதை அவர் உயர்த்திப்பிடித்தாக வேண்டும். அதற்கு ராமர் தன்னை உட்படுத்திக்கொள்கிறார். இந்தக் கதை, விதிமுறைகளும், பாரம்பரியக் கொள்கைகளும் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை எடுத்துக்காட்டும். ரகு வம்சத்தின் விதிமுறைகளும், பாரம்பரியக் கொள்கைகளும் எப்படி ஆரம்பத்தில் ராமரைத் தன் தந்தையை மதிக்கச் செய்தனவோ, அப்படியே முடிவில் அப்பாவி சீதையைக் களங்கமானவள் என்று காட்டுக்கு அனுப்பி வைக்கும்போதும் இருந்துவிடுகின்றன.

ராமர் அரசி என்று சீதையைக் கைவிட்டாலும், சீதா என்ற தன் மனைவியைக் கைவிட்டுவிடவில்லை. மறுமணம் செய்துகொள்ள மறுத்துவிடுகிறார்.

மாறாக, யாராலும் அவளுடைய இடத்தைப் பிடித்துவிட முடியாது என்பதை நினைவுபடுத்த, தன் சிம்மாசனத்தில் தன் அருகே சீதையின் தங்கச் சிலை ஒன்றை வைத்துக்கொள்கிறார். சீதையின் உருவத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட உலோகம் சுத்தத் தங்கம் என்பது, ராமர் சீதையின் குணத்தை எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறார் என்பதைக் காண்பிக்கும்.

ஹிந்து புராணங்களில் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பின்விளைவு இருக்கும். சீதையைக் கைவிட்டதற்கும் ஒரு பின்விளைவு இருக்கிறது. சீதையைத் துறந்த பிறகு, ராமர் தன் வாழ்க்கையில் ஒரே ஒரு போராட்டத்தில் தோல்வியைச் சந்திக்கிறார். அவருடைய அசுவமேதயாகக் குதிரையை சீதையின் மக்கள் லவனும் குசனும் பிடித்துவிடுகிறார்கள். அவர்களுக்கு ராமர் தங்கள் தந்தை என்று தெரியாது. அவர்கள் ராமரின் படையை வெற்றிகரமாகத் திருப்பியனுப்புகிறார்கள். தர்மம் சீதையின் பக்கம்தான் இருந்தது, அயோத்தியின் பக்கம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவது போல.

சீதை ராமருக்கும் அவருடைய மகன்களுக்கும் இடையேயான போரை நிறுத்திவிடுகிறாள். அவளுடைய

வெற்றி அவளுடைய புனிதத்தையும், கற்பையும் அறிவிக்கிறது. அயோத்தி மக்கள் தங்களை மன்னிக்கச் சொல்லிக் கோருகிறார்கள். மீண்டும் ஒரு முறை அவள் கற்பை நிரூபித்த பிறகு அரண்மனைக்குத் திரும்பச் சொல்லிக் கேட்கிறார்கள். தான் தன் கணவருக்கு விசுவாசமானவள் என்றால், பூமி பிளந்து தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறாள். பூமி பிளந்து சீதையை விழுங்கிவிடுகிறது. இதுவே லக்ஷமி தன் பெற்றோரிடம் திரும்பச் செல்வதைக் காண்பிக்கிறது.

ராமர், விஷ்ணுவாக, லக்ஷமியில்லாமல் பூமியில் இருக்க விரும்பவில்லை என்பதால், தன் மகன்களுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, சரயு நதியில் மூழ்கித் தன் மானுட உடலை மாய்த்துக்கொள்கிறார்.

ராமாயணத்தின் நிறைவுப் பகுதி, தர்மத்துக்கும் நீதி மற்றும் ரீதிக்கும் இடையேயான வேறுபாட்டைச் சித்திரிக்கிறது. நீதி என்றல் சட்டத்தின் முறைப்படி ரீதி என்றால் பாரம்பரிய முறைப்படி சட்டங்களும், பாரம்பரியமும் முறையாக உருவாக்கப்பட்டதற்குக் காரணம், ஆதரவற்றவர்களுக்கு உதவத்தான். சில வேளைகளில் அவை நேர்மையற்றும், கொடூரமானதாகவும் முடிந்துவிடும். சீதையைக் கைவிடுவது இதற்கு சாட்சி. சட்ட விதிகளும், பாரம்பரிய முறைகளும் தர்மத்தை உயர்த்திப் பிடிக்க முடியாமல் போகும்போது, அவற்றைக் கைவிட்டுவிட வேண்டும் அல்லது மாற்ற வேண்டும். இந்தக் கருத்து, கிருஷ்ணரின் கதையில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

# 6
# கிருஷ்ணரின் ரகசியம்
## செயலுக்குப் பின்னால் இருக்கும் சிந்தனையை அறிந்துகொள்ளுங்கள்




புல்லாங்குழல் மாடுகளையும் கோபியரையும் கவர்கிறது. இங்கே எந்த அதிகாரமும் இல்லை. பரபரப்பு இல்லை. எளிமையான கவர்ச்சி மட்டுமே.
மாடு மேய்க்கிற அழகான கிருஷ்ணர்.
கோபியர் இந்தக் கவர்ச்சி கரமான புல்லாங்குழல்காரனைக் கொண்டாடுகிறார்கள்.

பாகவதத்தில் கிருஷ்ணர் தஞ்சாவூர் பாணி ஓவியம்.

கிருஷ்ணரின் கதை இரண்டு புராணங்களில் விரிந்து கிடக்கிறது. ஒன்று பாகவதம். இன்னொன்று மகாபாரதம்.

பாகவதம் கிருஷ்ணரைப் புல்லாங்குழல் வாசிக்கிற, விளையாட்டுக்கார, அன்பான, குறும்புக்கார, சினேகமான, மாடு மேய்க்கும் சிறுவனாக, வெண்ணெய்க்கு ஆசைப் படுபவனாக சித்திரிக்கிறது. மகாபாரதம் கிருஷ்ணரை சங்கு ஊதுகிற, நகர அமைப்பாளனாக, போர் வீரராக, தலைவராக, தத்துவஞானியாக, அரசியல் முதிர்ச்சி அடைந்தவராக, போரில் தேரோட்டியாகப் பணியாற்றி யதாகக் காண்பிக்கிறது. இப்படி இரு கிருஷ்ணர்களும் பூரண அவதாரங்களாக, கடவுளின் முழு பிரதிநிதியாக நமக்குத் தெரிகிறார்கள்.

ஆனால் கிருஷ்ணர் ஓர் அசாதாரணக் கடவுள். எல்லோருக்கும் தெரிந்த வழக்கமான தெய்வீக மதிப்பீடுகளுக்கும், பொருத்தமான சமுதாய நடை முறைகளுக்கும் சவால் விடுபவர். அவருடைய பெயரை நேரடியாக மொழிபெயர்த்தால் 'கறுப்பு' என்று பொருள். பொதுவாக இந்தியக் கண்ணோட்டத்தில் அசௌகரியமானதாகக் கருதப்படும் நிறம். அவரை மாடு மேய்ப்பவராக, அல்லது தேரோட்டியாகஅரசகுமாரனாகவோ, அரசனாகவோ அல்லாமல்-வேண்டு மென்றே சமூகத்தின் அடித்தட்டு மக்களுடன் இணைத்துப் பேசப்படுகிறவர். அவருடைய தாய் அவருடைய உண்மைத் தாயார் அல்ல. அவர் காதலித்தவர் அவர் மனைவி அல்ல. அவர் காப்பாற்றும் பெண்கள் அவருடைய தேச மக்களல்ல; அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அல்ல. அவர் காதல் செய்வது உண்மையான காதலும் அல்ல. அவர் செய்த போர் உண்மையான போர் அல்ல. இவை எல்லாமே நமக்குத் தெரிந்ததையும் தாண்டியவை. எல்லா அவதாரங்களிலுமே, கிருஷ்ணர் புன்னகைத்துக்கொண்டே இருப்பார். குறும்புத்தனமான புன்னகை. பொருள் பொதிந்த புன்னகை. கிருஷ்ணரைப் பொறுத்தவரை, நமக்குத் தெரிந்தவை தவிர,

வெளியே தெரியாதவை நிறையவே இருக்கின்றன.

ராமரை புருஷோத்தமனாக, அதாவது சமூக நீதி நெறிகளை எந்த வகையிலாவது காப்பவராகவும், கிருஷ்ணரை லீலா புருஷோத்தமராக, வாழ்க்கையை ரசித்து அனுபவிப்பவராகக் குறிப்பிடுகிறார்கள். தீவிர மானவராக, அமைதியானவராக, மரியாதையை உண்டு பண்ணுபவராக இருக்கும் ராமர் போல் அல்லாமல், கிருஷ்ணர் கொண்டாடத்தக்கவராக, எளியவராக, பாசம் காட்டக்கூடியவராக இருக்கிறார். ராமரின் கதை உலகின் இரண்டாம் யுகத்தில்-திரேதா யுகத்தில்-தர்மம் என்ற காளை மாடு மூன்று கால்களில் நிற்கையில் நடைபெறுகிறது. கிருஷ்ணரின் கதை அதற்கடுத்த மூன்றாவது யுகத்தில்துவாபர யுகத்தில்-தர்மம் என்ற காளை இரண்டு கால்களில் நிற்கும்போது நடக்கிறது. கிருஷ்ணரின் வாழ்க்கை நாம் வாழும் கடைசி யுகமான கலி யுகத்திற்கு வெகு அருகே நடந்திருக்கிறது. இன்று நாம் சந்திக்கும் தேய்ந்துபோன நேர்மையும் கொள்கைகளும் அதன் தொடர்ச்சிதான். இந்த உலகில், தர்மம் என்பதன் பொருளை வெளியிடுவதும், நிலை நிறுத்துவதும் மிகவும் கடினமானது. யயாதியின் கதையில் இது மேலும் வெளிப்படையாகத் தெரியும்.


கிருஷ்ணர் சிற்பத்தில் அபூர்வமான மீசையுடன்.
சிலையின் முகத்தில் போர்க் காயங்கள்.
இவர் வைத்திருக்கும் சங்கு, இவர் புல்லாங்குழல் ஊதும் கவர்ச்சிகரமான நாயகன் அல்ல, போர் வீரன் என்று காண்பிக்கிறது.
கையில் கிருஷ்ணர் வைத்திருக்கும் தடி அவர் போர்வீரர் அல்ல, தேரோட்டி என்று காண்பிக்கும்.

சென்னை பார்த்தசாரதி பெருமாள்-அச்சிட்ட படம்.

கிருஷ்ணருக்கு முந்தையவரான யயாதியை, அவர் ஒரு காதலியை வைத்திருக்கிறார் என்று அறிந்து, அவருடைய மாமனார் கிழடாகி, வீர்யம் இழந்தவனாகக்கடவது என்று சபித்துவிடுகிறார். யயாதி தன் மகன்களை அழைத்துத் தன் சாபத்தை ஏற்க வேண்டுகிறான். அப்போதுதான் அவன் தன் இளமையைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். யது என்னும் அவருடைய மூத்த மகன் மறுக்கிறான். காலத்தை அவர் மதிக்க வேண்டும், தன் மகன்களின் இளமையைத் தான் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்கிறான். கடைசி மகன் புரு, தன் தந்தையின் வயோதிகப் பருவத்தைத் தான் ஏற்றுக்கொள்வதற்கு முன்வருகிறான். புருவின் தியாகம் யயாதிக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. காலம் கடந்து போன பின், தன் இளமை முடிந்த பின், மூத்த மகன் யது அல்ல, கடைசி மகன் புரு தன் வாரிசாக இருப்பான் என்று அறிவிக்கிறான். யதுவின் குழந்தைகளோ, அவர்களின் குழந்தைகளோ ஒரு நாளும் முடி சூட முடியாது என்று சபிக்கிறான்.

யது குலத்தில் வந்த கிருஷ்ணர் மன்னராகவில்லை. புருவின் சந்ததிகள் பாண்டவர்களுக்கும், கௌரவர் களுக்கும் ஆட்சியுரிமை செல்கிறது. அவர்கள் ஆளும் தகுதியின்மையால் ஒவ்வொரு முறையும் ஆட்சி பீடத்தை இழக்கிறார்கள்.

ராமரின் யுகத்தில் எது நல்லதாக இருக்கிறதோ அது கிருஷ்ணரின் யுகத்தில் மோசமானதாகப் போய்விடுகிறது. கிருஷ்ணரின் ரகசியம் ராமர் எந்தக் கேள்வியும் கேட்காமல் தந்தை சொல்லைத் தட்டாமல் அடிபணிந்தது அவரைக் கடவுளாக உயர்த்திவிடுகிறது. ஆனால் புருவின் எதிர்ப்பு இல்லாத அடக்கம் சமூகத்தின் அழிவில் முடிந்துவிடுகிறது. தசரதர், தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற ராமரை கீழ்ப்படியச் சொல்கிறார். யயாதியோ, தன் சுகத்துக்காக, தன் மகன்களின் கீழ்ப்படிதலைக் கோருகிறான். யயாதி தன் சுய லாபத்துக்காக விதிமுறைகளைத் தன் இஷ்டத்துக்கு வளைக்கிறான். தசரதரோ அரச விசுவாசம் கேள்விக்குரியதாகிவிடக்கூடாது என்பதற்காக, விதிமுறைகளைக் கடைப்பிடிக்கச் சொல்கிறார். தந்தை சொல் தட்டேல் என்ற விதிமுறை, தசதரின் வாழ்க்கையில்

தர்மத்தை நிலை நிறுத்த, யயாதியின் கதை அதற்கு எதிராக அமைந்துவிடுகிறது.


தேவகி கிருஷ்ணருக்குப் பாலூட்டவில்லை. வெண்ணெய் தரவில்லை. அதனால் இது யசோதையாக இருக்கலாம். அல்லது இரண்டு உருவங்களும் தேவகி கிருஷ்ணரை வளர்க்க விரும்பியதைக் காட்டுவதாக இருக்கலாம்.
இந்தத் தாய்-குழந்தை வடிவம் ஜீஸஸ்-மேரித் தாய் போல இருப்பதாக உள்ளூர் கதைகள் சொல்வதால், போர்ச்சுக்கீசியர்கள் இதை அழிக்காமல் போய்விட்டார்கள்.
கிருஷ்ணர் தன் கையில் வெண்ணெய் வைத்திருக்கிறார்.

கோவாவில், மார்செலாவில், தேவகியும் கிருஷ்ணரும் ஓவியம்.

யயாதியின் விஷயத்தில் சட்ட விதிமுறை சட்டத்தோடு நின்றுவிடுகிறது. அதன் உட்பொருள் பின்பற்றப் படுவதில்லை. இது கிருஷ்ணரின் உலகம். செயலைவிட அதன் பின்னுள்ள எண்ணம்தான் முக்கியத்துவம் பெறுகிறது.

கிருஷ்ணரின் கதை யாதவர்களின் நகரமான மதுராவிலிருந்து தொடங்குகிறது. தேவகியின் எட்டாவது குழந்தை அவளுடைய சகோதரன் கம்சனைக் கொன்றுவிடும் என்று அசாரி சொல்லக் கேட்டு, கம்சன் பயந்துபோய் தேவகிக்குக் குழந்தைகள் பிறக்கப் பிறக்க அவர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராகக் கொன்றுவிடுகிறான்.

தேவகி தன் எட்டாவது குழந்தையைப் பெற்றெடுத்ததும், அவள் கணவர் வசுதேவர் குழந்தையைச் சுமந்துகொண்டு யமுனையைத் தாண்டி கோகுலத்துக்கு எடுத்துச் செல்கிறார். அங்கே யசோதையின் மகளையும், அதே இரவு பிறந்த மாடுகள் மேய்க்கிறவரின் தலைவனையும் எடுத்துக்கொண்டு திரும்புகிறார். யசோதை விழித்துக்கொண்டு கிருஷ்ணர் தன் கரங்களில் தவழ்வதைப் பார்க்கிறாள். அவன் தான் தன் மகன் என்று தீர்மானித்துக் கொண்டு, அவனை மாடு மேய்க்க வளர்க்கிறாள். கம்சன் அந்தப் பெண்குழந்தையைக் கொல்ல தேவகியின் கையிலிருந்து பிடுங்க முயல, அந்தக் குழந்தை அவன் கரங்களிலிருந்து நழுவி காற்றில் மேலேறி ஒரு கடவுளாக மாறி, அவனைக் கொல்லப்போகிறவன் இன்னும் பத்திரமாகத்தான் இருக்கிறான் என்று சொல்கிறாள். தன்னைக் கொல்வதற்காக ஏற்பட்ட விதியை மாற்ற முடியாதபோது, கம்சன் ஏமாற்றமும் கோபமும் கொள்கிறான்.




கிருஷ்ணர் வெண்ணெய் திருடும் மைசூர் ஓவியம்.




தென்னிந்திய சிற்பம்கிருஷ்ணர் ஆடைகளை அபகரிக்கிறார்.

தன் தந்தையின் செயல் காரணமாக, கிருஷ்ணருக்கு இரண்டு தாயார்கள் வாய்த்துவிடுகிறார்கள். அவனைப் பெற்றெடுத்த தேவகி மற்றும் அவனை வளர்த்தெடுக்கும் யசோதை. தேவகி மிகச் சிறந்த பெண்மணி. யசோதை பால் விற்கும் சாதாரணப் பெண்மணி. தேவகி பிறவியால் வரும் அத்தனை நல்ல குணங்களும் பொருந்தியவள். யசோதா வாழ்க்கையில் காணப்படும் குணங்களை பிரதிபலிப்பவள். எனவே கிருஷ்ணரின் தெய்வாம்சம் தேவகியின் ரத்தத்திலும், யசோதை ஊட்டிய பாலிலும் சேர்ந்து இயற்கையையும் வளர்ப்பையும் ஏற்றுக்கொண்டது.

நாம் எல்லோருமே நாம் எப்படிப் பிறந்தோம் எப்படி வளர்க்கப்பட்டோம் என்பதன் இணைப்புத்தான். நம்முடைய இயற்கையான வாழ்க்கை வர்ணத்தால் அறியப்பட்டாலும், கலாசார முறைப்படி சாதியால்தான் அறியப்படுகிறோம். வர்ணத்தால் கிருஷ்ணர் ஒரு கனவான், ஆனால் சாதி ரீதியாக மாடு மேய்ப்பவர். அவர் கனவானாக இருந்தாலும், அரசராக முடியாது. மாடுமேய்ப்பவராக இருப்பதால்

அவரால் தலைவராக இருக்க முடியும்.

பிறர் விஷயத்தில் நம்முடைய சுபாவம் நாம் எப்படிப் பார்க்கிறோம், பார்த்த அனுபவத்தை எப்படி உள்வாங்கிக்கொண்டு செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆனால் எல்லாவற்றையுமே பார்த்துவிட முடியாது. சாதியைப் பார்க்க முடியும். ஆனால் வர்ணத்தைப் பார்க்க முடியாது.

சுபாவத்தைப் பார்க்க முடியுமே தவிர, நம்பிக்கைகளைக் கண்டறிந்துகொண்டுவிட முடியாது. மாடு மேய்ப்பவர் போல உடை அணியலாம், அவர் மாதிரியே பேசலாம். ஆனால் அவர் மனத்தளவில் ஓர் அரசனாக இருக்கலாம். நாம் கண்களைத் திறந்து பார்க்கும் வரை நமக்கு இந்த சாத்தியக்கூறு தெரியாது.

கிருஷ்ணரைப் பற்றிச் சொல்லும் போது, பாலிலிருந்து கடைந்தெடுத்த வெண்ணெய் தான் காதலுக்கு அடையாளமாகக் காண்பிக்கப்படுகிறது. அவருடைய கிராமத்தில் இருந்த பால் விற்கும் பெண்மணிகள் கூரையில் மேலே வெண்ணெய்க் குடத்தைத் தொங்கவிட்டுவிடுவார்கள். யாராலும் எடுத்து விட முடியாது. அவை விற்பனைக்கு மட்டுமே. கிருஷ்ணர் அதற்கு எதிராகப் போராடி, அதை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்கிறார். எனவே, கண்ணில் குறும்பு வெளிப்பட, தன் தோழர்களின் தோள்கள் மீது ஏறி, மகிழ்ச்சியுடன் பானைகளை எடுத்து உடைத்து, வெண்ணெய் பெருக்கெடுத்து ஓடச்செய்கிறார்.


ஜீவாத்மாவான பெண்கள், கிருஷ்ணர் என்ற பரமாத்மாவுக்கு ஏங்குகின்றனர்.
வட்டம், இயற்கையான உணர்வுகளை உடனடியாக வெளிப்படுத்துவதாக இருக்கிறது.
கிருஷ்ணர் தன்னை பல உருவங்களாகப் பெருக்கிக்கொள்கிறார், எல்லோரும் அவரோடு இருக்க.

மஹா ராஸ் ஓவியம்.

கிருஷ்ணர் வளர்ந்தவுடன், காதலின் அடையாளம் மாறிவிடுகிறது. பானைகள் உடைக்கப்படுவதில்லை. மாறாகத் ஆடைகள் திருடப்படுகின்றன. யமுனையில் குளித்துக்கொண்டிருக்கும் கோபிகைகளுக்கு தர்மசங்கடமாகிவிடுகிறது. அடையாளங்கள் இப்போது மாறுகின்றன. ஆடைகள் பொது முகங்களாகிவிடுகின்றன. கிருஷ்ணர் உணர்ச்சி மிகுந்த இதயங்கள் எல்லாம் இந்தப் பொதுவான முகங்களின் பின்னே ஒளிந்துகொண்டுவிடுவதைப் பார்க்கிறார். இதயம் என்பது உணர்ச்சி மயமானது. அது அன்பைக் கொடுத்துத் திரும்பப் பெறுவது.

இதயங்கள் தடுத்தாலும், நாக்குகள் புகார் செய்கின்றன.' எங்கள் வெண்ணெயைத் திருடாதே, கிருஷ்ணா. எங்கள் ஆடைகளைத் திருடாதே, கிருஷ்ணா.' காதலுடன் எவரும் சுதந்திரமாக இருக்க விரும்புவதில்லை. எவர் ஒருவரும் இதயத்தைத் திறந்து காட்டிவிடத் தயாரில்லை. எல்லோரும் யசோதையின் இல்லத்துக்குச் சென்று கிருஷ்ணரைக் கண்டித்து வையுங்கள் என்கிறார்கள்.

யசோதை கிருஷ்ணரைத் தடுக்க முயல்கிறாள். ஆனால் தோற்றுவிடுகிறாள். அவரை ஒரு பீப்பாயில் கட்டி, வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிடுகிறாள். ஆனால் கிருஷ்ணரோ வெண்ணெய் திருடுபவராகவும், இதயத்தைத் திருடுபவராகவும் இருக்கிறார். எல்லா பாதுகாப்புகளும் தளர்ந்துவிடும்வரை, பானைகள் எல்லாம் உடையும் வரை ஆடைகள் கிடையாது, அன்புக்குக் குறைச்சல் இல்லாமல், வெண்ணெயாக உருகும் இதயத்துக்கு ஒரு திறந்த அழைப்பு விடுக்கிறார்.

இதயம் திறந்தவுடன், காதல் அதனுள் பாய்ந்து வெளிப்படும்போது, பாதுகாப்பு தேவைப்படுகிறது. பாதுகாப்புடன் வருகிறது சுதந்திரம். எதற்கும் பாசாங்கு செய்யத் தேவையே இல்லை. நாம் நாமாக இருப்போம். நம் எண்ணத்தைப் பிறர் மீது திணிக்கும் ஆசை எதுவும் இல்லை. நாம் எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறோம். அணைத்துக்கொள்கிறோம். ஏனென்றால் நாம் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அணைத்துக்கொள்ளப்படுகிறோம்.

விளைவு? மதுவன் எனப்படும் யமுனைக் கரைப் பூந்தோட்டத்தில் மஹா ராஸ லீலை.



நாரையை அடக்கும் கிருஷ்ணர்-கேரள ஓவியம்.



காளியன் நாகத்தை அடக்கும் கிருஷ்ணர்-ஒரிசா ஓவியம்



கிருஷ்ணர் பூதனையைக் கொல்கிறார்-மைசூர் ஓவியம்



கிருஷ்ணர் கம்சனைத் தாக்குவது-ஓவியம்

மஹா ராஸ லீலையில், கிருஷ்ணர் புல்லாங்குழல் ஊத, சுற்றிலும் கோபியர் சூழ்ந்திருக்க, அது உடனடியாக நிகழ்த்தப்படும் நிகழ்வாக மாறுகிறது.

கோபியரின் இருந்த எந்த முன் உறவும் கிருஷ்ணரின் அன்பைச் செலுத்தத் தூண்டுவதில்லை. சமூகக் கட்டுப்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல், எளிமையான, அப்பாவித்தனமான, எந்தவித உள்நோக்கமும் இல்லாமல், வெறும் உணர்ச்சிகளால் மட்டுமே இது நடக்கிறது. அதனால்தான் இது வட்டவடிவில், இயற்கையான வடிவத்தில் நடக்கிறது. கடவுள் நடுவேயிருக்க, சுற்றிலும் பக்தர்கள் வட்டமாக நிற்க, எந்த நிபந்தனையுமற்ற, பரஸ்பரம் அன்பைப் பரிமாறிக்கொள்கிறார்கள்.

கோபிகைகள் எந்த நிபந்தனையுமில்லாமல் கிருஷ்ணரிடம் அன்பு செலுத்தும்போது, அவர் தன்னைப் பலராகப் பெருக்கிக்கொண்டு, அவர்கள்

ஒவ்வொருவருடனும் நடனமாடுகிறார். அவர்கள் ஒவ்வொருவரையும் நேசிப்பது போல அவர்களை முழுதுமாகத் திருப்தியடையச் செய்கிறார்.

ஆனால் அவர்கள் தன் மீது உரிமை கொண்டாடுவது போல், வேறொருவருடன் அவரைப் பகிர்ந்துகொள்ளாத போது, கிருஷ்ணர் மாயமாய் மறைந்து அவர்களைப் பீதியடையச் செய்துவிடுகிறார். அவர்களுக்கு உண்மை புரிந்து, அவர்கள் மன்னிக்கக் கோரும்போது கிருஷ்ணர் மதுவனத்துக்குத் திரும்பி, தன் அன்பு நடனத்தைத் தொடங்குகிறார்.

மஹா ராஸ் லீலை கிராமத்துக்கு வெளியே, இரவில், பரிச்சயமான இடத்தில் அல்லாமல், காட்டில் நடை பெறுகிறது. இருந்தாலும், அந்தப் பெண்கள் பாதுகாப்பாக இருப்பதாகவே உணர்கிறார்கள். அவர்கள் காட்டு தர்பார் பற்றிக் கவலைப்படுவதில்லை. கிருஷ்ணர் மீது நம்பிக்கை இருப்பதால், அவர்களுக்கு எந்தவித பயமும் இல்லை. காட்டின் நடுவே, கிருஷ்ணர் புல்லாங்குழல் ஊதும்போது, அன்புதான் மேலோங்கி இருக்கிறது. கட்டாயம் அல்ல. பலகீனமானவர்கள், எதற்கும் தகுதியற்றவர்கள்கூட எந்தவித அச்சமும் கொள்வதில்லை. அவர்கள் பாடுவார்கள், நடனமாடுவார்கள், மகிழ்ச்சியான கோலாகலக் கொண்டாட்டத்தில் திளைத்திருப்பார்கள்.


மாடுகளோ, கோபியரோ இல்லாத போதும் ராஞ்சோட் கிருஷ்ணரை மாடு மேய்க்கும் கிருஷ்ணராக வணங்குகிறார்கள்.
போர்க்களத்திலிருந்து விலகியும் கிருஷ்ணருக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள், திரும்பச் செல்வதைவிட, மரணத்தை விரும்பிய ராஜபுதனர்களும் போர்வீரர்களும் நிறைந்த இடத்தில்.
விஷ்ணுவின் சங்கும் சக்ரமும் ஏந்திய கிருஷ்ணர்.

துவாரகையில் ராஞ்சோட்ஜி கிருஷ்ணர் ஓவியம்.

ஆனால் கிருஷ்ணரின் வசிப்பிடம் வனம் அல்ல. முதலில் அவர் கோகுலத்தில் கிராமத்தில் வசிக்கிறார். பின்னர் அவர் பெற்றோர் பிருந்தாவனத்துக்குச் சென்று விடுகிறார்கள். காரணம் கோகுலம் பாதுகாப்பற்றதாக இருக்கிறது. இந்த கிராமங்கள் எல்லாம் வீட்டில் வசிப்பதற்கு ஏற்றவை. ஆனால் வீட்டில் வசித்தாலும் வன்முறை, கொடூரங்கள் போன்றவற்றால் அச்சுறுத்தல்கள் இருந்துகொண்டே இருக்கும்.

தன் சிறுவயதில் கிருஷ்ணர் பல முறை அச்சுறுத்தப் பட்டிருக்கிறார். பூதனை விஷப் பால் ஊட்டிக் கொல்லப்பார்க்கிறாள். புயல் காற்றால் தாக்கப்படுகிறார். காட்டுத் தீ கொட்டும் மழை என பல பயமுறுத்தல்கள். மிருகங்களால் அச்சுறுத்தப்படுகிறார். முரட்டுக் குதிரை, பசுங்கன்று, ஆவேசமான காளை மாடு, கொடிய மலைப்பாம்பு, பறவை மற்றும் கழுதை என்று தொடர்ந்து அவரைத் தாக்க வருகின்றன. வீதியில் சக்கரம் சுழன்று வந்து தாக்க வருகிறது. இவற்றிடமிருந்து தன்னைக் காத்து, இந்த அச்சுறுத்தல்களிலிருந்து கிராம மக்களையும் காத்த பின் கிருஷ்ணரே வன்முறையாளனாகிறார். அந்த அசுரர்கள் எல்லாரும் கொல்லப்பட்டுவிடுகிறார்கள், அல்லது ஓட ஓட விரட்டப்படுகிறார்கள். காட்டு மிருகங்கள் அடங்கிப்போய்விடுகின்றன. காட்டுத் தீ விழுங்கப்படுகிறது. கொட்டும் மழையிலிருந்து கிராம மக்களைக் காக்க மலையைத் தூக்கிப் பிடிக்கிறார்.

மனிதகுலம் உயிர் வாழ, கிருஷ்ணர் அந்த வன்முறைகளை ஏற்கிறார். வன்முறையைத் தவிர, அதற்குப் பின் இருக்கும் எண்ணம்தான் முக்கியம். கம்சனுக்கு ஆபத்து என்பதால் அசுரர்கள் அவனைக் கொல்ல முயலுகிறார்கள். அவர்கள் வன்முறைக்குக் காரணம், கம்சனின் அச்சமும், விதியை ஏற்காததும்தான். அந்த வன்முறை அதர்மமானது. கிருஷ்ணரின் வன்முறை பாதுகாப்புக்கு வாழ்ந்தாக வேண்டும் என்ற தேவையை அடிப்படையாகக் கொண்டது. யாரையும் அவர் காயப்படுத்தவோ, காரியம் சாதிக்கவோ விரும்பவில்லை.

எனவே அவருடைய வன்முறை தர்மத்தைச் சேர்ந்தது.




கிருஷ்ணரின் திருமணம்-கேரள சுவர் ஓவியம்




மைசூர் ஓவியம்-கிருஷ்ணர் தம் ஏராளமான மனைவியருடன்.

அசுரர்களைக் கொன்று, மிருகங்களை அடக்கி, சுண்டுவிரலில் மலையைக் குடையாகப் பிடித்து, பிருந்தாவனத்தில் இருக்கும் இந்த வித்தியாசமான மாட்டுக்காரச் சிறுவனைப் பற்றிக் கேள்விப்பட்டு கம்சன், தன்னைக் கொல்லப் போகிற மருமான் இவன் தான் என்று தீர்மானித்துவிடுகிறான். தன் விதியை மாற்றவும், அவரைக் கொல்லவும் திட்டமிட்டு, மதுரா நகரில் அவரை மல்யுத்தப் போட்டிக்கு அழைத்து, அரண்மனையிலிருந்து தேரை அனுப்பிவைக்கிறான் கம்சன்.

ஆனால் திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை. மதுரா மல்யுத்தவீரனை இந்தக் கவர்ச்சிகரமான கிருஷ்ணர் வீழ்த்திவிடுகிறார். அரண்மனை யானையைக் கொன்றுவிடுகிறார். அரசகுலத்து வில்லை உடைக்கிறார். இறுதியில் அந்தக் கொடூரமான மன்னனைக் கொன்று யாதவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமாகிறார்.

கம்சனைக் கொல்வது என்பது தனித்தன்மையானது. ஏனென்றால், ஹிந்து புராணத்தில், தந்தை ஸ்தானத்தில்

இருப்பவர் ஒருவர் கொல்லப்படுவது அபூர்வமானது. தசரதருக்குக் கீழ்ப்படியும் ராமர் போல் அல்லாது, யயாதிக்கு அடிபணியும் யது போல் அல்லாது, கிருஷ்ணர் கம்சனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார். மூத்த தலைமுறையின் கொடூரங்களுக்கு அடிபணிய மறுக்கும் இளைய தலை முறையை இந்தக் கதை எடுத்துச் சொல்கிறது. இது கிருஷ்ணரை ஒரு புரட்சிக் கதாநாயகனாக ஹிந்து ஆன்மிக வரலாற்றில் காண்பிக்கிறது.

பிருந்தாவனத்திலிருந்து மதுராவுக்கு அரண்மனைத் தேர் புறப்படும்போது, கிருஷ்ணர் இனி திரும்பி வரவே மாட்டார் என்று கோபிகைகள் நினைத்தார்கள். மல்யுத்தம் முடிந்ததும் திரும்பி வந்துவிடுவதாக கிருஷ்ணர் அவர்களிடம் வாக்குறுதி அளித்திருந்தாராம். ஆனால் கம்சனைக் கொன்ற பின்னர் கிருஷ்ணரின் உண்மை சொரூபம் வெளிப்பட்டது. அவர் தேவகியின் மகன். யசோதையின் மகனல்ல. அவர் யாதவ குலத்தவான். சாதாரண மாட்டுக்காரச் சிறுவன் அல்ல. விதி அவருக்கு வேறு வேலை வைத்திருந்தது என்பதால் அவர் காத்திருக்க வேண்டும். அவர் மீண்டும் பாலும் வெண்ணெயும் வழிந்தோடும், மாடுகளும் கோபிகைகளும் நிறைந்த, கோலாகலமான நிலத்துக்குத் திரும்பிச் செல்ல முடியாது. அவர் அரசர்களுடன் மோத வேண்டிய நேரம் வந்துவிட்டது.


சஹதேவன் அறிவின் பிரதிநிதி.
திரௌபதி ஒரு பூசாரியை மணக்கிறாள்; அவர் அர்ஜுனன் என்ற அரசகுமாரர் மாறுவேடத்தில் இருக்கிறார். தாயின் ஆணைப்படி, மற்ற நால்வருடன் அவளைப் பகிர்ந்துகொள்கிறார்.
தேரோட்டி வளர்த்ததால், திரௌபதி கர்ணனை மணக்க மறுக்கிறாள். மாடு மேய்ப்பவர்கள் வளர்த்ததால், கிருஷ்ணரை மணக்கவும் அவள் உரிமை இழக்கிறாள்.
நகுலன் அழகின் பிரதிநிதி.
யுதிஷ்டிரர் நேர்மையின் பிரதிநிதி.
பீமன் பலத்தின் பிரதிநிதி.
அர்ஜுனன் திறமையின் பிரதிநிதி.

கம்சனின் மரணத்துக்குப் பழி வாங்க, அவன் மாமனார் ஜராசந்தன், மதுரா நகரைத் தாக்குகிறான். அதைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்துவிடுகிறான். இறுதிவரை போராடுவதைவிட, கிருஷ்ணர் போர்க்களத்திலிருந்து திரும்பி, யாதவர்களை மேற்கு நோக்கி துவாரகா தீவுக்குப் பத்திரமாக அழைத்துச் செல்கிறார். அங்கே ஜராசந்தனின் செல்வாக்கு செல்லுபடியாகாது. பொதுவாக, போர்வீரர்கள் புத்திசாலித்தனத்தைவிட போரிடுவதையே விரும்புவார்கள் என்பதால், இங்கேயும் கிருஷ்ணர் வேறுவகையில் சிந்திக்கும் கதாநாயகனாகத் திகழ்கிறார். போர்க்களத்திலிருந்து ஓடிய போர்வீரன் என்ற பெயர் எடுக்கிறார். இருந்தாலும், கிருஷ்ணர் இன்னொரு நாள், இன்னொரு போரைச் சந்தித்தாக வேண்டும்.

பிருந்தாவனத்தில் உள்ள எல்லா கோபிகைகளிலும், ஒருத்தி மட்டும் கிருஷ்ணருக்கு வெகு நெருக்கமானவளாகக் கருதப்படுகிறாள். அவள்தான் ராதா. யசோதையின் சகோதரரின் மனைவி ராதை என்று சொல்லப்படுகிறது. அவள் கிருஷ்ணரைவிட மூத்தவள். வழக்கத்துக்கும், சட்டதிட்டங்களுக்கும் மீறிய பந்தம் இது. அவர்களுடைய புனிதமான காதல், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாதது. பழக்க வழக்கங்களுக்கு அப்பாற்பட்டது.

அதில் இசை இருந்தது. அதனால்தான் கிருஷ்ணர் புல்லாங்குழல் வாசித்து மகிழ்வித்தார்.

ஆனால் கிருஷ்ணர் பிருந்தாவனத்தைவிட்டுவிட்டுச் செல்லும்போது, அவர் பழக்க-வழக்கங்கள், சட்ட-திட்டங்கள் நிறைந்த ஓர் உலகத்தில் நுழைகிறார். அங்கே எந்த உறவும் புனிதமானதல்ல என்பதோடு, எதிர்பார்ப்புகள் நிறைந்தது. திடீரென்று இசை நின்று போகிறது. தன் புல்லாங்குழலை விட்டுவிட்டு, சங்கை எடுத்துப் போர்க்களத்தில் ஊதுவது போல் ஊதுகிறார். பல பெண்களை மணக்கிறார். காதலுக்காக அல்ல, கடமைக்காக.

தனக்கு விருப்பமே இல்லாத ஒரு கல்யாணம் விதர்ப்ப நாட்டு இளவரசி ருக்மிணி மீது வலுக்கட்டாயமாகத்

திணிக்கப்படும்போது, அவளைக் கவர்ந்து சென்று திருமணம் செய்துகொள்கிறார். சத்யபாமாவின் மாமனிடமிருந்து, குடும்பத்தின் மதிப்பு மிக்க ஆபரணமான சியமந்தகத்தைக் கைப்பற்றியவுடன், அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கு சத்யபாமா தரப்படும்போது, அவளை மணக்கிறார். எட்டு முக்கியமான அரசிகள், பின்னர் 16,100க்கும் மேற்பட்ட இளைய மனைவிகள் தவிர, நரகாசுரன் அந்தப்புரத்தில் அடைத்துவைத்திருந்த பெண்களை அவனை வதம் செய்த பிறகு மீட்டு, அவனை நாடிவந்த பெண்கள் என்று கிருஷ்ணரின் பாதுகாப்பில் ஏராளமான பெண்கள் இருந்தார்கள்.


பார்வையற்ற அரசன்.
மௌனமாக இருக்கும் மூத்தவர்கள்.
அவிழ்ந்த முடி கட்டுப்பாட்டை இழந்த கலாசாரத்தைக் குறிக்கிறது.
வழியில்லாத கணவர்கள் அவளைப் பணயம் வைத்து இழக்கிறார்கள்.

கவுரவர்கள் திரௌபதியின் ஆடையைக் களைய முற்படும்போது, கிருஷ்ணர் அவளுக்கு ஆடை அளிக்கிறார்-ஒரு நவீன ஓவியம்.

இந்தப் பெண்கள் எல்லோருக்கும் கிருஷ்ணர் நல்ல கணவராக இருந்தார். அவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல தந்தையாக இருந்தார். தன்னைப் பெருக்கிக்கொண்டு, ஒவ்வொரு மனைவியையும் திருப்திப்படுத்துவதில் ஈடுபடும்போது, எந்த மனைவியும் தான் அலட்சியப்படுத்தப்பட்டதாகவோ விடுபட்டு விடப்பட்டதாகவோ நினைக்க முடியாது. ஆனால் ராதாவின் விழிகளில் இருக்கும் ஆர்வத்தை அவர் இந்த மனைவிகளிடம் காணவில்லை. வனத்தில் கோபிகைகள் தன்னைச் சுற்றி ஆடியதைப் போல இவர்கள் ஆடவுமில்லை. இந்த உறவு, ராமர் சீதையுடன் கொண்டிருந்த உறவைப் போன்றது. முறையானது. வழக்கத்தின்படி அமைந்தது. ஆர்வத்தைவிட, மதிப்பைக் காட்டும் வகையைச் சேர்ந்தது.

தன் தாய்மாமன் கம்சனிடமிருந்து கிருஷ்ணருக்கு எந்தவித அன்பும் கிடைக்கவில்லை. ஆனால் அதே கதி தன் ஒன்றுவிட்ட சகோதரர்களான பாண்டவர்களுக்கு நேர்ந்துவிடாமல், தன் தந்தையான வசுதேவரிடமிருந்து பெறச் செய்கிறார்.

பார்வையற்ற பெரியப்பா திருதிராஷ்டிரரும் அவரது நூறு குழந்தைகளான கௌரவர்களும் சொத்தை மறுத்துவிடவே, தன் அத்தை குந்த்தியும் அவள் மகன்களும், அதனால் வறுமையில் வாடிக்கொண்டிருக்கும்போது, கிருஷ்ணர் அங்கே செல்கிறார். பாண்டவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சாதகமாக இருப்பது அவர்களுக்குப் பொதுவாக பாஞ்சால தேசத்து இளவரசி திரௌபதி மனைவியாக அமைந்ததுதான். திரௌபதி வேறு யாருமல்ல, லக்ஷ்மியேதான்.


ஐந்து கிராமங்கள் கொடுத்தால் போதும் என்று அமைதி தூது போன கிருஷ்ணர் சொல்கிறார்.
ஓர் ஊசிமுனை நிலம்கூடத் தரமுடியாது என்கிறான் துரியோதனன்.

கவுரவர்களிடம் அமைதிப் பேச்சு நடத்தும் கிருஷ்ணர்-முகலாய ஓவியம்.

விஷ்ணு பரசுராமராக இருக்கையில் லக்ஷ்மி அவருடைய தந்தையின் பசுவாக இருக்கிறாள். இன்னொரு வகையில் சொல்வதானால், அவள் அவருக்கு உணவளிக்கும் தாய். விஷ்ணு ராமராக இருந்தபோது, லக்ஷ்மி சீதையாக, அவருடைய விசுவாசமான மனைவியாக, அவருடன் எல்லா சமயங்களிலும் கூடவே இருக்கிறாள். விஷ்ணு கிருஷ்ணராக இருக்கையில், திரௌபதி வடிவத்தை எடுத்துக்கொள்கிறாள், தாயாராகவோ, மனைவி யாகவோ அல்ல. ரத்த உறவோ, திருமண உறவோ அல்லாத தூரத்து உறவாக. ராதாவைப் போலவே திரௌபதி கிருஷ்ணருக்காக அக்கறை எடுத்துக் கொள்கிறாள். அதனால்தான் அவசியம் இல்லை என்கிறபோதும் கிருஷ்ணர் எப்போதும் அவளைக் கவனித்துக்கொள்கிறார்.

திரௌபதியை மனைவியாகவும், கிருஷ்ணரை சிநேகிதராகவும் கொண்ட பாண்டவர்கள், தங்கள் பெரியப்பாவிடம் குடும்பத்து சொத்தில் பாதியைத் தருமாறு கேட்கிறார்கள். விவாதங்களுக்குப் பின்னர், அவர்களுக்கு காண்டவப்ரஸ்தா என்ற வனப் பிரதேசம் கொடுக்கப்படுகிறது. கிருஷ்ணரின் உதவியோடு அவர்கள் அதை இந்த்ரப்ரஸ்தம் என்ற அழகான ராஜ்யமாக மாற்றிவிடுகிறார்கள்.

கிருஷ்ணர் உடன் இருந்ததால், பாண்டவர்கள் ஒரு வலுவான சக்தியாக மாறுகிறார்கள். மிகவும் பலம் பொருந்திய பீமன், மதுராவை அழித்த ஜராசந்தனைப் போரிட்டுக் கொன்றுவிடுகிறான். பாண்டவர்களில் மூத்த யுதிஷ்டிரர் தன்னை யாருக்கும் அடிபணியாத அரசனாக அறிவிக்கிறார்.

துரதிர்ஷ்டவசமாக, வெற்றி காரணமாகப் பாண்டவர்களிடம் கர்வம் சேர்ந்துவிடுகிறது. கிருஷ்ணர் அங்கே இல்லாதபோது, கௌரவர்கள் விடுக்கும் சூதாட்ட அழைப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அங்கே போய் எல்லாவற்றையும்-பொன்னையும் பொருளையும் பசுக்களையும் மட்டுமல்ல, புதிதாகக் கிடைத்த ஆட்சியையும், நாட்டையும், ஏன், தங்கள் மனைவியையும்

இழக்கிறார்கள்.

இந்த சூதாட்ட விளையாட்டு, கலாசாரத்தை ஒரு சொத்தாக எண்ணிச் செயல்பட்டதால் விளைந்த தர்மத்தின் அழிவைக் காண்பிக்கிறது. ஏன் தர்மம் விதிக்கப்பட்டது, ஆட்சி நிறுவப்பட்டது என்பதை எல்லாம் மறந்துவிடுகிறார்கள். வாழ்வாதாரத்துக்குத் தேவையான கூடுதலான பொருள்களைச் சேர்க்கவும், வாழ்வுக்கு அர்த்தம் காணவும்தான் தர்மம் இருக்கிறது என்பதை நினைப்பதில்லை.




போருக்கு முன் அர்ஜூனன்-ஒரு நவீன ஓவியம்.




போரின்போது அர்ஜுனன்-மைசூர் ஓவியம்.

பாண்டவர்கள் சூதாட்டத்தில் எல்லாவற்றையும் இழந்து கொண்டிருந்தபோது, அருகில் கிருஷ்ணர் இல்லை என்பது ஆன்மிக விழிப்புணர்வு அவர்களிடம் இல்லாததைக் காட்டுகிறது. அவர்கள் லக்ஷ்மியை இழந்த தேவர்களைப் போல் ஆகிவிடுகிறார்கள்.

பாண்டவர்களிடமிருந்து எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டுவிட்ட பின்னர், அசுரர்களைப் போல, தங்களை யாராலும் அசைக்க முடியாத என்ற அகந்தையோடு இருக்கிறார்கள். கதியற்றவர்களை அரசர்கள் காப்பதை விட்டுவிட்டு, அரக்கரகளைப் போல அவர்கள் அந்தச் சமயத்தில் நடந்து கொள்கிறார்கள்.

ஐந்து கணவன்மார்களாலும் பணயம் வைக்கப்பட்டு இழந்த திரௌபதியை, ஒரு கௌரவ அடிமை அவள் தலைமுடியைப் பற்றி இழுத்துக்கொண்டு சபைக்கு வந்து பொதுமக்கள் பார்க்க அவள் ஆடைகளைக் களைகிறான். அவள் நியாயம் கேட்கிறாள். விட்டுவிடும்படி கேட்கிறாள்.

ஆனால் யாரும் அவள் உதவிக்கு வருவதில்லை. பயத்தில் உறைந்துபோன திரௌபதி கதறுகையில், தர்மத்தின் ஆன்மா முற்றிலுமாக மறக்கப்படுகிறது. வேறு வழியின்றிக் கையை உயர்த்திவிடுகிறாள்.

இங்கேதான் கிருஷ்ணர் தம் தெய்வீகத் தன்மையைக் காண்பிக்கிறார். மாயா ஜாலம் போல, திரௌபதி மீதிருந்து எடுக்கப்பட்ட ஒவ்வோர் ஆடைக்கும் பதிலாக வேறோர் ஆடையை அளித்துக்கொண்டே வருகிறார். அரசர்கள் தங்கள் தர்மப்படி பசுவைக் காக்காமல் இருந்தது போல அல்லாமல், விஷ்ணு மாட்டுக்கார கோவிந்தனாக மாறி திரௌபதியைக் காப்பாற்றுகிறார். இனி பூமியில் அப்படிப்பட்ட அரசர்கள் இல்லாமல் போக வேண்டும் என்று வாக்குறுதி கொடுத்து, திரௌபதியின் கண்ணீரை, அவர்கள் ரத்தத்தால் துடைப்பதாகக் கூறுகிறார்.

ஓர் ஒப்பந்தம் ஏற்படுகிறது. பாண்டவர்களும் அவர்களின் மனைவியும் பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் காட்டில் வசிக்க வேண்டும்; அதற்கு அடுத்த ஆண்டு யார் கண்ணிலும் படாதவாறு வாழ வேண்டும். இறுதியில் யாராலும் அவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்துவிட்டால், அவர்களுக்கு ஆட்சி திரும்பக் கிடைத்துவிடும். இழந்த நாடும் திரும்பக் கிடைத்துவிடும்.


அம்புப் படுக்கையில் பீஷ்மர்.
துரியோதனன்- பீமன் இடையே கதை யுத்தம்.


கர்ணனும் அர்ஜுனனும் பரஸ்பரம் அம்பு எய்கிறார்கள்.
துரோணர் கவுரவர்களைத் தலைமை தாங்கி அழைத்துச் செல்கையில் பீமன் மகன் கடோத்கஜன் கொல்லப்படுகிறான்.


துரோணர் அமைத்த சக்ரவியூகத்தில் சிக்கிக்கொண்ட அபிமன்யு.

'அவர்களிடம் போரிட்டு, ஏன் நாம் நமக்கு உரிமையானதை இப்போதே எடுத்துக் கொள்ளக்கூடாது? எதற்காகப் பதின்மூன்று வருடங்கள் அவமானத்தைச் சகித்துக்கொண்டிருக்க வேண்டும்?' என்று பாண்டவர்கள் கேட்கின்றனர். 'நீங்கள் வாக்குக் கொடுத்துவிட்டீர்கள். இதன் மூலம்தான் நீங்கள் சூதாட்டத்தில் இழந்த நாட்டைத் திரும்பப்பெற முடியும்' என்கிறார் கிருஷ்ணர்.

பதின்மூன்று ஆண்டுகள் பாண்டவர்கள் வனவாசம் செய்கிறார்கள். இந்தக் காலத்தில், அவர்களின் குழந்தைகள் கிருஷ்ணருடன் வசிக்கின்றன.

இப்படிப்பட்ட இக்கட்டான சமயங்களில்தான் சரசுவதி பாண்டவர்களிடம் திரும்ப வருகிறாள். சகோதரர் ஒவ்வொருவரும் தங்கள் தவறையும், குறைகளையும் ஒப்புக்கொண்டு, வலுவான மனிதர்களாக ஆகிறார்கள். அவர்கள் முனிவர்களைச் சந்தித்து, ஆட்சி நடத்துவது என்றால் என்ன என்றும், பொருளைப் பாதுகாப்பது எப்படி என்றும், ஏன் ஒருவர் ஆன்மிக முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்றும் அறிந்துகொள்கிறார்கள்.

வனவாசத்தின்போது, குறிப்பாகக் கடைசி ஆண்டு, விராட மன்னனின் சபையில் சேவகர்களாக இருந்து, ஆட்சிக்குத் தகுதியானவர்களாகத் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பதின்மூன்று வருடங்கள் வனவாசம் செய்த பிறகு, பாண்டவர்கள் புனிதமானவர்களாகிவிட்டாலும், கௌரவர்கள் முன்பு போலவே கொடூரமானவர்களாக இருந்ததால், தங்கள் வாக்கைக் காக்க முன்வராமல் இருக்கிறார்கள். ஒரு சமாதானத்துக்குக்கூட வருவதில்லை. 'குறைந்தபட்சம் அவர்கள் அமைதி அடைய, அவர்களுக்கு ஐந்து கிராமங்களையாவது கொடுங்கள்' என்று வாதாடுகிறார் கிருஷ்ணர். கௌரவர்களில் மூத்த துரியோதனன், ஓர் ஊசிமுனை அளவுகூட நிலம் தர மறுக்கிறான். இப்போதுதான் கிருஷ்ணர் பாண்டவர்களிடம் கௌரவர்களோடு போரிட அறிவிக்குமாறு சொல்கிறார்.

இந்தப் போர் சொத்துக்காக அல்ல. இது தர்மம் சார்ந்த போர். மிருக குணத்திலிருந்து விடுபட்டு, பங்கு போட்டுக்கொண்டு பரிபாலிக்கும் மனிதகுல சாத்தியக்கூறு வெளிப்படவே இந்தப் போர். கௌரவர்களோ தங்கள் சொத்தைத் தங்கள் சகோதரர்களுடன் பங்கு போட்டுக் கொள்ள மறுத்துவிடுகிறார்கள். அவர்கள் கொடுத்த வாக்கை மீறி, மக்களின் சொத்தை வலுக்கட்டாயமாகப் பறித்துக்கொள்ளப் பார்த்தார்கள். இம்மாதிரி மன்னர்களை இந்த பூமி தாங்காது. அவர்களைக் கொல்லத்தான் வேண்டும்.


கோடாலி புருஷத்துக்கும் பிரகிருதிக்கும் இடையே உள்ள பிரிவைக் காட்டுகிறது. அதாவது மனித சிந்தனைக்கும் இயற்கைக்கும். மனிதர்கள் மிருகங்கள் அல்ல. அச்சத்தால் வளரும் மிருக சிந்தனைகளை அடக்கி அவர்கள் தர்மத்தை நிறுவலாம்.
வில் என்பது நிதானமான சமநிலையைக் குறிக்கிறது.
பீமன், துரோணர் மற்றும் கர்ணனுக்கு பரசுராமர் பயிற்சி அளிக்கிறார்; ஆனால் அவர்கள் மூவரும் தோற்கிறார்கள்.

விஷ்ணுவின் அவதாரமான போர்வீரர்-குரு: கேரள சுவர் ஓவியம்.

மஹா ராஸ லீலை போல, குருக்ஷேத்ரப் போர் சாதாரணமானதல்ல. இரண்டும் வெவ்வேறு விதம். முன்னதில் தெரியும் காதலும், பின்னதில் இருக்கும் வன்முறையும் காதலைச் சேர்ந்ததும் அல்ல, வன்முறையைச் சேர்ந்ததும் அல்ல. முன்னதில் காதல் உள்ளடக்கமாகத் தெரிந்தாலும், அதில் உடல் சார்ந்த ஆசை எதுவுமில்லை. அது புனிதமான காதல். அந்தக் காட்டில் இரவு முழுக்க, ஓர் அழகான தெய்வீக ஆண்மகனுடன் திருமணமான பெண்கள்கூடப் பாதுகாப்பாக ஆடிப் பாடி மகிழ முடியும். அதே போல, குருக்ஷேத்ரத்தில் சிந்தப்படும் ரத்தம் சொத்துக்காகவோ, பழி தீர்க்கவோ அல்ல. பூதாகாரமாக உருவெடுக்கும் மிருக குணத்தை அடக்கி, மனிதகுல நலனை மீண்டும் நிலை நாட்டத்தான்.

கிருஷ்ணர் இந்தப்போரில் போரிடவில்லை. அவர் தேரோட்டியாகவும் வழிகாட்டியாகவும் மட்டுமே செயல்படுகிறார். அவர் ஊக்குவிக்கத்தான் முடியும். செயல்படுவது பாண்டவர்களிடம் விடப்பட்டுவிட்டது. இது அவர்கள் போர். அவர்கள் செயல், அவர்கள் முடிவு. போர் தொடங்குமுன் அவர் செய்வது, இது சொத்துக்கான போர் அல்ல, பழிவாங்கும் நடவடிக்கை அல்ல என்று அவர்களுக்கு நினைவுபடுத்தத்தான். தர்மத்தை நிலைனாட்டுவதுதான். தர்மம் என்பது பகிர்ந்து கொள்வது. கொடுப்பதுதான், எடுத்துக்கொள்வது அல்ல. இந்தப் போர் என்பது நிதர்சனமானது. அப்படி இல்லாமல் போனால் அது வெற்றிகரமானதாக இருக்காது. சொத்துக்காகவே என்பதால், பேராசை, பொறாமை, சினம் மற்றும் வெறுப்பு இவையெல்லாம் எங்கிருந்து வருகின்றன என்பதை அடையாளம் காண வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பயந்து போன ஒரு மிருகம் உள்ளது. வாழ வேண்டும் என்ற துடிப்பையும், முக்கியத்துவத்தையும் தேடும் உணர்வையும், இந்த மிருக உணர்வைத் தோற்கடித்து, மற்றவர்களுடன் கருணை காட்ட வேண்டும் என்பதையும் காண்பிக்கிறது. இப்படி மிருக உணர்வை அடக்கி வெல்லும்போதுதான் கடவுளைக் காண முடியும்.

போர் துவங்கும் முன் செய்யப்படும் இந்த உரைதான் பகவத் கீதை என்று சொல்லப்படுகிறது.


சினமடைந்த பீமன் துச்சாதனனின் தொடை பிளந்து ரத்தம் குடிக்கிறான்.


பீமனும் துரியோதனனும் தங்கள் கதாயுதத்தை உயர்த்தி இறுதிப் போருக்குத் தயாராகிறார்கள்.

கௌரவர்களின் சேனையை முதலில் பீஷ்ம பிதாமகர்தான் முன்னிருந்து நடத்துகிறார். அவர்தான் பாண்டவர்களும் தந்தை ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுபவர். அவர் ஆசிரம தர்மத்தைக் கடைப்பிடிக்காததால், அவரைக் கொல்லுமாறு கிருஷ்ணர் பணிக்கிறார். யயாதியின் மகன் புருவைப் போலவே, வயதான தன் தந்தை சந்தனுவுக்காக, அவர் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதற்காக, உடலுறவைத் துறந்து விடுகிறான். திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும், ஒரு குடும்பத்தலைவராக, தன் பேரன்களுக்கு நிகரான மருமான்களை அக்கறையோடு வளர்க்கிறார் பீஷ்மர். பாண்டவர்களும் கௌரவர்களுமான அவர்கள், தங்களைக் கவனித்துக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்த பின்னரும், அவர்கள் மீது கூடுதலாக அக்கறை செலுத்திக்கொண்டே, உலக வாழ்க்கை தொடர்பான விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி வருகிறார்.

தன் மரணத்துக்கான நேரத்தை பீஷ்மரே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற சக்தியைப் பெற்றிருப்பதால், பீஷ்மரைக் கொல்ல முடியாது என்று தெரியும்போது, கிருஷ்ணர் பாண்டவர்களின் அர்ஜுனனை நூறு அம்புகள் எய்து அவரைத் தரையோடு தரையாகப் படுத்துவிடச் செய்யச்சொல்கிறார்.

இவ்வாறு, கிருஷ்ணர் வலுக்கட்டாயமாக பீஷ்மரை சமூகப் பார்வையிலிருந்தே ஒதுக்கிவைத்துவிடுகிறார். பீஷ்மருக்குப் பிறகு, கௌரவர்களின் ஆசான் துரோணர் அவர்களை அழைத்துச் செல்கிறார். அவர்தான் பாண்டவர்களுக்கும் குரு. துரோணர் வர்ண தர்மத்தை மீறியவர் என்பதால் அவரைக் கொன்றுவிட கிருஷ்ணர் தூண்டுகிறார். ஆசாரியர்களின் குலத்தில் பிறந்திருந்தாலும், அவர் போர்வீரர் போல நடந்துகொண்டு, தன் மகனுக்கு திரௌபதனின் நாட்டில் ஒரு பகுதியைப் பிரித்து ஒரு நாட்டையே உருவாக்கி மன்னனாக முடிசூட்டுகிறான். ஒரு குருவாக, தன் மாணவர்களுக்குப் போர் குறித்த எல்லா தகவல்களையும் கற்றுக்கொடுக்கிறாரே தவிர, சமாதானத்தைப் பற்றி எதுவும்

கற்பிப்பதில்லை. சொத்தைக் கைப்பற்றச் சொல்லித் தருகிறாரே தவிர, சொத்தைப் பகிர்ந்துகொள்வதைப் பற்றி அல்ல. அவர் பொருள் பற்றி எல்லாவற்றையும் கற்றுத் தருகிறாரே தவிர, ஆன்மிகம் பற்றி எதுவும் சொல்லித் தருவதில்லை.



சூர்தாஸ் உட்பட அஷ்ட சாப் கவிஞர்கள் ஸ்ரீநாத்ஜியைப் பாடுகிறார்கள்.



மேல்பத்தூர் நாராயண பட்டத்திரி எழுதிய நாராயணீயம் குருவாயூரில் பாடப்படுகிறது.



ஹரிதாசர்கள் இயற்றிய பாடல்கள் சென்னகேசவருக்குப் பாடப்படுகிறது.



துக்காராம் பாடல்கள் விட்டலனைப் புகழ்ந்து பாடப்படுகின்றன.

நாத் த்வாரா, ராஜஸ்தான்; குருவாயூர், கேரளா: பந்தர்பூர், மகாராஷ்டிரா, உடுப்பி, கர்நாடகம் ஆகிய இடங்களில் கிருஷ்ணர் கோயில்கள் உள்ளன.

அதனால், கிருஷ்ணர் பாண்டவர்களின் யுதிஷ்டிரரிடம், அசுவத்தாமா இறந்துவிட்டான் என்று ஓர் அப்பட்டமான பொய் சொல்லச் சொல்கிறார்.

நீ அசுவத்தாமா என்ற யானையைக் குறிப்பிடுவாய். ஆனால் அவரோ தன் மகன் அசுவத்தாமன் என்று நினைப்பார். மனமுடைந்து போய் அவர் சண்டையிடுவதை நிறுத்திவிடுவார். 'அவர் சண்டையை நிறுத்தும்போது, திரௌபதியின் சகோதரன் திருஷ்டாத்யும்னன் வந்து, பாஞ்சால நாட்டை அவர் பாதி எடுத்துக்கொண்டது போல, அவர் தலையை உடலிலிருந்து பிரித்து எடுத்துவிடுவான்' என்கிறார் கிருஷ்ணர்.

துரோணருக்குப் பிறகு, கர்ணன் தளபதி பொறுப்பை ஏற்றுக்கொள்கிறான். கர்ணனுக்கும் கிருஷ்ணருக்கும் குந்தி பாண்டுவை மணப்பதற்கு முன்பே குந்திக்கு மகனாகப் பிறந்தவன் கர்ணன் என்று தெரியும். எனவே அவன் பாண்டவர்களின் மூத்த சகோதரன். தேரோட்டியாக வளர்க்கப்பட்டவன்.

கர்ணன் பரசுராமரிடமிருந்து எப்படியோ வில்வித்தை கற்றுக்கொண்டு, கௌரவர்களிடையே வில்வித்தை வீரன் என்ற பெயர் எடுத்துவிடுகிறான். அவன் தேரோட்டி என்பதால், தன் சுயம்வரத்தில் திரௌபதி அவனைக் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லை. பாண்டவர்கள் அவன் தாழ்ந்த குலத்தவன் என்பதால் அவனைக் கிண்டல் செய்துகொண்டே இருக்கிறார்கள். ஆனால் துரியோதனன் அவனை ஓர் இளவரசன் போல நடத்துகிறான். திரௌபதியின் செயல் பயங்கர விளைவை உண்டாக்கிவிடுகிறது. அவள் ஒரு தேரோட்டியை நிராகரிக்க, தன்னைப் பணயம் வைத்து ஆடும் ஐந்து ஆண்களை அவள் மணப்பதில் முடிகிறது. துரியோதனனின் அன்பு, கர்ணனுக்கு ஆபத்தாகப் போய்விடுகிறது. அவன் நண்பனைத் தேர்ந்தெடுப்பதா, தர்மத்தின் பக்கம் நிற்பதா என்ற தர்மசங்கடத்தில் சிக்கிக்கொள்கிறான். கர்ணன் நண்பன் பக்கம் நிற்கிறான்.

எனவே கடவுள் அவனுக்கு எதிராகத் திரும்புகிறார். போரின் உச்சத்தில் அவனுடைய தேர்ச்சக்கரம் பூமியில் சிக்கிக்கொண்டுவிடுகிறது. சக்கரத்தை உயர்த்த அவன் கீழிறங்கும்போது, கிருஷ்ணர் அர்ஜுனனிடம் ஆயுதமற்ற அப்பாவி கர்ணனைப் பின்னாலிருந்து கொல்லச் சொல்கிறார். அர்ஜுனன் மறுக்க, கிருஷ்ணர் வற்புறுத்துகிறார். திரௌபதியை அவமதித்த, தர்மத்தைவிட நட்பு பெரிது என்று சொல்பவன் தர்மத்தின் பாதுகாப்பைப் பெறத் தகுதியற்றவன் என்கிறார்.


ஆயுதங்கள்.
ஆயுதங்கள்.
இடையனின் கோல்.
கொம்பு.
இடையனாக, தேரோட்டியாக, போர்வீரனாக, கிருஷ்ணர்.
ஆயுதங்கள்.

பீஷ்மர், துரோணர், கர்ணன் மூவருமே பரசுராமரின் சீடர்கள். ஒவ்வொருவருக்கும் தர்மத்தை நிலை நாட்ட, போர் பயிற்சி அளித்திருக்கிறார். ஆனால் திரௌபதி சபையில் மானபங்கப்படுத்தப்படும்போது, மூவருமே மௌனமாக இருக்கிறார்கள். வருத்தத்தோடு என்றாலும், பாண்டவர்களுக்கு எதிராக கௌரவர்களுக்கு சாதகமாக ஒவ்வொருவரும் அதை நியாயப்படுத்துகிறார்கள். அவர்கள் கடைசியில் நெறிமுறைகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்களே தவிர, அதன் உள்ளார்ந்த தர்மத்தின் பொருளைப் பற்றி அல்ல. இறுதியில் அவர்கள் சமூகத்தில் ஏற்படவிருக்கும் பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், தங்கள் இயலாமையைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அதனால்தான், விஷ்ணு கிருஷ்ணராக இருந்து தன் சீடர்களையே கொல்லக் காரணமாயிருக்கிறார்.

பாண்டவர்களின் பீமன், ஒவ்வொரு கௌரவராகக் கொல்லப்படும்போது, கிருஷ்ணர் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். திரௌபதியைத் துகிலுரித்த துரியோதனனின் சகோதரன் துச்சாதனனின் ரத்தத்தை பீமன் பருகுவதை அவர் பார்க்கிறார். துச்சாதனன் திரௌபதியின் அவிழ்ந்த கூந்தலைப் பிடித்து இழுத்து வந்த கோரமான காட்சியை நினைத்துப் பார்க்கிறார். பீமன் திரௌபதியின் கேசத்தைக் கழுவுவதைப் பார்க்கிறார்.

துச்சாதனனின் ரத்தத்தால் திரௌபதி தன் கூந்தலை முடிந்துகொள்வதைப் பார்க்கிறார். ஆக, பதின்மூன்று வருடங்களுக்கு முன் சூதாட்ட சபையில் எடுத்த சபதத்தை முடிக்கிறாள்.

துரியோதனனைக் கொல்வது எளிதாக இல்லாதபோது, எதிரியின் இடுப்புக்குக் கீழே தாக்கலாகாது என்ற போர்க்கால நீதியை கிருஷ்ணர் உடைக்கச் சொல்கிறார். பீமன் துரியோதனனின் இடுப்புக்குக் கீழே தாக்கி, அவன் தொடைகளைப் பிளக்கிறான்.


கங்கைக் கரைப் பகுதிகளில், கிருஷ்ணரும் ராதையும் வழிபடப்படுகிறார்கள்.
ராதை என்பவள் நாடோடிக் கதைகள் மூலம் உருவாக்கப்பட்டவள். தமிழ் நாட்டில் அவளை நப்பின்னை என்கிறார்கள்.
12ஆம் நூற்றாண்டில் ஜெயதேவர் சம்ஸ்கிருதத்தில் கீதகோவிந்தம் எழுதிய பிறகு ராதை எல்லோராலும் அறியப்படுகிறாள்.
நவீன காலத்தில் கிருஷ்ணரும் ராதையும் புகழ் அடைந்தபோதும், பாரம்பரிய கோயில்களில் ராதை காணப்படுவதில்லை. (முந்தைய பக்கங்களைப் பார்க்கவும்.)

நூறாவது கௌரவரும் கொல்லப்பட்டபிறகு, பாண்டவர்கள் வென்றவர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். இப்போது அவர்கள் தாங்கள் கட்டிய நாடான இந்த்ரப்ரஸ்தத்துக்கு மட்டுமல்ல, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அவர்களுடைய முன்னோர்களின் ஹஸ்தினா புரத்துக்கும்தான் அரசர்கள்.

ஆனால் வெற்றிக்கு விலை உண்டு. பதினெட்டு நாட்கள் நடந்த போருக்குப் பிறகு, துரோணரின் மகன் அசுவத்தாமன், பாண்டவர்களின் முகாமை இரவில் தாக்குகிறான். திரௌபதியின் ஐந்து குழந்தைகளையும் பாண்டவர்கள் என்று எண்ணிக் கொல்கிறான். கடவுளாக கிருஷ்ணருக்கு இப்படி நடக்கும் என்று தெரியும் என்றாலும் அவர் அதை நிறுத்தவில்லை. தர்மத்துக்காகப் போர் செய்தாலும், எந்தப் போருக்கும் என்ன பின்விளைவு என்பதைப் பாண்டவர்கள் அறிய வேண்டும் என்பதற்காக இருக்கலாம்.

இறுதியில், கிருஷ்ணர் கௌரவர்களின் தாய் காந்தாரியையும், பாண்டவர்களின் மனைவி திரௌபதியையும் சமாதனம் செய்ய வேண்டியிருக்கிறது.

இருவருமே தங்கள் குழந்தைகளை இழந்துவிட்டார்கள்.

காந்தாரி கிருஷ்ணரையும் அவர் குடும்பத்தையும் சபிக்கிறாள். கிருஷ்ணர் அதை அனுமதிக்கிறார். அந்தக் கோபத்தில், காந்தாரியின் உள்ளத்தில் இருந்த வெறுப்பெல்லாம் வெள்ளமாகப் பெருகி வெளியேற, அவள் உள்ளம் பழையபடி பரிசுத்தமாக ஆகிவிடுகிறது. காந்தாரி பின்னர் அடக்க முடியாமல் அழுகிறாள். பழி வாங்கலுக்கும் நீதிக்கும் ஒரு விலை உண்டு என்பதை அவள் உணர்கிறாள். கிருஷ்ணர் அவள் வலியை உணர, அவளை இறுக அணைத்துக்கொள்கிறார்.

கிருஷ்ணர் திரௌபதியின் வலியையும் உணர்கிறார். அவளுடைய அவமதிப்புக்கு அந்தப் போர் மூலம் அவள் பழிதீர்த்துக்கொண்டுவிட்டாலும், அவளுடைய ஐந்து குழந்தைகளையும் அவள் இழந்திருக்கிறாள். பழிவாங்கலும், நீதியும் ஒரு விலைக்குத்தான் கிடைக்கும்

என்பதை அவள் உணர்கிறாள். கிருஷ்ணர் எல்லாவற்றையும் மறந்துவிடச் சொல்கிறார். அது சிரமமானது. அவளைக் கைகளில் தாங்கிக்கொண்டு அவளுக்கு ஆறுதல் சொல்கிறார். வாழ்க்கை கடினமானது என்பதோடு, மக்கள் எல்லோரும் மிகச் சரியானவர்கள் அல்ல. இந்த உலகின் போக்குக்கு ஏற்ப செல்ல முடியாமல், ஒவ்வொருவரும் தவறு செய்கிறார்கள். உண்மையான அன்பு என்பது பிறரிடம் தவறுகள் இருந்தாலும் அவர்களை நேசிப்பதுதான்.

**மகாபாரதத்தின்** இறுதி அத்தியாயத்தில், கௌரவர்கள் சொர்க்கத்தில் இருக்கிறார்கள் என்று அறிந்த யுதிஷ்டிரர் மனம் நொந்துகொள்கிறார். 'இத்தனை கஷ்டங்களுக்குக் காரணமான அவர்களுக்கு, எவ்வாறு சொர்க்கத்தில் இடம் கொடுக்கலாம்?' என்று கேட்கிறார். 'நீ அவர்களைப் போரில் கொன்றாய். அவர்கள் நாட்டை ஆண்டாய். இன்னுமா உனக்கு அவர்கள் மீது வெறுப்பு? உலகத்தையே துறந்தேன் என்றாய் என்றாலும் அவர்கள் மீதான சினம் தீரவில்லை. உனக்கு சொர்க்கத்தில் இடம் எப்படிக் கிடைக்கும்?' என்று கிருஷ்ணர் கேட்கிறார்.

ஹிந்து உலகில், எல்லாமே கடவுள்தான். எல்லாமே. கௌரவர்கள்கூட. இந்த உலகில் இருக்கும் எல்லாமே கிருஷ்ணரின் பாகங்கள்தாம். எனவே எல்லாவற்றையுமே நேசிக்கலாம். அவை நேசிக்கத் தகுந்தவை. கிருஷ்ணரை முழுதாக உணர்ந்தவர்கள், கௌரவர்களை வெறுக்கமாட்டார்கள்.

அவரால் ஒருவரையும் வெறுக்க இயலாது. கௌரவர்களின் தவறுக்காக அவர்களைத் தண்டித்தாலும், கிருஷ்ணர் அவர்களை வெறுத்து ஒதுக்கவில்லை. அவருடைய அன்பு எளியவர்களுக்கும், கொடூரமானவர்களுக்கும், ஒழுங்கற்றவர்களுக்கும் இடம் கொடுக்கும். இதுதான் தர்மம்.

நாம் அன்பு செலுத்துவதை நிறுத்திவிடும்போது, நாம் அதர்மத்தை அணைத்துக்கொள்கிறோம். நாம் முடிவெடுத்து, பழி சொல்லி, மக்களைத் தள்ளி விடுகிறோம். வெறுப்பினால் அவர்களைத்

தகுதியற்றவர்கள் ஆக்குகிறோம். தாராளமாக இருக்க மறுக்கிறோம். கௌரவர்களைப் போல, நாம் கீழ்த் தரமாக, தாழ்ந்து போய், எல்லாம் நமக்கே என்று நடந்துகொள்கிறோம். அல்லது பாண்டவர்களைப் போல, நாம் வழி தெரியாமல், குழப்பம் அடைந்து எப்படிச் செல்வது என்று புத்தியில்லாமல் போய்விடுகிறோம். மதுவனத்துக்குப் போகும் வழி நமக்குத் தெரியவில்லை. நாம் குருக்ஷேத்ரத்துக்குள்ளேயே அடைந்து கிடக்கிறோம்.

பூமி நமக்காக அழுகிறது. நாம் நேசிக்க இயலாத போது, ஆதிக்கம் செலுத்த விழையும்போது, ஞானம் இன்றி இருக்கும்போது, நாம் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கும் பொன்னான வாய்ப்பை இழந்து, பிறர் வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கவும், பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் மகிழ்ச்சியைக் கண்டுபிடிக்கவும் தவிக்கிறோம். அதனால்தான், பூமிப் பசு விஷ்ணுவின் முன் நின்று தன் குழந்தைகளைக் காபாற்ற வேண்டும்போது கிருஷ்ணரின் கதை தொடருகிறது, கடவுள் கேட்கிறார். மாடு மேய்ப்பவர் தேரோட்டியாகிறார். அவர் பகவத் கீதை மூலம் எல்லோரையும் ஒழுங்காக இருக்கச் செய்கிறார். அந்த வரிகள் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. சந்தர்ப்பங்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாமல் இருக்குமாறு தடுக்கிறது. உலகில் எந்தப் போலியான எதிர்பார்ப்புகளையும் தவிர்க்கிறது. அதனால் பரிசுத்தமான இதயம் ஆதிக்கத்தை வேண்டுவதை விடுத்து, அன்பைத் தழுவுகிறது. நாம் வாழ்க்கையில் பங்குகொள்கிறோம். அதைக் கட்டுப்படுத்த அல்ல. அதை ரசிக்க.

மகாபாரதத்தின் தேரோட்டி கிருஷ்ணர், ருக்மிணியின் தலைவர், நம் புத்திக்கு வேண்டுகோள்கள் விடுக்கிறார். சிக்கலான கட்டங்களில் உதவுகிறார். நம் உலகத்தை மாற்றுகிறார். நாம் மதுவனத்துக்குச் செல்ல உதவுகிறார்.

பாகவதத்தின் கிருஷ்ணரை அங்கே காண்கிறோம். அவர் ராதையின் தலைவர். நம் மனத்துக்குப் பிடித்தவர். கொண்டாட்டத்தை நமக்குள் தூண்டிவிடுகிறார். உணர்ச்சிகள் தூண்டப்பட்டு, இதயம் அன்பால் துடிக்கையில், மூளை ஞானத்தால் நிறைந்திருக்கும் போது, நாம் அப்பாவி போல அவருடைய இசைக்கு அடிமையாகி,

மஹா ராஸ லீலையில் நம் இடத்தைப் பிடித்துக்கொள்கிறோம்.

# 7
# கல்கியின் ரகசியம்
## எல்லாம் மறைய அனுமதியுங்கள்






19ஆம் நூற்றாண்டு வங்காள காலிகாட் ஓவியம்.

மகாபாரதக் கதையைப் பெற்றோர் குழந்தைகளுக்குச் சொல்லும்போது, கிருஷ்ணரின் மூத்த சகோதரர் பலராமர், போரில் பங்கேற்க மறுப்பதைச்

சொல்லவில்லை. கிருஷ்ணர் பாண்டவர்களுக்குப் போரில் வெற்றி வாங்கித் தருகிற போது, பலராமர் அந்த கோரத்தைப் பார்க்க சகிக்காமல் புண்ணிய யாத்திரை கிளம்பிப் போய்விடுகிறார்.

சில புராணங்களில், பலராமர் விஷ்ணு படுத்திருக்கும் நாகத்தின் அவதாரம் என்கிறார்கள். வேறு சில புராணங்களில், குறிப்பாகத் தென்னிந்திய புராணங்களில், அவர் விஷ்ணுவின் அவதாரமாகவே கருதப்படுகிறார். பத்து அவதாரங்களில் ஒன்பதாவதாக எண்ணப்படுகிறார். அவர் கலப்பையைக் கையில் பிடித்திருப்பது போல் வைத்திருக்க, கிருஷ்ணர் மாடுகள் மேய்க்கும் கோலை வைத்திருப்பதாகக் காண்பிக்கப்படுகிறது. ஆதி காலத்து இந்தியாவில், இந்த இரண்டு கடவுள்களும் அடிப்படையான பொருளியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்ததையும், பின்னர் அதுவே தீவிர அடையாளங்களாக முக்கியத்துவம் பெற்றதையும், ஒன்றை ஒன்று சார்ந்து இருந்ததையும் எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிடுவதுண்டு.

கிருஷ்ணர் மூலமாக, விஷ்ணு உலக விஷயங்களில் ஈடுபட்டிருப்பதைக் காண்பிக்கும்போது, பலராமர் மூலமாக விஷ்ணு ஆன்மிக வாழ்க்கையைக் காண்பிக்கிறார். முதலாவது ப்ரவிர்த்தி மார்க்கம் என்றால், பின்னது நிவர்த்தி மார்க்கம். கிருஷ்ணரின் மூத்த சகோதரர் பலராமர் என்றாலும், அவதாரங்களைப் பொறுத்தவரை, அவர் கிருஷ்ணருக்குப் பிறகுதான் வருகிறார். விஷ்ணுவின் புராணத்தில், பலராமரின் அணுகுமுறை, கிருஷ்ணரின் அணுகுமுறையைப் போல ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இல்லை என்ற பொருள் தொக்கி நிற்கிறது.

பலராமர் தன் தம்பியைப் போல புத்திசாலித்தனமான அரசியல் நிபுணரோ, காதல் வசப்படும் வாலிபரோ அல்ல. ஒரிசாவிலுள்ள பூரி கோயிலில் கிருஷ்ணர் ஜகன்னாதராக-உலகின் தலைவராக-வழிபடப்படுகிறார். பக்கத்திலேயே தங்கை சுபத்ரா மற்றும் மூத்த சகோதரர் பலராமர். வழக்கமான புராணங்களில் வரும் கதையில் பலராமர் ரேவதியைத் திருமணம் செய்துகொண்டார் என்றும் அவர்களுக்கு வத்சலா என்று ஒரு குழந்தை இருந்ததாகவும் பூரி கோயில் வரலாற்றில் சொல்லப்படுகிறது. பலராமர்

சிவபெருமானைப் போல் சன்னியாசியாகக் கருதப்படுகிறார். பாங்க் என்ற போதைப் பொருளை அருந்தியவராக, பெண்கள் அருகில் இருப்பதையே விரும்பாதவராகச் சித்திரிக்கப்படுகிறார். இப்படி பெண்களிடமிருந்து ஒதுங்கியிருப்பது பொருள் சார்ந்த எதிலும் பற்று இல்லாதவராக அவரைக் காண்பிக்கிறது. தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கிருஷ்ணர் பாண்டவர்களோடு சேர்ந்து போராட, பலராமர் அதைக் கண்டுகொள்வதே இல்லை. அவர் பாட்டுக்குப் புண்ணிய யாத்திரை போய், எல்லாம் எப்படியோ போகட்டும் என்று விட்டுவிடுகிறார். ஆக, பலராமர் சிவபெருமான் போல், கிருஷ்ணரை அடுத்த ஒன்பதாவது அவதாரமாக இருந்தாலும், உலகின் முடிவை முன் கூட்டியே ஆரம்பித்துவைக்கிறார்.




ஜகன்னாதர், சகோதரர் பலபத்ரர் மற்றும் சகோதரி சுபத்ரா பொம்மைகள்.

தேவர்களையும் அசுரர்களையும் சமமாக பாவிக்கும் சிவபெருமானைப் போல, பலராமரும் பாண்டவர்களோடு, கௌரவர்களையும் ஆதரிக்கிறார். கதாயுதத்தால் போரிட, பீமனுக்கும் துரியோதனனுக்கும் கற்றுக்கொடுக்கிறார்.

கிருஷ்ணர் பாண்டவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, சமநிலையைக் கடைப்பிடிக்க, பீமனைவிட்டுவிட்டு துரியோதனன் பக்கம் நிற்கிறார். தன்னுடைய புனிதப் பயணம் முடிந்து திரும்பி வந்ததும், பீமன் கதாயுதத்தால் போர்விதிக்குப் புறம்பாக துரியோதனனின் தொடையைப் பிளந்து கொன்றுவிட்டான் என்று அறிந்துகொள்கிறார். கோபத்தில் தன் கையிலுள்ள கலப்பையை உயர்த்தி பீமனைக் கொல்ல முற்படுகிறார். ஆனால் கிருஷ்ணர் தம் மூத்த சகோதரரைத் தடுத்து, போர் முடிந்துவிட்டது என்றும், தர்மத்துக்காகச் சில வேளைகளில் விதிமுறைகளை மீற வேண்டியிருக்கும் என்கிறார். பலகீனமானவர்களைப் பாதுகாக்கத்தான் விதிமுறைகள் இருக்கின்றன. துரியோதனன் விதிகளைத் தவறாகக் கையாண்டு, ஆதரவற்ற திரெளபதியைக் கொடுமைப்படுத்தினான் என்பதால், நெறிமுறைகளின் கீழ் அவன் பாதுகாப்புக் கோர முடியாது என்கிறார். கிருஷ்ணரின் வாதத்தில் பொருள் இருப்பதை உணர்ந்து, உயர்த்திய கலப்பையைக் கீழே தாழ்த்துகிறார் பலராமர்.

பலராமர் பாசம் மிக்க கடவுள். அவருக்கு எளிதில் கோபம் வந்துவிடுவது போலவே, எளிதாக மறைந்தும் விடும். அவர் மிக எளியவர். இவை எல்லாமே சிவபெருமானின் அம்சங்கள். அவரால் கிருஷ்ணரின் மாயாஜாலங்களைப் புரிந்துகொள்ள முடியாது. கிருஷ்ணரின் சிக்கலான வா த த் தை , பகவத் கீதையில் சொல்லப்பட்டிருப்பதை, போரை நியாயப்படுத்தியிருப்பதை, புரிந்துகொள்ள முடியாது. சொத்து என்ற அம்சத்தையே அவர் புரிந்துகொள்வ தில்லை. அவரைப் பொறுத்தவரை, ஞானம் என்பது சொத்துக்களை மொத்தமாக நிராகரிப்பதுதான்.




கிருஷ்ணரும், சிவபெருமானும் தாங்கள் அறியப்பட்ட வடிவில்




கிருஷ்ணரின் மரணம்-ஓவியம்.

ஆனால் பலராமர் கிருஷ்ணரை நம்புகிறார். தன் தம்பியின் சொற்களில் ஞானம் இருக்கிறது என்று அவருக்குத் தெரியும். ஒருவேளை சொத்துக்களை வைத்துக்கொண்டு, இன்னொரு வகையாகவும் வாழலாம். சொத்துக்கள் மீது கூடுதலாக ஆசை வளரவிடாமலும் வாழலாம். இது எப்படி சாத்தியம் என்றால், ஆசையை வைத்துக்கொண்டு, அந்த ஆசையுடனே வாழ்ந்து அதை அடக்கி அதன் அடிவேரையே அறுத்துவிடுவதுதான்.

மகாபாரதத்தில், குருக்ஷேத்திரப் போர் முடிவில் கௌரவர்களின் தாயான காந்தாரி கிருஷ்ணரை சபிக்கிறாள். கிருஷ்ணர் தர்மத்தை நிலை நாட்ட உதவியிருந்தாலும், அவளுடைய நூறு குழந்தைகளில் ஒருவரைக்கூட உயிரோடு விட்டுவைக்காமல், ஒரு தாயின் இதயத்தை நொறுக்கியிருக்கிறார்.

கிருஷ்ணரின் மகன்களும் பேரன்களும் உறவினர்களும் கொல்லப்படுவதையும் அவருடைய நகரம் அழிவதையும் கிருஷ்ணர் பார்க்க வேண்டும் என்று காந்தாரி சாபம்

இடுகிறாள்.

முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின் அந்த சாபம் நிறைவேறுகிறது. கிருஷ்ணரும் பலராமரும் அவர்களுடைய சந்ததி முழுதும், குருக்ஷேத்திரத்தில் யார் செய்தது சரி, யார் செய்தது தவறு என்ற தேவையற்ற விவாதத்தில் சிக்கி அழிவதைப் பார்க்கிறார்கள். இதற்குப் பின்னர், பலராமருக்கு வாழவே விருப்பம் இல்லாது போய்விடுகிறது. அவருடைய உயிர் அவர் வாய் வழியே ஒரு பாம்பு வடிவில் வெளியேறிவிடுகிறது. பலராமரின் மறைவுக்குப் பிறகு, கிருஷ்ணரும் மாண்டுபோகிறார். ஒரு வேடன் அவர் கால் கட்டைவிரலை ஒரு மானின் கொம்பு என்று எண்ணி, விஷம் தோய்ந்த அம்பை எய்துவிடுகிறான்.

கிருஷ்ணரின் இடது பாதத்தின் அடியில் அந்த விஷ அம்பு தைத்துவிடுகிறது. வழக்கமாகப் புல்லாங்குழல் ஊதும்போது, கிருஷ்ணர் இடது காலை ஊன்றி, வலது காலை அப்படி இப்படி அசைப்பார். இது சிவபெருமானின் வழக்கத்துக்கு மாறுபட்டது: சிவபெருமான் வலது காலில் நின்று, இடது காலை அசைப்பார். இடது கால் பொருளாசையைக் காண்பிக்கிறது; ஏனென்றால் இடது பக்கம்தான் இதயம் இருக்கிறது. வலது கால் ஆன்மிகத்தை காண்பிக்கிறது. அதற்கு அசைவில்லை. அமைதியாய் இருக்கிறது. பொருளுக்கு நேர் எதிர். கிருஷ்ணர் உறுதியாக இடது காலில் நிற்கிறார். ஆனால் வலது காலை உறுதியாகத் தரையில் வைத்திருக்கிறார், ஆன்மிகத்துக்கும் இடம் இருக்கிறது என்பதைக் காண்பிக்க. மாறாக, சிவபெருமான் தன் உடல் பாரம் முழுதையும் வலது பாதத்தில் வைத்து சமன் செய்து நிற்கிறார், தன் விருப்பம் முழுதும் ஆன்மிக உண்மை பக்கம் மட்டுமே என்றுகாண்பிக்க. அதனால்தான் சிவனை ஏக பாதன் என்கிறோம். ஒரு காலில் நிற்கும் சிவபெருமான் என்கிறோம்.




புத்தரின் கலம்காரி ஓவியம்.




புத்தரின் மைசூர் ஓவியம்.

மரணத்தின்போது, கிருஷ்ணர் வழக்கத்துக்கு மாறாக வலது காலுக்கு மேலாக இடது காலை அசைக்கிறார். எனவே அவருடைய இடது கால் பாதத்தின் அடிப்பகுதி தெரிகிறது. கிருஷ்ணராக அவர் வாழ்ந்த காலம் முடிவுக்கு வந்த பிறகு, விஷ்ணு இடது கால் பிர்திபலிக்கும் பிரவிர்த்தி மார்க்கத்தை விட்டுவிட்டு, வலது கால் பிரதிபலிக்கும் நிவ்ரித்தி மார்க்கத்தைக் காண்பிக்கிறார். அவர் முன்பு எடுத்த அவதாரங்கள் எல்லாம் துவாபர யுகம் முடிவுக்கு வருவதால் மெல்ல மறைய, உலகின் இறுதி யுகமான கலி யுகம் ஆரம்பமாகிறது.

விஷ்ணுவின் பத்து அவதாரங்களின் பட்டியலில், ஒன்பதாவது அவதாரம் புத்தர் என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. பலராமர் அவதாரம் என்று அல்ல. சில ஹிந்து புராணங்கள், மிருகங்கள் மீது கருணை கொண்டு பிராணிகள் பலியைத் தடுக்கவும், அகிம்சையையும், காய்கறி உணவை உட்கொள்ளுவதை வளர்க்கவும் விஷ்ணு புத்தராக அவதரித்தார் என்று சொல்கின்றன. வேத நெறி முறைகளைப் பின்பற்றுவதிலிருந்து மக்களை வேறு வழிக்குத் திருப்பி அவர்களை வரவிருக்கும் அழிவை ஏற்கத் தயார் செய்வதற்காகவே புத்தராக விஷ்ணு அவதரித்தார் என்றும் சொல்கிறார்கள்.

புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்த இரண்டு வாதங்களையும் ஏற்பதில்லை. ஹிந்து மதத்தின் ஓர் அங்கம்தான் புத்த மதம் என்று சொல்வதற்காகவே சில ஹிந்து மத பிரசாரகர்கள் இப்படி எல்லாம் கதை சொல்கிறார்கள் என்கின்றனர். ஆனால் சரித்திர பூர்வமாகப் பார்த்தால், விஷ்ணுவின் அவதாரமாக புத்தரைக் குறிப்பிடுவது அரசியல் நோக்குடையது என்றாலும், தத்துவ ரீதியாகப் பார்க்கையில், புத்தர் அவதாரம் உலகு அதன் முடிவை நெருங்கிவிட்டதன் அடையாளம் என்று சொல்லலாம்.

கல்கி, குதிரை உடலுடன், கிரேக்க கடவுள் மாதிரி.



குதிரை இந்தியவைச் சேர்ந்த மிருகம் அல்ல. மத்திய ஆசிய நாடுகளில் இருந்து தொடர்ந்து வரவழைக்கப்படுபவை. இந்தியாவில் மார்வார், கத்தியவார் போன்ற வடமேற்கு பகுதிகளில் மட்டுமே வளர்க்கப்படுகின்றன.



கல்கி குதிரையின் மீது சவாரி செய்கிறார்.

கையில் வாள் இல்லையென்றால், ஹயக்ரீவர் என்று தவறாகப் புரிந்துகொள்வார்கள்.



குதிரை முகத்துடன் கல்கி.

மைசூர் ஓவியத்தில் கல்கியின் மூன்று வடிவங்கள்.

ரிக் வேதத்தில், ஆசைதான் எல்லா படைப்புகளுக்கும் வேராக இருக்கிறது எனக் கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றால், ஆன்மிக உண்மை, அதாவது நாராயணா என்பது தன்னைத் தானே உணர்வது. பிரம்மா விஷ்ணுவின் தாமரையிலிருந்து தோன்றி, பிரம்மாண்டமான பிரம்மாவின் உலகம் உருவாயிற்று. ஆகவே, காமம் அல்லது ஆசை மிகப் பெரிய உந்து சக்தி. ஆனால் புத்த மத புராணங்களின்படி, காமம் என்பது ஆசைகளின் அரக்கன். அவனே எல்லா துன்பங்களுக்கும் காரணம். துன்பங்களிலிருந்து ஒருவன் விடுதலை பெற வேண்டும் என்றால், ஆசைகளிலிருந்து விடுபட வேண்டும். இது நடந்தால், எல்லா செயல்களும் நின்றுபோய்விடும்; வாழ்க்கை மேலே செல்லாமல் ஒரு முடிவுக்கு வந்துவிடும். இது மடாலய ரீதியான பாதை, நிவிர்த்தி மார்க்கத்தைச் சேர்ந்தது. இதைத்தான் பௌத்தர்கள் நிர்வாணா என்கிறார்கள். ஹிந்துக்களின் மோக்ஷம், பிறப்பு-இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை எல்லாம் இதுதான்.

ஆசை இல்லாதபோது, நாராயணா விழித்துக்கொள்ளாது என்பதோடு, சிவபெருமான் தன் கண்களைத் திறந்து பிரகிருதியின் அழகைப் பார்க்க மாட்டார். தேவி அங்கீகரிக்கப்படாமலே போய்விடுவாள். மாயை இருக்காது. பிரும்மாண்டம் இருக்காது. உண்மை இருக்காது. இயற்கையை மனிதன் உணர மாட்டான். மனித உள்ளுணர்வு விழித்துக்கொள்ளாது. பௌருஷம் எனப்படும் ஆண்மை இல்லாத பிரக்ருதி அல்லது இயற்கை மட்டுமே இருக்கும். இதைத் தான் அழிவு என்று வர்ணிக்கிறார்கள்.

புத்தரும் அல்லது பலராமரும் அமைதியாக உலகிலிருந்து ஒதுங்கியிருப்பது அதன் அழிவைக் காட்டுகிறது. கல்கி உலகின் தீவிர அழிவுக்குப் பிரதி நிதியாக இருக்கிறார். அவர்தான் விஷ்ணுவின் பத்தாவது, கடைசி அவதாரம். வெள்ளைக் குதிரையில் பளீரிடும் வாளுடன் தோன்றும் வீரனாகத் தோன்றுவார்.


பரசுராமர்; ஆயுதம் ஏந்திய குரு.
ராமர்: தன் நாட்டையும், மனைவியையும் விட்டுவிடுகிறவர்.
கிருஷ்ணர்: ஞானத்தைக் கொண்டுவரும் இடையன், தேரோட்டி.
துறவறம் பூண்ட புத்தர்.
இறுதியாகப் போர்வீரர், அழிப்பவர், காப்பவர், கல்கி.

விஷ்ணுவின் ஐந்து மனித அவதாரங்களின் செம்பு விக்ரகங்கள்.

மத்திய ஆசியாவிலிருந்து அயல் நாட்டு ஊடுருவல் காரர்கள் இந்தியாவுக்கு வந்து அவர்கள் கை ஓங்கியபோது ஹிந்து புராணங்களில் கல்கியின் கதை வெளியாகத் தொடங்குகிறது. இவர்கள் ஹன்ஸ் மற்றும் மொங்கோல் என்ற கொடுமையான, கொடூரமான பழங்குடியினர். அவர்களின் வன்முறைக்கு இந்தக் கதை தெளிவான பதிலாக அமைந்தது. இப்படி ஊடுருவியவர்கள் பழைய வாழ்க்கை முறையையே அழித்து புதிதாக ஒன்றைத் திணித்தார்கள். விஷ்ணு, கல்கியாக அவதரித்து, இந்தப் புதிய முறைகளை அழித்து, பின்னர் பழைய வாழ்க்கை முறையைக் கொண்டு வருவார் என்று நம்பப்பட்டது. ஜூடாயிசம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் ஆகியவற்றில் இருப்பது போல கல்கி ஒரு தூதராகச் சிந்தனைகளைத் தூண்டுவார். அவர்தான் விடிவு தருவார். அவர்தான் காப்பாளர் என்ற நம்பிக்கை தூண்டப்பட்டது.

இந்தியாவில் ஏராளமான நாடோடிக்கதைகளின் நாயகர்கள் கல்கி போலவே வாளைக் கையில் ஏந்தி, குதிரையில் வந்திருக்கிறார்கள். நாடோடிக் கதை கற்பனையில் அப்படி வருபவர் கடவுள் மாதிரி. ஆனால் புராணங்களில் அவர்தான் உலகின் சுழற்சியை நிறுத்துபவர். அப்போதுதான் புதிய உலகம் தோன்றும்.

பௌத்த மதத்தினருக்கும் இதே போன்ற எண்ணம் இருந்தது. வருங்கால போதிசத்வர், பளபளக்கும் வாளுடன் மஞ்சுஸ்ரீ வருவார் என்றனர். திபேத்திய புத்த பரம்பரையில், இந்த மஞ்சுஸ்ரீக்கு யமந்தகன் என்று பெயர். ஹிந்து கலாசாரத்தில் யமந்தகன் என்றால் சிவபெருமானைக் குறிக்கும். இறப்பை அழிப்பவன் என்று பொருள். எனவே, கல்கி மரணம் உட்பட எல்லாவற்றையும் அழித்துவிடுவார். அவர் எல்லா கட்டுமானங்களையும் அழித்து ஒன்றும் இல்லாமல் செய்துவிடுவார். வேறு வகையில் சொல்வதானால், பிரளயத்துக்கு வழிவகுப்பார்.

பொருளியல் உண்மை நிரந்தரமானதல்ல. அது மாற வேண்டும். அது மறைந்து மீண்டும் பிறக்க வேண்டும். எனவே எதற்கெல்லாம் உருவமும் பெயரும் இருக்கிறதோ

அதெல்லாம் கடைசியில் உதிர்ந்து மறைந்துவிடும். விஷ்ணு புராணத்தில் இந்த இயற்கை மாற்றங்கள் எல்லாம் எப்போதோ நடைபெறுவதல்ல. அவை முறையானவை. முன்பே ஊகித்துச் சொல்லக்கூடியவை. அவை யுகம் அல்லது காலம் என்ற உருவம் எடுக்கின்றன.




கிருஷ்ணர் பிருந்தாவனத்தை விட்டுப் புறப்படுகையில் அழும் கோபியர்கள்




ஒரிசாவிலுள்ள பூரியில் ரத யாத்திரை-புகைப்படம்.

எப்படி எல்லா உயிரினங்களும் குழந்தைபிராயம், இளமை, முதிர்ச்சி, முதுமை என்று நான்கு நிலைகளைக் கடக்கின்றனவோ, அப்படித்தான் உலகமும். கிருதயுகம் உலகின் குழந்தைப் பருவம். திரேதா யுகம் இளமைப்பருவம். துவாபர யுகம் முதிர்ச்சி அடைந்த பருவம். கலி முதுமைப் பருவம். பரசுராமர் கிருத யுகத்தின் முடிவை ஆரம்பித்துவைக்கிறார். ராமர் திரேதா யுகத்தின் முடிவை. கிருஷ்ணர் துவாபர யுகத்தின் முடிவை.

கல்கி கலி யுகத்தின் முடிவை. பிரளயம் என்பது மரணம். மறுபிறவிக்குமுன் நிகழும் மரணம். விஷ்ணு உறங்கப்போகும்போது பிரளயம் வருகிறது. அதுதான் நாராயண நிலை. பிரளயம் என்பது அனந்தன் சேஷனாக மாறும்போது நிகழ்வது. எது முடிவற்றதோ அது பூஜ்யமாகிறது. யோக் மாயா யோக நித்ரா ஆகிறாள்.

எனவே விஷ்ணு உலகின் முடிவை அங்கீகரிக்கிறார்.

அதில் பங்கும் கொள்கிறார். பரசுராமராக, ராமராக மற்றும் கிருஷ்ணராக அவர் காலத்தின் கோரப் பாய்ச்சலிலும் தர்மத்தைக் காக்க முயலும்போது, பலராமராகவும் இறுதியில் கல்கியாகவும் அவர் உலகம் அழிவதற்கு அனுமதிக்கிறார். இதுதான் ஞானம். எப்போது செயல்பட வேண்டும், எப்போது விலகியிருக்க வேண்டும், எப்போது போரிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று உணர்ந்து வயது தன் கடமையைச் செய்ய அனுமதிக்க வேண்டும்.

முடிவு என்ற கருத்து ராமாயணம், மகாபாரதம் மற்றும் பாகவதம் ஆகிய இந்தியாவின் மூன்று புராணங்களில் தொடர்ந்து வருகிறது. ராமாயணத்தின் இறுதியில், சீதை மீண்டும் பூமிக்குள்ளே திரும்பச் செல்ல, ராமர் சரயு நதியில் மூழ்க, இருவருமே மீண்டு வருவதில்லை. மகாபாரதத்தின் முடிவில், பாண்டவர்கள் தங்கள் நாட்டைத் துறந்துவிட்டு, சொர்க்கத்தை நாடி மலைகள் பக்கமாக நடந்து சென்று மரணத்தைச் சந்திக்கிறார்கள். பாகவதத்தில், கிருஷ்ணர் மாடு மேய்ப்பவர் வசிக்கும் பிருந்தாவன் கிராமத்தைவிட்டுவிட்டு, தன் நகரமான மதுராவுக்குச் தேரில் செல்கிறார். அவர் ஒரு தேரில் செல்கிறார்.



காதல் கடவுள் காமன்,
ஐம்புலன்களையும் தூண்டிவிட
அம்பு எய்கிறான்.

காமனின் சிற்றோவியம்.



மரணக் கடவுள் யமன் எருதின்
மீது வந்து எல்லா உயிர்களையும்
பிடிக்கிறான்.

கம்போடிய சிற்பம்-யமன்.




விஷ்ணுவின் பனாரஸ் மரச்சிற்பம்.

தேரோட்டியின் பெயர் அக்ரூரர். குரூரம் அற்றவர். கோபியர்கள் கிருஷ்ணரைப் போக வேண்டாம் என்று கெஞ்சுகின்ற போதும், கிருஷ்ணர் தன் வாழ்வின் அடுத்த கட்டத்துக்குச் செல்கிறார், தன் பெற்றோர், நண்பர்கள், காதலிகள் எல்லோரையும் விட்டுவிட்டு. தேரோட்டி குரூரம் அற்றவர் என்கிறபோது, காலத்தின் ஓட்டத்தை யாரும் குற்றம் சொல்லக்கூடாது என்ற செய்தி தெரிவிக்கப்படுகிறது. அன்புடனும் பாசத்துடனும் கிருஷ்ணரை வளர்த்த யசோதை, அவர் அவளைவிட்டுவிட்டு மதுராவுக்குச் செல்வதைப் பார்த்துக்கொண்டிருப்பதை நாம் எல்லாவற்றையுமே அதனதன் போக்கில் போக விட்டுவிட வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது.

ஒருவிதத்தில் பார்த்தால், அக்ரூரர்தான் யமன். மரணக்

கடவுள். புராணங்களில் அவரைப் பற்றற்றவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யமன் நமக்குள் பயத்தை உண்டாக்குகிறார். ஆனால் யமன் என்னவோ அச்சுறுத்துவதில்லை. அவருக்கு அப்படிப்பட்ட உணர்ச்சிகள் எல்லாம் எதுவும் கிடையாது.

பொருளியல் உண்மையிலிருந்து ஆன்மிக உண்மையைப் பிரிப்பது போல அவர் பாட்டுக்குத் தன் கடமையைச் செய்கிறார். தாயின் கருப்பையிலிருந்து துவங்கும் பயணம், யமன் வந்ததும் முடிந்து போகிறது. தாயின் கருப்பையில், காதல் கடவுள் காரணமாக, பொருளியல் உண்மை பொதிந்து வைக்கப்பட்டாலும், ஆன்மிக உண்மையோடு அது தொடர்புகொள்கிறது. ஆனால் யமன் வரும் சமயம், பொதிந்து வைக்கப்பட்ட பொருளியல் உண்மை திறக்கப்பட்டு, ஆன்மிக உண்மை விடுவிக்கப்படுகிறது.

காமன், யமன் இருவருமே விஷ்ணுவின் வடிவங்கள்தாம். பிறப்பு-இறப்பு-பிறப்பு என்ற சக்கரம் சுழலத் தத்தம் கடமையைச் செய்பவர்கள். காமன் வாழ்வு என்னும் விளக்கை ஏற்றுகிறான். யமன் மரணம் என்னும் விளக்கை ஏற்றுகிறான். காமன் இறப்பு என்பது நிரந்தரமானதல்ல என்பதை உறுதிசெய்துகொள்கிறார். யமன் வாழ்க்கை நிரந்தரமல்ல என்பதை உறுதி செய்கிறார். காமனுக்கும், யமனுக்கும் கோயில்கள் எதுவும் கட்டப்படவில்லை என்றாலும், காமன் கரும்பு வில்லை வைத்துக்கொண்டு கிளியின் மீது பயணம் செய்வது போல, யமன் எருமை மீது பயணம் செய்து, ஒரு கணக்குப் புத்தகத்தையோ, கொடியையோ, பாசக் கயிற்றையோ கையோடு கொண்டு வருகிறார். காமன் உணர்ச்சிகளைத் தூண்டிவிட, பிரம்மா மாயாவின் சக்திக்கு அடங்கிப்போகிறார். யமன் எல்லாச் செயல்களையும் எடுத்துக்கொண்டு, கர்மா என்ற கணக்குப் புத்தகத்தைச் சரியாகப் பராமரிக்கிறார்.




தென்னிந்திய ஓவியம் கல்கி.

காமன் மற்றும் யமனின் அறிகுறிகள் விஷ்ணுவிடம் காணப்படுகின்றன. விஷ்ணு தன் கரங்களில் நான்கு

அடையாளங்களை வைத்திருக்கிறார். சங்கு, சக்ரம், கதை மற்றும் தாமரைப்பூ. சங்கு தொடர்புக்கு. சக்ரம் காலத்தைக் குறிக்க. கதாயுதம் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று வற்புறுத்த.

தாமரை, மகிழ்ச்சியின் அமுதத்தைச் சுட்டிக்காட்ட. சங்கும் தாமரையும் தண்ணீரில் இருப்பவை. அவை வாழ்க்கையையும் காதலையும் சொல்கின்றன. அதனால் காமத்துடன் தொடர்புள்ளவை. சக்ரமும் கதாயுதமும் நெருப்பின் அடையாளங்கள். அவை இயற்கையின் தாள லயத்தையும், கலாசாரத்தின் நெறிமுறைகளையும் காண்பிப்பதால், அவை யமனோடு தொடர்புள்ளவை. காமன்-யமன் இருவருமாகச் சேர்ந்து வாழ்க்கையை அமைக்கிறார்கள். ஆக, காமன்-யமன் இருவரும் இணைந்து விஷ்ணுவாகிறார்கள்.

ஹிந்து புராணங்களில் அதிகம் தெரியப்படாத ஒரு பாத்திரம் வடவாக்னி. கடலின் மேற்புறத்தில் நின்றுகொண்டு நெருப்பை உமிழும் பெண் குதிரை. இந்த நீர்மூழ்கிப் பெண்குதிரை, கடல் நீர் ஆவியாகப் போய்ப் பனியாக மாறவும், கடல் ஒருபோதும் கரையைத் தாண்டாமலும் பார்த்துக் கொள்கிறது. பிரளயத்தின்போது, வேதாக்னி இந்தக் கடமையைச் செய்யாது என்பதால், கடல் பொங்கி எழுந்து நிலத்தை மூழ்கடித்துவிடும். பெண் குதிரையின் வாயிலிருந்து வெளிப்படும் நெருப்பு, எரிமலையாக வெடிக்கும். ஆக, எல்லாமே தீயாலும், நீராலும் அழிக்கப்பட்டுவிடும்.

இந்த நெருப்புக் கக்கும் பெண்குதிரையின் தோற்றம் சுவாரசியமானது. ஒரு கதையின்படி, காதல் கடவுள் காமன், சிவபெருமானின் மனத்தில் காமத்தைத் தூண்டிவிட முயல்கிறார். சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்து காமனைத் தூண்டுபவனை எரித்துவிடுகிறார். ஆனால் காமம் இல்லாமல், உலகம் இயங்காது. எனவே சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பை விஷ்ணு பிடித்து, அதை ஒரு பெண்குதிரையாக மாற்றி, கடலுக்கு அடியில் ஒளித்துவைத்துவிடுகிறார்.




ஒரிசா பட்டா ஓவியம்-குதிரை முகத்துடன் ஹயக்ரீவர், அவர் மனைவி லக்ஷ்மி.

ஹிந்து மதத்தில், இந்திய பிராணி அல்லாத போதும், ரிக் வேத காலத்திலிருந்தே குதிரைக்கு மிகுந்த மரியாதை உண்டு. அது இந்திய பூமியில் குஜராத், ராஜஸ்தான் தவிர

வேறு எங்கும் அதிக அளவு வசிப்பதில்லை. குதிரை வடமேற்குப் பகுதியிலிருந்து வணிகர்களுடனும், ஊடுருவல்காரர்களுடனும் வந்ததால், விஷ்ணுவின் குதிரை மீது அமர்ந்திருக்கும் கல்கி வடிவம், ஒரு கால கட்டத்தில் இந்தியாவுக்குள் நுழைந்த போர்வீரர்களுடன் இணைத்துப் பேசப்படுகிறது.

விஷ்ணு குதிரையை மட்டும் ஓட்டுவதில்லை. அவரே குதிரையாகவும் ஆகிறார். குதிரையின் தலையுடன் ஹயக்ரீவராகக் காட்சியளிக்கும் விஷ்ணுவைத் தென் இந்தியாவில் வழிபடுகிறார்கள். இந்த விஷ்ணுவின் வடிவம் கல்வியுடன் தொடர்புடையது. குதிரையின் தலையிலிருந்து கல்விக் கடவுள் சரசுவதி வெளிப்படுகிறாள்.

வேதகாலப் புராணங்களில் குதிரைத் தலையுடையவர்கள் மூலமாக ஞானம் பரவுவதாகக் கதைகள் இருக்கின்றன. உதாரணமாக, சூரியன் குதிரையின் தலையுடன் ஞான வடிவமாக முனிவர் யாக்யவல்கியரின் முன் தோன்றியிருக்கிறார். ததீச்சி முனிவர் தன் மனித முகத்தை ஒரு குதிரையின் முகமாக மாற்றிக் கொண்டார். அப்போதுதான் வேத ஞானத்தை அசுவினி சகோதரர்களுடன் அவரால் பகிர்ந்துகொள்ள முடிந்தது.

இந்த வேத ஞானம் என்றால் என்ன? வேத ஞானம் என்பது பொருளியலையும் கடந்து வாழ்க்கையில் உணர்வுபூர்வமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என்பதுதான். இயற்கையின் கட்டுப்பாடுகளிலிருந்து நம்மை விடுவிப்பது ஞானம்தான். பிரகிருதியிடமிருந்து மனிதன் விடுதலை பெற்று, புருஷார்த்தத்தை அறிய இது உதவுகிறது. பிரகிருதி என்பது நம்மை மறைந்து போகிறவர்களாக, பரபரப்பானவர்களாக, மாற்றுகிறது என்றால், புருஷம் நம்மை நிலையானவர்களாகவும், அமைதியானவர்களாகவும் ஆக்குகிறது. பிரம்மாவிலிருந்து தொடங்கி பிரம்மன் வரையிலான பயணம், முடிவிலிருந்து முடிவற்றதற்கு இட்டுச் செல்கிறது என்பதுதான் ஹயக்ரீவர் பாடல்.


பரமாத்மாவாக விஷ்ணு. எல்லோருக்கும் முக்தி அளிப்பவர்.
கருடன் பரமாத்மா-ஜீவாத்மாவுக்கு இடையே நம்பிக்கை உண்டாக்குபவர்.
இன்பங்கள் நிறைந்த பொருளியல் உலகைக் குறிக்கும் தாமரை.
முதலை பொருளியல் உலகில் உள்ள பற்றைக் காட்டுகிறது. அது வலி தருவது.
நிர்க்கதியான மனிதகுலத்தைக் காக்க முடியாத குட்டியானை.
கஜேந்திரன் ஜீவாத்மா பொருளியலில் சிக்கிக்கொண்டதையும் விடுபடத் தவிப்பதையும் காண்பிக்கிறது.

கஜேந்திரன் என்ற யானைக்கு விஷ்ணு விடுதலை அளிக்கிறார் மைசூர் ஓவியம்.

பிரம்மா பிறந்தபோது, அவர் வெளிப்படுத்திய முதல் உணர்வு, அறிய வேண்டும் என்ற குறுகுறுப்பு. தான் யார், எதற்காக வந்தார்? இந்தக் குறுகுறுப்பு பின்னர் பயத்தை விளைவித்தது. ஏனென்றால் அவருக்கு ஒரு விடையும் கிடைக்கவில்லை. இந்தப் பயம் மிருகங்களிடம் நமக்கு உண்டாகும் பயம் போன்றதல்ல. மிருகங்கள் பற்றாக்குறையைக் கண்டு பயப்படும். தமக்கு முந்தைய பயங்கரப் படைப்புகளைக் கண்டு பயப்படும். ஆனால் இவை எல்லாம் உண்மையான பயங்கள். மனித பயம் என்பது கற்பனையிலிருந்து வருவது. கற்பனையான பற்றாக்குறை, கற்பனையான பயங்கரப் படைப்புகள்: எல்லாவற்றுக்கும் மேலாக, தான் எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறோம் என்ற கற்பனைக் கவலை. இந்த சுய மதிப்பு, தன்னிடமிருக்கும் பொருளை அடிப்படையாகக் கொண்டது. தான் யார் என்பதைவிட, தன்னிடம் என்ன இருக்கிறது என்பதைப் பொறுத்தது. அதிகச் செல்வம் வைத்திருப்பது, அடுத்தவர்களைவிட அதிக அதிகாரம் மற்றும் அதிகம் தெரிந்து வைத்திருப்பது என்பதைப் பொறுத்து ஒருவரின் மதிப்பு உயர்கிறது.

சொத்து என்பது நேரில் பார்க்கும் உண்மை அல்ல, ஆனாலும் உண்மைக்கு உட்பட்டது என்று ஹயக்ரீவர் நம் கவனத்துக்குக் கொண்டுவருகிறார்.

அவை எல்லாம் மாயையின் வடிவங்களே, பிரம்மாண்டத்தின் பகுதிகளே. மனிதன் இல்லை என்றால், வைத்துக்கொள்ள சொத்து எதுவும் இருக்காது.

இயற்கைக்கு மனிதன் தேவை இல்லை. மனிதனுக்குத் தான் இயற்கை தேவை. இயற்கையின் எசமானன், இயற்கைச் செல்வத்தின் எசமானன் மனிதனின் பார்வையிலுள்ள மாயைதான்.

நாம் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தி, சொத்தும், நிலபுலனும் சேர்க்கிற போது, மனித மூளை இருந்தும் நாம் இன்னும் மிருகங்கள்தாம், மிருகப் பண்பை வெளிப்படுத்தி

வாழ்கிறோம் என்று ஹயக்ரீவர் நமக்கு நினைவூட்டுகிறார். மிருக குணத்திலிருந்து விடுபட்டு, நம் மனிதத்தன்மையை உணர்வதுதான் வேத ஞானம். அச்சத்திலிருந்து விடுபட்டு நம்பிக்கையைக் காண்பதுதான். அதற்காக, நாம் ஆன்மிக உண்மையான இயற்கையையும் தாண்டிய புருஷத்திடம் சரணாகதி அடைய வேண்டும்.

விஷ்ணு புராணத்தில் கஜேந்திரன் என்ற யானை ராஜா, குட்டி யானைகளுடன் தாமரை பூத்த குளத்தில் விஷ்ணுவைப் பூசை செய்கிறது.

திடீரென்று ஒரு முதலை அதன் காலைப் பிடித்துக் கொண்டு நீருக்கு அடியில் இழுக்கிறது. கஜேந்திரன் முதலையிடமிருந்து தப்பிக்க, நீரை அடித்துத் தள்ளினாலும், முதலை தன் பிடியை விடுவதாக இல்லை. குட்டி யானைகள் கஜேந்திரனை விடுவிக்க முயல்கின்றன. ஆனால் முடியவில்லை. ஆனால் அது ஒரு தாமரைப் பூவைப் பறித்துவைத்துக்கொண்டு, விஷ்ணு வந்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கதறுகிறது. அதற்கு வேறு வழியில்லை.

இந்தக் கதை மனித நிலைமையக் காட்டுகிறது. நாம் எல்லோருமே கஜேந்திரர்கள்தாம். சில வேளைகளில் தேவர்களைப் போல, நாம் பொருளியல் பாதுகாப்பைக் கோருகிறோம். நமக்கு அது கிடைத்தாலும், நாம் பாதுகாப்பற்றுத்தான் இருக்கிறோம். பாதுகாப்பாற்ற தன்மை நம்மை இன்பப் பிரியர்களாக, அல்லது அகந்தை யானவர்களாக மாற்றிவிடுகிறது. இது எந்தப் பணிக்கும் தகுதியற்றவர்களாக ஆக்கிவிடுகிறது. வேறு சமயங்களில், அசுரர்களைப் போல, நாம் பொருளாசை கொள்கிறோம். இதுவே வாழ்க்கைக்கு அர்த்தமாகிவிடுகிறது. பொருளாதாரத்தில் நாம் மேம்படும்போது, நிலைமை தலைகீழாகும் வரை, நமக்கு அகந்தை கூடி, யாரும் நம்மை அசைக்க முடியாது என்று நினைக்கிறோம். சிரமப்படும் போது, நாம் கஜேந்திரனைப் போல முதலையின் பிடியிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறோம். யாரும் நம் உதவிக்கு வருவதில்லை. யாரும் நமக்கு உதவ முடியாது.

நாம் பரபரப்பாகிக் கவலைப்படுகிறோம். இதிலிருந்து

விடுதலை பெற, விஷ்ணுவின் கதைகள், அடையாளங்கள், சடங்குகள் மூலம் அறியும் விஷ்ணுவின் ஞானத்திடம் நாம் சரணடைவதுதான் சிறந்தது.

# நன்றி

நான் இந்தப் புத்தகம் உருவாக உதவியவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்-இவர்களுக்கும் கூட:

- ஆர்.என்.சிங் மற்றும் தர்மேந்திர ராவ், ராம் ஸன்ஸ் காலபிரதிஷ்டனா, மைசூர் இவர்களின் தடையற்ற ஆதரவுக்கு. இந்தப் புத்தகத்திலுள்ள பெரும்பாலான கைவினைப் பொருட்களின் படங்கள் அவர்கள் கொடுத்து உதவியது.
- ஹர்ஷா தஹேஜியா பலராமன், யமன் இவர்களின் உருவப்படங்கள் அளித்ததற்கு.
- ஸ்வப்னில் சக்பல், கலை சார்ந்த வேலைகள் செய்து தந்ததற்கு.